# தமிழரசு

மார்ச், 1-31, 2001. ரூ 10/-




Mapping the Future
Career Avenues
for the Youth

# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2032
மாசி – பங்குனி
மார்ச் 1–31, 2001
மலர் : 32 இதழ் : 17 & 18
விலை ரூ.10


- நாங்குநேரியில் உயர்தொழில்நுட்பப் பூங்கா ---------- 2
- நாங்குநேரி உயர்தொழில்நுட்பப் பூங்கா ஒவ்வொரு தமிழனும் இந்தியனும் பெருமைப்படத்தக்கது ---------- 6
- தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் ---------- 9
- உலகத் தமிழர்களை இணைக்கும் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் ---------- 15
- மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மாநாடு, மதுரை ---------- 19
- உலகளாவிய வாய்ப்புகள் ---------- 24
- கிராம நிருவாக அலுவலர் மாநாடு ---------- 27
- கோவை காவல்துறை ஆணையர் அலுவலகம் திறப்பு விழா ---------- 29
- மீண்டும் சந்திப்போம் ---------- 35
- தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திறப்பு விழா ---------- 48
- மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கிராமப்புற பெண்களை முன்னேற்றும் புரட்சித் திட்டம் ---------- 54
- காயிதே மில்லத்திற்கு சென்னையில் மணிமண்டபம் - 58
- உடுமலை நாராயணகவி மணிமண்டபம் ---------- 63
- சென்னையில் இராமசாமி படையாட்சியார் சிலை – 67
- ஐந்தாண்டில் 354 பாலங்கள் ---------- 70
- பெரியார் பல்கலைக்கழக கட்டடத் திறப்புவிழா ---------- 73
- மகளிர் குழுக்கள் பெரும் வெற்றியைக் குவித்துக் கொண்டிருக்கின்றன ---------- 76

*முதல் பக்க அட்டையில்* **மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மாநாடு, மதுரை**

*இரண்டாம் அட்டையில்* **இளைஞர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகள்**


**திருக்குறள்**

**நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்**
**நாடொறும் நாடு கெடும்.**

ஆட்சியினால் விளையும் நன்மை தீமைகளை நாள்தோறும் ஆராய்ந்து அவற்றிற்குத் தக்கவாறு நடந்து கொள்ளாத அரசு அமைந்த நாடு சீர்குலைந்து போய்விடும்.

- கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

# நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா


□ முதலமைச்சர் கலைஞர்

இன்றைக்கு அடிக்கல், நாங்குநேரியிலே உயர் தொழில்நுட்ப வளாகத்திற்காகவும், அந்த வளாகம் சிறப்புப் பொருளாதார வளாகமாக அமைந்திடும் என்ற நிலையை அறிவிப்பதற்காகவும் நாட்டப்படுகின்றது. இந்த வளாகம் அமைவதற்கு தமிழக அரசும் மற்றவர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போல நாம் முயற்சிகளை மேற்கொண்டோமென்றாலுங்கூட, இதற்கு அடிப்படை முயற்சிகளையெடுத்து ஊக்கம் தந்து, தூண்டுதலாக இருந்து வெற்றிகரமாக இதை நிறைவேற்றித் தந்திருப்பவர் நம்முடைய மத்திய வர்த்தகத் தொழில்துறை அமைச்சர் தம்பி முரசொலி மாறன் என்பதை நான் நன்றிப் பெருக்கோடு இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இப்படியொரு வளாகம் அமைகின்ற செய்தியைக் கேள்விப்பட்டவுடன் எந்த உதவிகள் வேண்டுமானாலும் மத்திய அரசின் சார்பாக செய்கிறோம் என்று உறுதியளித்து, அந்தச் சலுகைகளையும் உதவிகளையும் செய்ய முன் வந்துள்ள இந்தியப் பிரதமர் திரு. அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களுக்கும், மத்திய நிதியமைச்சர் திரு. சின்கா அவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தொழில் நகரங்களை உருவாக்கி தொழில்வளத்தை பெருக்கும் அரசு

தமிழ்நாட்டில் தொழில் துறையைப் பொறுத்த வரையில் இந்த அரசு 96ஆம் ஆண்டு அமைந்த பிறகு ஒவ்வொன்றுக்கும் சில கொள்கைகளை வகுத்துக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. தகவல் தொழில் நுட்பத்திற்கு தனிக் கொள்கை; உயிரியல் தொழில் நுட்பத்திற்கு தனிக் கொள்கை; மின் துறை



வளர்ச்சிக்கென தனிக் கொள்கை; சிறு துறைமுகங்கள் மேம்பாட்டிற்குத் தனிக் கொள்கை; மலர் வளம் பெருக்கிட தனிக் கொள்கை; ஜவுளித் தொழில் வளர்ச்சிக்கு தனிக் கொள்கை; எரி சாம்பல் பயன்பாட்டிற்காகத் தனிக் கொள்கை; தொழில் நகரங்கள் உருவாக்குவதற்குத் தனி நடைமுறை என இப்படி தனித்தனியாக கொள்கைகளை, நடை முறைகளை வகுத்துக் கொண்டு தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்கும் முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கின்றது.

இவைகளோடு வேளாண்மை அடிப்படையிலான உணவு பதப்படுத்தும் தொழில் கொள்கை ஒன்றும், தொழில் வளாகங்கள் அமைப்பதற்கான தனிக் கொள்கை ஒன்றும் வகுக்கப்பட்டு வருகின்றன என்ற செய்தியையும் இங்கே அறிவிக்க நான் விரும்புகிறேன்.

**வேலைவாய்ப்பில் இந்த வட்டாரத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்**


கிருஷ்ணன் அவர்களும், அவரைத் தொடர்ந்து பேசிய ஜெயசீலன் அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். வேலை வாய்ப்பு தருவதாகச் சொல்கிறீர்கள். இலட்சம் பேருக்கோ, 60 ஆயிரம் பேருக்கோ இங்கே வேலை வாய்ப்பு கிடைக்குமென்று இங்கே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த வேலை வாய்ப்புகள் எல்லாம் இந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நிச்சயமாக வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் போது இந்த வட்டாரத்திலே உள்ளவர்களுக்கு இந்த மண்ணுக்குரியவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படும் என்பதை நான் உறுதிபட இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**கல்லூரி - பள்ளிகளில் 1 இலட்சம் பேர் கணினி பயிற்சி பெறுகிறார்கள்**

ஆனால் ஒன்று, இந்த வளாகத்திலே அமைகின்ற தொழில்களுக்கு, நிறுவனங்களுக்கு தகுதியான வகையிலே பயிற்சி பெற்றவர்கள் உருவாக வேண்டும். அதற்காகத் தான் இன்றைக்கு உலகத்திலே விஞ்ஞான உலகத்திலே வளர்ந்து வருகின்ற கணினிக்கு முதலிடம் தந்து, இந்தியாவிலேயே தமிழகத்தில் மிக முக்கியமான இடம் தந்து, வேறு மாநிலங்களிலே இன்றைக்கு கணினி புழக்கத்தில் இருக்கிற தென்றாலுங்கூட, சாப்ட்வேர் போன்ற இந்த தொழில்கள் எல்லாம் அங்கே நடைபெறுகின்றன என்றாலுங்கூட,தமிழ் நாட்டில் மாணவப் பருவத்திலேயே அவர்கள் பள்ளியில் பயிலும்போதே கணினியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஏற்பாட்டைச் செய்து இன்றைக்கு கல்லூரிகளிலும் மேல்நிலைப்பள்ளிகளிலும் கணினிப் பயிற்சி பெறுகின்ற மாணவர்கள் இந்தியாவிலே தமிழ்நாட்டில்தான் ஒரு இலட்சம் பேர் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களைப் போலவே இந்த வட்டாரத்திலே உள்ளவர்களும் ஊக்கம் பெற்று இங்கே அமைகின்ற வளாகத்திலே வேலை பார்க்கக்கூடிய அளவிற்கு தகுதியைப் பெற இப்பொழுதே கணினிப் பயிற்சியைப் பெற வேண்டும் என்றும் நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நான்கைந்து ஆண்டுக் காலத்தில் எவ்வளவு தொழில்கள் இந்தப் பகுதியிலே வந்திருக்கின்றன,



எவ்வளவு வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம் என்பதையெல்லாம் தம்பி ஆலடி அருணா இங்கே சுட்டிக்காட்டினார். தம்பி மாறன் இங்கே உரையாற்றும் போதும் அதையெல்லாம் தெரிவித்தார். தமிழ்நாடு இன்றைக்கு இந்தியாவிலேயே தொழில் துறையிலே முதல் இடத்திலே உள்ளது என்றெல்லாம் சொன்னார்கள்.

கடந்த ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு ஐந்தாவது இடத்திலே இருந்த தமிழ்நாடு இன்றைக்கு முதல் இடத்திற்கு வந்திருக்கிறதென்றால் நாம் எடுத்துக்கொண்ட முயற்சி, இந்த அரசு கையாண்ட வழிமுறைகள்தான் அதற்குக் காரணம் என்பதை யாரும் மறந்திடல் இயலாது.

அவற்றின் காரணமாகத்தான் மிகப்பெரிய தொழிற்சாலைகள், ஹூண்டாய் மோட்டார் கார் தொழிற்சாலை, போர்டு மோட்டார் கார் தொழிற்சாலை, மிட்சுபிஷி லேன்சர் கார் தொழிற்சாலை, செயிண்ட் கோபைன் கண்ணாடித் தொழிற்சாலை போன்ற பிரம்மாண்டமான பல தொழிற்சாலைகள் எல்லாம் இன்றைக்கு தமிழகத்திலே உருவாகியிருக்கின்றன. இதற்குக் காரணம் தமிழ்நாடு அரசு கடைப்பிடிக்கின்ற தொழில் கொள்கை என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குறித்து அமெரிக்க பல்கலைக் கழகம் ஆய்வறிக்கை**

தமிழகத்திலே தொழில் வளர்ச்சியிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அமெரிக்க நாட்டிலே உள்ள பிரசித்தி பெற்ற ஹார்வர்டு பல்கலைக் கழகம் விரிவாக ஆய்வு நடத்தி, அந்த ஆய்வின் மூலமாக பல உண்மைகளை வெளி உலகத்திற்கு எடுத்துரைத் திருக்கின்றார்கள். அவற்றில் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

``Tamil Nadu rated Pro - Reform Oriented State"

அதாவது தமிழகம் சீர்திருத்தத்தை நோக்கி முன்னேற்றத் திசையில் செல்லும் மாநிலம்.

``Tamil Nadu Industrial Policy rated liberal and pragmatic"

தமிழகத்தினுடைய தொழில் கொள்கை தாராளமானது: நடைமுறைக்கு உகந்தது.

"Tamil Nadu's record of resource mobilization is one of the best compared to other States in India"

இந்தியாவின் இதர மாநிலங்களோடு ஒப்பிடும்போது ஆதாரவளங்களைத் திரட்டுவதில் தமிழகம் மிகச் சிறந்த மாநிலம்.

"Success of Tamil Nadu due to

- Relatively better all round infrastructure in the State as against other Indian States.
- Well established Industrial culture /
- Political stability.
- Investor-friendly Policies

தமிழகத்தினுடைய வெற்றிக்குக் காரணம்:

- இந்தியாவில் உள்ள இதர மாநிலங்களைவிட தமிழகத்தில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகள் எல்லா வகையிலும் மிகச் சிறந்தவை என்றும்,
- சிறந்த முறையில் பேணப்படும் தொழில் பண்பாடு என்றும்,
- அரசியல் சிந்தனை உறுதிப்பாடு என்றும்,
- முதலீட்டாளர் நட்புறவுக் கொள்கைகள் என்றும் இவைபோல் பல சிறப்புகள் உள்ளன என்று ஹார்வேர்டு பல்கலைக்கழக ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் அமைகின்ற பிற தொழில் முதலீடுகளும், நாங்குநேரியிலே அமைகின்ற இந்தத் திட்டத்தின் பயன்களும் என்று எடுத்துக் கொண்டால் **1996**–இல் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் பொருளா தாரத்திலே பின்தங்கிய பகுதிகள் எவையெவை என்று பார்த்து குறிப்பாகத் தெற்குப் பகுதி, தென்மாவட்டங்கள் பொருளாதாரத் துறையிலே பின் தங்கியிருக்கின்றன. வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் தான், பொழுது போக்க அல்லது கேளிக்கை போன்ற காரியங்களிலே ஈடுபட இளைஞர்களுக்கு எந்தவிதமான வசதி வாய்ப்பும் இல்லாத அவர்கள் தங்களுடைய பொழுது போக்காக வன்முறைகளிலே ஈடுபடுவது போன்ற நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து அவர்களை யெல்லாம் திசை திருப்ப, நல்வழிக்குத் திருப்ப, பொருளாதாரத் துறையிலே ஏற்றம் காண வேண்டும் இந்தப் பகுதியிலே என்ற எண்ணம் கொண்டு, அதுபற்றி ஒரு ஆய்வு நடத்த வேண்டுமென்று சொல்லி, உச்சநீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதிபதி என்னுடைய அருமை நண்பர் ரெத்தினவேல் பாண்டியன் அவர்களுடைய தலைமையில் ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சீத்தாராமதாஸ், ஏ.வெங்கட்ராமன் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது.

**தென்மாவட்டங்களை மேலும் செம்மைப்படுத்த இந்த அரசு முன்வந்துள்ளது**

அவர்கள் தென் மாவட்டங்களிலே சுற்றுப்பயணம் செய்து, ஒவ்வொரு பகுதியிலும் ஓரிரு நாட்கள் தங்கி விசாரணை நடத்தி பிரமுகர்களையெல்லாம் சந்தித்து என்னென்ன குறை என்று கண்டு, எங்கெங்கே எத்தகைய வளங்களை ஏற்படுத்தலாம் என்பதையெல்லாம் ஆய்ந்தறிந்து தந்த அறிக்கையின் அடிப் படையில் தெற்கு மாவட்டங்களை மேலும் மேலும் செம்மைப்படுத்த, மேம்படுத்த இந்த அரசு முன் வந்திருக்கின்றது.

அண்மையிலே இந்தப் பகுதிக்கு நான் வந்து சென்றதும், இரண்டு மூன்று அணைக்கட்டுக்களைத் திறந்து வைத்ததும் நீங்கள் அறியாத விஷயங்கள் அல்ல. இன்னும் சொல்லப் போனால் நான் அரசியல் பேசுவதாக யாரும் கருதிக் கொள்ளக்கூடாது – தமிழ்நாட்டில் இந்த ஆட்சி இருக்கின்ற நேரங்களில்தான் அணைகள் கட்டப்படுகின்றன. பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே ஒன்றிரண்டு அணைகள் கட்டப்பட்டதுண்டு. ஆனால், இன்றைக்கு நூற்றுக்கணக்கான அணைகள், சிறிய அணைகள், பெரிய அணைகள் என்று இவைகள் எல்லாம் தமிழ்நாட்டில் கட்டப்படுகின்றன என்றால், அது இந்த ஆட்சியிலேதான் என்பதை மாற்றாரும் நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்.

அதைப்போல சாலைகள், கிராமப்புறங்களை நகரப் பகுதிகளோடு இணைக்கின்ற சாலைகள் அமைக்கும் திட்டத்தை நான்தான் தொடங்கினேன். எப்படி யென்றால், முதலில் 1500 மக்கள் வாழும் கிராமங்களையெல்லாம் முக்கியமான சாலைகளோடு இணைப்பது என்று திட்டம் வகுத்து 1500 மக்கள் வாழும் கிராமங்களை முக்கிய சாலைகளோடு முதற்கட்டமாக இணைத்தோம்.

அதற்குப் பிறகு 1000 மக்கள் வாழுகின்ற கிராமங்களையெல்லாம் முக்கியமான சாலைகளோடு இணைப்பது என்று திட்டமிட்டு அந்தத் திட்டத்தையும் ஓரளவிற்கு நிறைவேற்றி முடித்திருக்கிறோம். இப்பொழுது 500 மக்கள் வாழ்கின்ற கிராமங்களை முக்கியமான சாலைகளோடு இணைப்பது என்ற திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதுமாத்திரமல்ல.

**தமிழகத்தில்தான் கிராமங்களுக்கு சிமெண்ட் சாலைகள் போடப்பட்டுள்ளது**

நீங்கள் எங்கு சென்றாலும் கிராமங்களில் கிட்டத்தட்ட முக்கால் பகுதி கிராமங்களில் தார் போட்ட சாலைக்ள், இன்னும் சொல்லப் போனால் சிமெண்ட் சாலைகள் – இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலாவது சிமெண்ட் சாலைகளை, தார்ச் சாலைகளைக் கிராமங்களிலே காண முடியுமா என்று எண்ணிப் பாருங்கள்.

பாலங்கள் என்று எடுத்துக் கொண்டால் நூற்றுக்கணக்கான பாலங்கள். நான் இரண்டு நாட்களுக்கு முன்பு திண்டிவனத்தில் ஒரு ரெயில்வே பாலத்தைத் திறந்து வைத்தேன். அது தமிழ்நாட்டில் இந்த நான்கரை ஆண்டுகளில் நாம் கட்டி முடித்த 345வது பாலம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி எல்லா வகையிலும் மக்களோடு தொடர்பு கொண்ட காரியங்களைச் செய்து கொண்டிருக்கின்ற இந்த அரசு தென்பகுதியிலே வாழ்கின்ற மக்கள் பொருளாதாரத்திலே குன்றிப் போகாமல் மேலும்மேலும் வளர வேண்டும், வேலை வாய்ப்புப் பெற்றுத் திகழ வேண்டும் என்பதற்காகத் தான் இந்தத் திட்டத்தை இன்றைக்கு நாம் தொடங்கியிருக்கிறோம்.

**அடிக்கல்லோடு நிற்காமல் தொழிற்சாலைகளை உருவாக்கிக் காட்டியிருக்கிறது இந்த அரசு**

இந்தத் திட்டம் அடிக்கல் நாட்டப்பட்டாலும் முழுவதுமாக வருவதற்குச் சில நாட்களாகும் என்று தம்பி மாறன் இங்கே குறிப்பிட்டார். நாளைக்குக் காலையிலே மந்திரத்திலே மாங்காய் வருவதைப்போல இந்த வளாகம் தோன்றி விடாது. இரண்டு மூன்று ஆண்டுகளாகும். அப்படி இந்த வளாகம் தோன்றுகின்ற அந்தக் காலத்தை நான் எதிர்பார்க்கிறேன். நீங்களும் அதைக் காணத்தான் போகிறீர்கள். ஏதோ அடிக்கல் நாட்டினார்கள் என்று எண்ணி விடக்கூடாது. அடிக்கல் நாட்டப்பட்டால் உடனடியாக கட்டடம் எழும்பும்; அங்கே தொழிற்சாலைகள் உருவாகும் என்ற இந்தச் சரித்திரத்தை உருவாக்கிக் காட்டியிருப்பது இந்த அரசு தான் என்பதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டில் ஒன்பது மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய அலுவலகங்களுக்கு கட்டடங்கள் கட்டப்பட்டு திறக்கப்பட்டிருக்கிறது. நாளைய தினம் தேனியிலே மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகக் கட்டடத்தை நான் திறந்து வைக்கவிருக்கிறேன். இதையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம் மக்களோடு பின்னிப் பிணைந்திருக்கின்ற அரசு இந்த அரசு, அதனால்தான் மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக தொலைநோக்குத் திட்டங்களை எண்ணிப் பார்க்கிறோம்.

இந்தத் திட்டம் உன்னதமான ஒரு தொலைநோக்குத் திட்டம். மத்திய அமைச்சர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இந்தியாவிலே ஐந்தாறு மாநிலங்களிலே இந்தத் திட்டம் இன்றைக்கு நிறைவேறவுள்ளது. ஐந்தாறு மாநிலங்களுக்கு அதற்கான அனுமதி மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. குஜராத் முந்திக் கொள்ளும் என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால், குஜராத்திலே நாமெல்லாம் எண்ணி வருத்தப்படக்கூடிய அளவிற்கு பூகம்பம் ஏற்பட்ட காரணத்தினால் இந்தத் திட்டத்தை அவர்களால் உடனடியாக அமல்படுத்த முடியவில்லை. நமக்கு அடுத்தபடியாகத் தான் அவர்கள் அமல்படுத்துவார்கள்.

நாம் ஆரம்பித்த இந்தத் திட்டத்தை உடனடியாக முடித்து, இந்தியாவிலே முதன் முதலாக இதன் தொடக்க விழாவினை நடத்தப் போவதும் நாம் தான் என்பதையும், அப்போது உங்களையெல்லாம் நான் சந்திப்பேன் என்ற அந்த மகிழ்ச்சிகரமான செய்தியையும் உங்களுக்குத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

**– நாங்குநேரியில்**
**உயர் தொழில்நுட்பப் பூங்காவிற்கு**
**அடிக்கல் நாட்டி 11-2-2001 அன்று**
**முதலமைச்சர் கலைஞர்**
**ஆற்றிய உரையிலிருந்து...**

# நாங்குநேரி – உயர் தொழில்நுட்பப் பூங்கா ஒவ்வொரு தமிழனும் இந்தியனும் பெருமைப்படத்தக்கதாகும்


மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்
திரு. **முரசொலி மாறன்**

இந்தியாவிலேயே முதன்முதலாக இங்கேதான் சிறப்புப் பொருளாதார வளாகத்தை தொடங்குகிறோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நான் சீனாவுக்கு சென்றிருந்தேன். சீனாவிலே அவர்களுடைய முக்கிய பொருளாதார வளர்ச்சி என்பது இதுபோன்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்தான் என்பதைக் கண்டறிந்தேன். நான் இந்தியா திரும்பி வந்தவுடன் சென்ற ஆண்டு ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையிலே இதை நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

உங்களுக்குத் தெரியும். சென்ற ஆண்டு மார்ச் மாதம் தெரிவித்ததை இந்த ஆண்டு நிறைவேற்றியிருக்கிறோம். சொல்வதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம் என்ற தாரக மந்திரத்திலே வந்தவர்கள் நாங்கள். இதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிய பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும், தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் மத்திய அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலத்திலே நாம் ஏற்றுமதிக்கு எதிரான கொள்கையை எடுத்திருந்தோம். இப்போது அந்த நிலைமை மாறி ஏற்றுமதி செய்தால்தான் நாடு வாழ முடியும்; ஏற்றுமதி செய்தால்தான் நம்முடைய பொருளாதார வாழ்வு உயரும்; வெளிநாட்டு செலாவணி ஈட்ட முடியும், அப்போதுதான் மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். சிங்கப்பூர், மலேசியா மற்றும் கொரியா போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால் அவர்களுடைய வளர்ச்சிக்குக் காரணமே ஏற்றுமதிதான். அந்த ஏற்றுமதியை பெருக்க வேண்டுமென்பதற்காகத் தான் நாம் இந்தக் கொள்கையைக் கடைப்பிடித்து சிறப்பு பொருளாதார வளாகத்தை உருவாக்கி இருக்கிறோம்.

இதில் என்ன சிறப்பு என்றால் சீனாவிற்கு சென்று பார்த்தால்தான் இதன் அருமையை அறிய முடியும். அங்கெல்லாம் இது மாதிரி இரண்டாயிரம் ஏக்கர் அல்ல,




பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் நூற்றுக்கணக்கான நகரங்கள் இவைகளெல்லாம் சேர்ந்து சிறப்புப் பொருளாதார வளாகத்தை உருவாக்கியுள்ளன. அவர்களுடைய ஏற்றுமதியில் நாற்பத்தி ஐந்து சதவிகிதம் அங்கிருந்துதான் ஏற்றுமதியாகிறது.

இங்கே பேசிய கிருஷ்ணன், ஜெயசீலன் போன்றவர்கள் இது பஞ்சப் பகுதி, வறண்ட பகுதி என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட இந்தப் பகுதியில் யார் தொழில் ஆரம்பிக்க வருவார்கள். அவர்களையெல்லாம் கவரக்கூடிய ஒரு மாக்னெட்டாக ஆக்குவதுதான் எங்களுடைய நோக்கம். அதற்காகத்தான் சிறப்புப் பகுதி தனி வரிச்சலுகைகள் கொடுத்திருக்கின்றோம்.

இங்கே தொழில் செய்ய வருபவர்களுக்கு இறக்குமதி வரியே கிடையாது. இன்னும் சொல்லப் போனால் இதை ஒரு அந்நிய பிரதேசமாகவே உருவாக்குகிறோம். எந்தவிதமான வரியும் கிடையாது. அதுமட்டுமல்ல. சென்னையில் டைடல் பூங்கா பார்த்திருப்பீர்கள். இது கலைஞர் அவர்களுடைய மணி மகுடத்தில் ஒரு வைரமாக ஜொலிக்கிறது. சென்னையிலே ஒரு டைடல் பூங்கா; இங்கே நாங்குநேரியில் சிறப்புப் பொருளாதார வளாகத்திலே நூற்றுக்கணக்கான டைடல் பூங்காக்கள் உருவாகும்.

இந்த இரண்டாயிரம் ஏக்கர் வளாகத்திற்குள்ளேயே ஒரு பெரிய விமான நிலையம் அமைய இருக்கிறது. பெரிய, பெரிய போயிங் விமானங்களெல்லாம் வந்து இறங்கலாம். அப்படிப்பட்ட விமான நிலையம் அமைய இருக்கிறது. இங்கே உற்பத்தியாகிற பொருட்களெல்லாம் உடனுக்குடன் ஏற்றுமதியாக வேண்டும். இங்கிருந்து தூத்துக்குடி துறைமுகத்திற்குச் செல்ல வேண்டும் அல்லது இங்கு அமையவிருக்கிற விமான நிலையத்திலிருந்து அனுப்ப வேண்டும்.



**சீனாவின் வளர்ச்சிக்கு மாநில சுயாட்சியே காரணம்**

மேலும் இந்த வளாகத்தின் கட்டுமான பணிகளுக்கு மட்டுமே நான்காயிரம் முதல் ஐயாயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். எனவே இதற்கு மேலும் சலுகைகள் வழங்க வேண்டுமென்று பிரதமர் அவர்களிடமும் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா அவர்களையும் சந்தித்து பேசியிருக்கிறேன். விரைவிலே இந்தத் திட்டங்கள் அத்தனையும் அறிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

உங்களுக்கு ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இதுவரைக்கும் இதுபோன்றவற்றிற்கு நம்முடைய மாநில அரசை கலந்து கொள்வதே கிடையாது. மத்திய அரசு ஒரு காட்டுராஜா. ஆனால் சீனாவில் மாநில அரசுகளுக்கெல்லாம் மாநில சுயாட்சி கொடுத்திருக்கிறார்கள். சீனாவின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் அங்கே மாநிலங்களுக்கெல்லாம் மாநில சுயாட்சி

கொடுத்திருக்கிறார்கள். இறக்குமதியிலே மாநிலங்களுக்கு தனி அக்கறை உண்டு. இங்கே தமிழ்நாடு இருக்கிறது. பக்கத்திலே கேரளா, ஆந்திரா, கர்நாடகா இருக்கிறது. இந்த நான்கும் எவ்வளவு பெரிய மாநிலங்கள் தமிழ்நாட்டில் ஆறு கோடி மக்கள் இருக்கிறார்கள்.

ஆந்திராவில் கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஆறுகள் எல்லாம் இருக்கின்றன. ஆனால் இத்தனை மாநிலங்களையும்விட சிறிய ஊசி முனை மாதிரி உள்ள இலங்கை அதிக ஏற்றுமதி செய்கிறதே ஏன் ? தமிழ்நாட்டில் முடியாது; ஆந்திராவில் முடியாது; கர்நாடகாவால் முடியவில்லை. இங்கே விட இலங்கையில் அதிகமாக உற்பத்தி செய்து அதிகமாக ஏற்றுமதி செய்கிறதென்றால் என்ன காரணம் ?

அதே மாதிரி பங்களாதேஷில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்தியாவிலே பணக்கார மாநிலங்களாக மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்கள் இருக்கின்றன. ஆனால் பக்கத்திலே உள்ள பாகிஸ்தானுக்கு ஏற்றுமதியில் நாம் ஈடு கொடுக்க முடியவில்லை.

**மாநில அரசுகளைப் பயன்படுத்தாவிடில்**
**ஏற்றுமதிகளை நாம் பெருக்க முடியாது**

இது ஏன் ? மாநில அரசுகளை நாம் பயன்படுத்திக் கொள்வதில்லை. ஏற்றுமதி செய்யும்பொழுது விற்பனை வரி போடுகிறோம். எனவேதான் ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையை ஆராயும்போது மாநிலங்களுக்கு நிச்சயமாக பங்கு தரப்படும் என்று நான் சொன்னேன். அவர்களையும் எங்களது பங்காளிகளாக நடத்துவோம் என்று சொன்னேன். அதற்குப் பிறகுதான் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள். இந்த இடம் மாநில அரசுக்கு சொந்தம். இந்தத் திட்டம் அமெரிக்காவுடன் கூட்டுத் திட்டம். எனவே மாநில அரசுகளை பங்காளிகளாக சேர்க்காவிட்டால் நிச்சயமாக ஏற்றுமதியை பெருக்க முடியாது.

எனவேதான் அடுத்த நிதியாண்டிலிருந்து மாநிலங்களுக்கு பங்குத் தொகை அவர்களுக்கு வந்து சேரும். I am happy to announce that the scheme is now a reality and the actual fund - flows to the state government may begin from the next financial year என்பதை இங்கே அறிவிப்பதற்கு மாநில சுயாட்சி மாணவன் என்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இந்தியாவிலே முதல் தடவையாக நடைபெறப் போகிறது.

இதே மாதிரி சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உத்திர பிரதேசம், ஒரிசா, குஜராத், மகாராஷ்டிரா, மேற்கு வங்கம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் அமையவிருக்கிறது. கடற்கரை உள்ள மாநிலங்களில்தான் இவை அமையவிருக்கின்றன. ஆனால், கடற் பகுதியே இல்லாத உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் அமைய இருக்கின்றன.

இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் இங்கே உருவாகுமேயானால் தெற்குச் சீமையே மாறிவிடும். இந்த மண்டலத்தில் ஒரு வாசல்தான் இருக்கும். ஒவ்வொரு ஜாதிக்கு ஒரு வாசல் இருக்காது. எல்லோரும் ஒரே வாசல் வழியாகத் தான் வரவேண்டும். எல்லோரும் ஒரே கேண்டினில் உட்கார்ந்துதான் சாப்பிட வேண்டும். இதைவிட ஒரு சமுதாயப் புரட்சி வேறு என்ன வேண்டும் ?

எனவே, சிறப்புப் பொருளாதார மண்டலம் இந்த தெற்கு தமிழ்நாட்டையே கலக்கப் போகிறது. இதில் வேலை செய்வதில்தான் பல பேருக்கு கண்ணோட்டம் இருக்குமே தவிர வன்முறையில் ஈடுபட நேரம் இருக்காது. எனவே, கத்தியை தீட்டமாட்டார்கள். புத்தியைத்தான் தீட்டுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒரு இலட்சம் பேருக்கு இங்கே**
**வேலைவாய்ப்பு கிடைக்கும்**

இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பல ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு. கரிகால் சோழனுக்கு ஒரு கல்லணை, நரசிம்ம பல்லவனுக்கு மாமல்லபுரத்து சிற்பங்கள், தஞ்சை இராஜராஜனுக்கு தஞ்சை பெரிய கோவில், திருமலை நாயக்கருக்கு ஒரு மகால். அது போல சிறப்புப் பொருளாதார வளாகம் கலைஞர் ஆட்சிக்கு ஒரு அழியாத சின்னமாக மாறிவிடும்.

இந்தத் திட்டம் நாளைக்கே நிறைவேறிவிடாது. இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகலாம், மேலும், தூத்துக்குடி துறைமுகத்தில் விரிவாக்கம் நடைபெறுகிறது. குளச்சல் துறைமுகம் மலேசிய நாட்டுடன் சேர்ந்து பெரிய துறைமுகமாக மாறப் போகிறது.

அதுமட்டுமல்ல. பழைய காயலில் குதிரை மொழி தேரியில் மணலில் இருந்து ஆயிரத்து ஐநூறு கோடி ரூபாயில் டைட்டானியம் டயாக்ஸைடு தொழிற்சாலை. சேதுசமுத்திர திட்டம் உருவாகப் போகிறது. சுற்றுச்சூழல் அனுமதி கிடைத்து விட்டது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் நிறைவேறியதும் தென்கிழக்கு ஆசியாவின் நுழைவு வாயிலாக இது அமையும். இது ஒவ்வொரு தமிழனும் பெருமைப்பட வேண்டிய விஷயம்; இந்தியாவிலுள்ள ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்பட வேண்டிய விஷயம்.

எனவே, இந்தத் திட்டம் நிறைவேற டிட்கோ நிறுவனத்தாரும், அமெரிக்க நிறுவனமும் விரைந்து பணியாற்றுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா அடிக்கல் நாட்டு விழாவில் மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு.முரசொலி மாறன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...**

# தியாகசீலர் கக்கன் மணிமண்டப திறப்பு விழா

இன்று காலையில் இரண்டு மிகப்பெரிய நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். நேற்று முதல் நாள் நாங்குநேரியிலும், நேற்றைய தினம் தேனியிலுமாக இரண்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பல்லாயிரக்கணக்கான மக்களைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்று இன்று இரண்டு நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன்.


திருவாதவூரில் தந்தை பெரியார் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நூறாவது சமத்துவ புரத்தைத் திறந்துவைத்துள்ளேன். இப்போது இங்கே தும்பைப்பட்டியில் தியாக சீலர் கக்கன் பெயரால் அமைந்துள்ள மணிமண்டபத்தைத் திறந்து வைத்திருக்கிறேன்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளைப் பற்றியும் சில கருத்துக்களை உங்கள் முன்னால் எடுத்து வைப்பதை என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

சாதி, சமய வேறுபாடுகள் நீங்கிட வேண்டும்; சச்சரவுகள் அகன்றிட வேண்டும்; அனைவரும் சமம் என்ற உணர்வோடு வாழ்ந்திட வேண்டும்; சமத்துவச் சிந்தனைகள், சமதர்மச் சிந்தனைகள் பெருகி தமிழகம் முழுவதும் சமத்துவபுரமாகக் காட்சியளிக்க வேண்டும்! ஏன், இந்தியாவே சமத்துவபுரமாக ஆக வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கத்தோடு இந்த ஆட்சியில் 97–ஆம் ஆண்டு பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கும் திட்டங்களை அறிமுகப்படுத்தி முதல் சமத்துவபுரம் எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், இதே மதுரை மாவட்டத்தில் தொடங்கப்பட்டு இன்றைக்கு நூறாவது சமத்துவபுரமும், இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

**150 சமத்துவபுரங்களைக் கட்டிமுடிக்க வேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள்**

150 சமத்துவபுரங்களைக் கட்டி முடிக்க வேண்டும் என்பது எங்களுடைய குறிக்கோள். அதிலே இதுவரையில் 100 சமத்துவபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள சமத்துவபுரங்களை இந்த ஆட்சியில் வெகு விரைவிலே கட்டி முடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. சமத்துவபுரம்



எதற்காக அமைக்கப்படுகின்றன என்றால், இதிலே தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கை, அனுபவரீதியாக தியாக சீலர் கக்கன் அவர்கள் கண்ட நிலை இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் சமத்துவபுரங்களை அமைக்க வேண்டும் என்று நான் முடிவுக்கு வந்து, தமிழகத்திலே 100வது சமத்துவபுரத்தை இன்றைக்கு நான் திறந்து வைத்திருக்கின்றேன்.

சாதிச் சண்டைகள், மதப் பிணக்குகள், மத நல்லிணக்கத்திற்கு விரோதமான காரியங்கள், மனித நேயத்திற்கு பகையான நிகழ்வுகள் நாட்டில் நடைபெறாமல் இருக்க இந்த சமத்துவபுரங்கள் உதவிடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களை இங்கே குடியமர்த்துகின்ற காரணத்தால் சாதி அறவே ஒழிந்து விடுமா? சாதி பேதம் அகன்று விடுமா? என்று சிலர் கேட்பது என்னுடைய காதுகளில் விழாமல் இல்லை. ஆலயப் பிரவேசம் ஒரு கோயிலிலே செய்தால், சாதி வேறுபாடு ஒழியும் என்று அன்றைக்கு இருந்தவர்கள் எல்லாம் எப்படி கருதினார்களோ, அதைப்போலத்தான் நானும் கருதுகிறேன்.


சுப்பிரமணிய பாரதியார், கனகலிங்கம் என்ற ஒரு ஆதிதிராவிட சிறுவனுக்கு பூணூல் போட்டால், எப்படி சாதி பேதம், சாதி ஆணவம் ஒழியும் என்று கருதினாரோ, அதன் மூலமாக சாதிகள் எல்லாம் ஒழிந்து விடவில்லை என்றாலும் அது ஒரு அடையாளம்!

**சமத்துவபுரங்களில் காணப்படும் புதுமை**

அந்த உணர்வை இப்படி விதைத்து வைத்தால் – தொலை நோக்கோடு, இன்றில்லாவிட்டாலும் நாளை, நாளை தவறினால் மறுநாள் அல்லது என்றாவது ஒரு நாள் அந்த எண்ணம் நிறைவேறியே தீரும் என்கின்ற அந்த எதிர்பார்ப்போடு தான் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்றுதான் சமத்துவத்தை, சமதர்மத்தை நிலை நாட்டுவதற் காக, சாதி இரண்டொழிய வேறில்லை என்ற நம்முடைய முன்னோர் வார்த்தையை நிறைவேற்றுவதற்காக இந்த சமத்துவபுரங்கள் இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த சமத்துவபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் மோகன் குறிப்பிட்டதைப் போல, ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஒரு புதுமையை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அதிகாரிகள் இன்றைக்கு கையாண்டு வருகிறார்கள். அதில் ஒன்றுதான் இங்கே சாதியின் பெயரால் தெருக்கள் கூட கிடையாது.

காரித்தெரு, காரி என்ற பழந்தமிழ் மன்னருடைய பெயரால் காரித் தெரு, பாரி என்ற கடையேழு வள்ளல்களில் ஒருவராகத் திகழ்ந்த பழம்பெரும்



மன்னனுடைய பெயரால் பாரி தெரு. அதைப்போல வல்வில் ஓரி என்கின்ற வில் வித்தையிலே ஈடு இணையற்று விளங்கிய ஓரியின் பெயரால் – ஓரித் தெரு, அதியமான் தெரு, பேகன் தெரு, நல்லி தெரு, ஆய் அண்டிரன் தெரு என்ற நம்முடைய பழைய தமிழ்ச் சான்றோர்கள் பெயரால், தமிழ் மன்னர்களுடைய பெயரால் இங்கே தெருக்களுக்கு எல்லாம் பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன.

**மத்திய அரசால் பாராட்டப்பட்டு - பின்பற்றப்பட்ட தமிழக அரசின் திட்டம்**

இந்த நூறு வீடுகளிலும் ஒரே சமுதாயத்திற்காக வீடு கட்டிக் கொடுத்தோம் என்றாகி விடும். அந்தத் திட்டத்தையும் எனது அரசு 1972–73ஆம் ஆண்டு தொடங்கி, ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பட்டியல் இனத்து மக்களுக்கு இலவசமாக கான்கிரீட் வீடுகளைக் கட்டித்தரும் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாக தொடங்கிய அரசு நமது அரசு. கான்கிரீட் வீடுகள் இலவசமாக ஆதிதிராவிடர்களுக்கு அன்றைக்கு கட்டித் தரப்பட்டன.

அதற்குப் பிறகு தான் மத்திய சர்க்கார் அந்தத் திட்டத்தை வியந்து பாராட்டி, இதை இந்தியா முழுவதும் பரப்பிட வேண்டும் என்று திட்டமிட்டு, அதற்கான தொகையை ஒதுக்கி அந்தக் காரியத்தை மத்திய சர்க்கார் செய்யத் தொடங்கினார்கள். அந்தக்குடியிருப்புகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக கட்டப்படுகின்ற குடியிருப்புகளுக்கு ''இந்திரா காந்தி வீட்டு வசதித் திட்டம்'' என்ற பெயரால் அந்தத் திட்டம் இப்போது நடைபெறுகிறது என்றால், அதற்கு அடி எடுத்துக் கொடுத்தவர்கள், அதற்கு ஆரம்பம் செய்தவர்கள், அதை அறிமுகப்படுத்தியவர்கள் நாம்தான் என்ற பெருமை – எந்தப் பெயரில் நமக்கு இருந்தாலும் அந்தப் பெருமை உண்டு.

இன்றைக்கு கிட்டத்தட்ட தொகுப்பு வீடுகள் இந்த நான்கரை ஆண்டுகளில் மாத்திரம் மூன்று இலட்சம் தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிட மக்களுக்காகக் கட்டித்தரப்பட்டிருக்கின்றன. அது வேறு.

ஆனால் இங்கே நூறு வீடுகள் ஒரு குறிக்கோளோடு கட்டப்படுகின்றன. சாதி ஒழியவேண்டும். சாதி பேதம் அகல வேண்டும். நீ உயர்வு, நான் தாழ்வு; நீ நடுநிலை, நான் இடைநிலை'' என்று சொல்கின்ற அந்த நிலை மாற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த சமத்துவபுர வீடுகளில் – 40 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 42 பேர் வாழ்வதற்கு வசதிகள் செய்யப்பட்டு, அவர்களில்

கள்ளர் 25 பேர்,
துளுவ வேளாளர் 3 பேர்
சௌராஷ்டிரா ஒருவர்
யாதவா 4 பேர்.
நாடார் ஒருவர்
இஸ்லாமியர் லப்பை 2 பேர்
வீரசோழிய வெள்ளாளர் ஒருவர்
கம்மாளர் 3 பேர்
சாதுசெட்டி ஒருவர்
ஆயிரம் வைசியர் ஒருவர்
மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்
வலையர் 5 பேர்
குலாலர் ஒருவர்
நாவிதர் ஒருவர்
சலவைத் தொழிலாளி ஒருவர்
இதர வகுப்பினர் 10 பேரில்
செட்டியார் 3 பேர்
வெள்ளாளர் 6 பேர்
பிராமணர் ஒருவர்

இந்த நூறு வீடுகளில் பிராமணர்களும் வாழ்கிறார்கள். முன்னேறிய சாதி என்று சொல்லப் படுகின்ற செட்டியார், வெள்ளாளர் போன்றவர்களும் வாழ்கின்றார்கள். மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்கின்றார்கள். பிற்படுத்தப்பட்ட சமுதாயத் தினரும் வாழ்கின்றார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்களில் இரண்டு மூன்று பிரிவினர் இருந்தாலும்கூட அவர்களும் இந்த வீடுகளில் வாழ்கிறார்கள்.

எனவே இந்த 100 குடும்பங்களில் ஏற்படுகின்ற சமத்துவ உணர்வு சாதி சமயமற்ற சமுதாயம் என்ற நிலை நாடு முழுவதும் பரவவேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சமூக புரட்சிக்காக தன்னை அனுபவ ரீதியாகவே ஆட்படுத்திக் கொண்டவர் நம்முடைய



போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரிய மறைந்த தியாக சீலர் கக்கன் அவர்களாவார்கள்.

### தேர்தலுக்காக அறிவித்த அறிவிப்பு அல்ல

கக்கன் அவர்கள் வாழ்ந்த ஊரில் நினைவுச் சின்னம் ஒன்றை உருவாக்குவதற்கு இந்த அரசு தயங்காது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன் என்பதற்கான வாசகத்தை 17.4.2000 அன்று நான் சட்டப்பேரவையில் அறிவித்தேன். ஏதோ இன்றைக்கு தேர்தல் வருகிறது என்பதற்காக இப்போது அறிவித்தது அல்ல.

அதற்கு முன்பே கக்கன் அவர்களுக்கு மதுரை மாநகரத்திலே நான் சிலையினைத் திறந்து வைத்த நிகழ்ச்சியும் உங்களுக்குக்கெல்லாம் தெரியும். அதுமாத்திரமல்ல, அந்த அறிவிப்பின்படி இன்றைக்கு மணி மண்டபம் எழுப்பியிருக்கின்றது. ஒரு அழகான மணி மண்டபத்தை இங்கே உருவாக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகளின் ஒத்துழைப்பு, பொறியாளர்களின் ஒத்துழைப்பு ஆகியவைகள் எல்லாம் இருந்ததற்காக அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட பல மணி மண்டபங்களைக் கட்சி சார்பற்ற முறையில் அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் பெயரால்கூட ஒரு மணி மண்டபத்தை நாகர்கோவிலிலே எழுப்பியிருக்கிறோம். பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் பெயரால் கூட ஒரு மணி மண்டபத்தை பட்டுக்கோட்டையிலே எழுப்பியிருக்கிறோம். கவிஞர் கண்ணதாசன் பெயரால் ஒரு மணி மண்டபத்தை காரைக்குடியிலே எழுப்பியிருக்கிறோம். அதற்கு அடிக்கல் நாட்டி மண்டபத்தையெல்லாம் எழுப்பி, அந்த மண்டபம் கட்டி முடிக்கப்பட்ட நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்த ஆட்சியின் முதல் அமைச்சர் சிவகங்கைக்குச் சென்று, சிவகங்கையிலே உட்கார்ந்து கொண்டு காரைக் குடியிலே கட்டப்பட்டிருந்த கண்ணதாசனின் மணி மண்டபத்திற்கான பொத்தானை சிவகங்கையிலே அமுக்கிய நிகழ்ச்சியெல்லாம் அப்போது நடைபெற்றது. உங்களுக்கெல்லாம் தெரியுமென்றே கருதுகிறேன்.

**கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தியாகிகளுக்கு மரியாதை செய்வதிலே முன்நிற்கும் அரசு**

எனவே கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தியாகிகளுக்கு, அறிஞர்களுக்கு, தமிழ்ச் சான்றோர்களுக்கு மரியாதை செய்வதிலே இந்த ஆட்சி என்றைக்கும் முன் நிற்கும் என்பதற்காக அடையாளமாகத்தான் மதுரையிலே கக்கன் அவர்களுக்குச் சிலை, இன்றைக்கு அவருடைய பெயரால் மணி மண்டபம். அது மட்டுமல்ல, பி.டி.ஆர் அவர்கள் இங்கே பேசும்போது அவர் எந்த நிலையிலே வாழ்ந்தார், எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதையெல்லாம் சொன்னார்கள். அமைச்சராக இருந்தவர் தனக்கென்று எதையும் சேர்த்துக் கொள்கின்ற அந்த மனம் இன்றி, அதைப்பற்றிக் கவலைப்படாமல் தன்னை மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்கின்ற அந்த தைரியத்தோடு வாழ்ந்து, மக்கள் அவரை அன்றைக்கும் பார்த்துக் கொண்டார்கள், இன்றைக்கு அவர் இல்லை, அவருடைய புகழை மக்களாகிய நாம் தான் பாடிக் கொண்டிருக்கிறோம் என்ற அளவிற்கு அவர் வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

கக்கன் அவர்கள் சென்னையிலே 73–ஆம் ஆண்டு முதல் வசித்த இல்லத்தில் அவருடைய பிள்ளைகள் வாடகை இல்லாமல் கடைசி வரையிலே வாழ்ந்து வர இந்த அரசு அனுமதி வழங்கி அந்த வீட்டிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவைகள் எல்லாம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற காரியங்கள். ஏதோ தேர்தல் நேரத்தில் நடைபெறுகின்ற காரியங்கள் என்று யாரும் எண்ணத் தேவையில்லை.

**தும்பை மலர் போன்று தூய உள்ளத்தோடு வாழ்நாள் முழுவதும் வாழ்ந்தவர் கக்கன்**

இதைத் தொடர்ந்து தான் இன்றைக்கு தும்பைப்பட்டி கிராமத்திலே இந்த அழகான மணி மண்டபம் உருவாகியிருக்கின்றது. தும்பை என்றாலே தூய்மையானது. கிராமங்களிலே தூய்மைக்கு எடுத்துக்காட்டாக தும்பை மலர் போன்ற தூய்மை என்று சொல்வதுண்டு. அப்படிப்பட்ட தும்பைப்பட்டியிலே பிறந்த காரணத்தினாலோ என்னவோ தும்பை மலர் போன்ற தூய உள்ளத்தோடு கக்கன் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தன்னை மற்றவர்களுக்கு அடையாளம் காட்டிக் கொண்டார். அவர் இதே மேலூருக்குப் பக்கத்திலே இந்தக் கிராமத்திலே பிறந்தார் என்றாலுங்கூட, அவருடைய தந்தையார் பூசாரி கக்கன் என்று அழைக்கப் பட்டவர். அவர் இந்த ஆதி திராவிடர் காலனியில் வாழ்ந்தவர் அன்றைக்கு பூசாரி கக்கன் என்று அழைக்கப்பட்டவர். அவருடைய தாயாரின் பெயர் குப்பீ என்பதாகும். இப்படிப்பட்ட ஒரு கலாச்சாரமாக உள்ள ஒரு எளிய குடும்பத்திலே பிறந்தவர்.



தெய்வ பக்தி அதிகமுள்ள பூசாரி கக்கன் தும்பைப்பட்டியிலே உள்ள கிராம வீரகாளியம்மன் கோவிலிலே பூசாரியாக திகழ்ந்தார் என்றும் அப்போது ஜாதி இந்துக்களும் அவரிடம் விபூதி வாங்கிக் கொள்வார்கள் .என்றும் சரித்திரக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். கக்கன் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். நான் அப்படி குறிப்பிடக்கூட விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு அடையாளத்திற்காகச் சொல்ல வேண்டி யிருக்கின்றது. அந்தச் சமுதாயத்திலே பிறந்த கக்கனுடைய தந்தையார் பூசாரி கக்கன் அவர்கள் வீரகாளி அம்மன் கோயிலிலே பணியாற்றியபோது அவரிடத்திலே உயர்ந்த ஜாதி இந்துக்களும் விபூதி வாங்கிக் கொள்வார்கள் என்பது எதைக் காட்டுகின்றது? அன்றைக்கு இந்தச் சாதி வேறுபாடுகளையெல்லாம் கடந்த ஒரு மனித நேய உணர்வு இருந்தது என்பதைத்தான் காட்டுகிறது. அப்படிப்பட்ட பெருமைக்குரியவருடைய மகனாகப் பிறந்த கக்கன் அவர்களும் தொடக்கப்பள்ளியிலே படிக்கும்போதே கஷ்டப்பட்டு, பிறகு தொடர்ந்து படிப்பதற்கு முடியாமல் உதவித் தொகை பெற்று படித்து வேலைகள் செய்து அதிலே வருகின்ற கூலியைக் கொண்டு அந்தப் பணத்தைக் கொண்டு தன்னுடைய படிப்புச் செலவுகளை ஈடுகட்டிக் கொண்டு வாழ்ந்து பிறகு திருமங்கலத்திலே உள்ள நாடார் உயர்நிலைப் பள்ளியிலே சேர்ந்து படித்து எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்கு அவர் அன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதும், ஹாஸ்டலிலே சாப்பிட்டுக் கொண்டு தலைமை ஆசிரியரின் உதவியால் பள்ளியிலே தங்கினார் என்பதும், இரவிலே பள்ளியின் வராந்தாவிலே படுத்து தூங்கினார் என்பதும் இதையெல்லாம் படிக்கும்போதும், கேட்கும்போதும் இப்படிப்பட்ட ஒரு பெரிய மனிதருக்கு நாம் ஒரு சிறிய மணி மண்டபத்தை எழுப்பியிருக்கிறோம் என்ற எண்ணம்தான் எனக்கு ஏற்படுகின்றது.

**உழைப்பால் உயர்ந்த உத்தமர்**

அத்தகைய ஒரு மாபெரும் தியாகியை – ஊரின் ஒதுக்குப்புறத்திலே ஒரு காலனியிலே தோன்றி உழைப்பால் உயர்ந்த உத்தமரை எளிமையின் சின்னத்தை ஏழைகளின் உற்றத் தோழனாக விளங்கியவரை இன்றைக்கு நாம் நினைத்துப் போற்றுகிறோம். எனக்கு ஒரு ஆறுதல். அவர் அமைச்சராக இருந்த காலத்தில் அவர் எதிரிலே அமர்ந்து சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியிருக்கிறது. எத்தனையோ முறை அவருடன் சண்டை போட்டிருக்கிறேன். எத்தனையோ நேரம் அவரோடு வாதிட்டிருக்கிறேன். பலமுறை அவர் என் வாதங்களுக்குப் பதிலளித்திருக்கிறார். ஆனாலும் அந்த வாதம் முடிந்து பிறகு தாழ்வாரத்திலே சந்திக்கும்போது நன்றாகப் பேசினீர்கள் என்று அவர் எனக்கு கை கொடுப்பதும், நீங்களும் நன்றாகப் பதில் சொன்னீர்கள் என்று அவரை நான் பாராட்டுவதும் வழக்கம். அப்படிப்பட்ட ஒரு நட்புணர்வு அவரிடத்திலே எனக்கு உண்டு.

பெருந்தலைவர் காமராஜரிடத்திலே அபார பக்தி கொண்டவர். அவரை தன்னுடைய தலைவராக மாத்திரமல்ல, தன்னுடைய வழிகாட்டியாகவும் ஏற்றுக் கொண்டு கக்கன் அவர்கள் வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட செம்மலுக்கு, தியாக சீலருக்கு மணி மண்டபம் இன்றைக்கு எழுப்பியிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் என்னுடைய இளமைக் காலத்திலே 14 வயதிலே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே ஈடுபட்டு பொது வாழ்க்கையிலே நுழைந்தாலும் கூட பெரியாருடைய பிடிப்பால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அரவணைப்பால் அன்றைக்கே நான் என்னுடைய பொது வாழ்க்கையிலே முதன் முதலாக அந்த வாழ்க்கையைத் தொடங்கிய இடம் ஆதிதிராவிட காலனிகள்தான். நான் ஏற்றி வைத்த கொடிகள் தஞ்சை மாவட்டத்திலே இன்றைக்கும் பழைய காலனிகளிலே பறந்து கொண்டிருக்கின்றன. ஆதிதிராவிட காலனிகளிலே பறந்து கொண்டிருக்கும் கொடிகளிலே 100–க்கு 90 கொடிகள் கருணாநிதி கையால் ஏற்றி வைக்கப்பட்ட கொடிகள் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதிலே நான் மிகுந்த பெருமையும் பெருமிதமும் கொள்கிறேன். அந்த அளவிற்கு சிறு வயது முதலே தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே, பட்டியல் இன மக்களிடத்திலே, ஆதி திராவிடப் பெருங்குடி மக்களிடத்திலே தொடர்பும் நட்பும் உறவும் கொண்டவனாக நான் இருந்த காரணத்தினால் தான் இன்றைக்கு என்னால் பெரியார் நினைவு சமத்துவபுரங்களைக் காணமுடிகிறது.

*மதுரை மாவட்டம் தும்பைப்பட்டியின் 13–2–2001 அன்று கக்கன் மணிமண்டபத்தை திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...*




இன்று ஒரு இன்பமான நாள் என்று உரையாற்றிய ஒவ்வொருவரும் குறிப்பிட்டார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்கு பொற்கிழி வழங்கிய போது அதனை வழங்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப் பொற்கிழியை வழங்குவதற்காக அரும்பாடுபட்டு தமிழகம் முழுதும் சென்று வசூலில் ஈடுபட்டு அதனை சென்னையிலே பெருவிழா நடத்தி, புரட்சிக் கவிஞருடைய கரங்களில் அந்த பொற்கிழியை ஒப்படைத்து விட்டு பேசும்போது சொன்னார். நான் என்னுடைய திருமணத்தின் பொழுது தான் இவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கிறேன். இன்றைக்கு புரட்சிக் கவிஞருக்கு பொற்கிழி வழங்கும்பொழுதுதான் அதே மகிழ்ச்சியை நான் காணுகிறேன் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

***அண்ணாவின் தம்பியாகிய எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி***

அந்த மகிழ்ச்சியைவிட இரட்டிப்பு மகிழ்ச்சி, அண்ணாவின் தம்பியாகிய எனக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்றது. நம்முடைய அன்பிற்குரிய வா.செ. குழந்தைசாமி அவர்கள், உங்களுடைய எச்சங்களில் ஒன்றாக இந்த உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் இருந்திடும் என்று குறிப்பிட்டார்கள். இதைவிட ஒரு பெரும் பேறு, நல்வாய்ப்பு எனக்கு இருக்க முடியாது. இந்த உணர்வு இன்று நேற்றல்ல, இளமைக் காலம் தொட்டு என்னுடைய உள்ளத்திலே ஊறிச் செழித்த காரணத்தினால் இப்படியொரு பல்கலைக்கழகத்தை நிறுவிட வேண்டும் என்கிற ஆசை ஏற்பட்டு, இதற்கு தொடக்கமாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற உலகத் தமிழ் இணைய மாநாட்டில் இந்தப் பல்கலைக்கழகம் உருவாகும் என்று அறிவிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

---

**தமிழ் இணையப் பல்கலைக்கழக தொடக்க விழாவில் 17-2-2001 அன்று முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**

**1999 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7,8 ஆகிய நாட்களில் சென்னையில் உலகத் தமிழ் இணைய** மாநாடு நடைபெற்ற போது **8ஆம் தேதியன்று** நான் அந்த மாநாட்டிலே நிறைவுரையாற்றினேன். அந்த உரையிலே குறிப்பிட்டேன்.

''மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.டத்தோ சாமிவேலு அவர்கள் அந்த மாநாட்டில் பேசும்பொழுது, "The Tamils the world over will look to Tamil Nadu as the repository of Tamil learning" என்று சொன்னார்.

அதைப்போலவே, மதிப்பிற்குரிய மொரீஷியஸ் நாட்டின் அமைச்சர் திரு.இராமசாமி சிதம்பரம் பிள்ளை அவர்களும், "I view this conference as a landmark event, because it is setting the foundation to the creation of a Tamil Virtual World" என்று சொன்னார்.

அவற்றின் அடிப்படையில், வெளிநாட்டில் இருப்பவர்களும் தமிழ் பயிலுவதற்காக ஒரு "Virtual University"-யை ''இண்டர்நெட்'' என்ற இணையத்தின் மூலம் துவக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். ''உலகத் தமிழ் இணையப்

பல்கலைக்கழகம்" என்று அதற்கு உங்கள் அனுமதியோடு பெயர் சூட்டுகிறேன் என்று அன்றைக்கு அறிவித்தேன். அந்த அறிவிப்பு இன்றைக்கு செயல்படுத்தப்பட்டிருக்கின்றது




**சொன்னது மாத்திரமல்ல சொல்லாததையும் செய்திருக்கிறோம்**

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற இந்த வாசகத்தை நாங்கள் எங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடுவது வழக்கம். ஆனால் இதிலே ஒரு வேறுபாடு, சொன்னதைச் செய்வோம் என்பது மாத்திரமல்ல, சொல்லாததையும் செய்திருக்கிறோம். தேர்தல் அறிக்கையிலே சொல்லப்படாததையும் செய்திருக்கிறோம். அதுதான் இந்தப் பல்கலைக் கழகம் என்பதை நான் இங்கே அறிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லாததைச் செய்வது குற்றமல்ல. செய்வது நல்லதாக இருந்தால், அதைச் சொல்லியும் செய்யலாம், சொல்லாமலும் செய்யலாம். சிலபேர் சொல்லாமலேயே எதையெதையோ செய்வார்கள். நாங்கள் சொன்னதை நல்லதாக இருப்பதைத்தான் செய்வோம். குழந்தைசாமி அவர்கள் பாராட்டுகின்ற அளவிற்கு, மலேசியா விலிருந்தும் இலங்கையிலிருந்தும் வந்திருக் கின்றவர்கள் பாராட்டகின்ற அளவிற்கு இன்றைய தினம் இந்தப் பல்கலைக் கழகம் உருவாகியிருக்கின்றது என்று சொன்னால் இது தமிழர்களுக்காக தமிழ் மொழியை தங்களுடைய தாய்மொழியாகக் கொண்டவர்களுக்காக நாங்கள் மேற்கொண்ட சூளுரையினடைய வெற்றிச் சின்னம், இந்தப் பல்கலைக்கழகம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தப் பல்கலைக் கழகத்தின் தொடக்க விழாவிற்கு எங்களுடைய அழைப்பையேற்று இந்த நிகழ்ச்சியிலே வந்து உரையாற்றி ஊக்கப்படுத்தியுள்ள இலங்கை யினுடைய உயர்கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு இண்டிகா குணரத்தினா அவர்களுக்கும், இலங்கையின் மொழிகள் ஆணைக் குழு தலைவர் சிவதாசன் அவர்களுக்கும், அவர்களோடு வந்த குழுவினருக்கும், சிங்கப்பூர் அருண்மகிழ்நன் அவர்களுக்கும், மலேசியா முத்து நெடுமாறன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களை, நன்றியை, வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குழுவையே அனுப்பி வைத்த இலங்கை அரசுக்கு நன்றி கூறுகிறேன்.

**தமிழ் அறிவியல் தமிழாக பரவ வேண்டும் என்று அக்கறை உள்ளவர்கள்**

அவர்கள் வந்ததின் மூலமாக உலகமெங்கும் இருக்கின்ற தமிழர்கள் எங்கெங்கு பரவிக் கிடக்கிறார்களோ அவர்கள் எல்லாம் இந்த நிகழ்ச்சியை இன்றைக்கு வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். போற்றிப் புகழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். நான் இதை 99–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் தமிழ் இணைய மாநாட்டின் போது அறிவித்த பிறகு உடனடியாக ஆக்கப்பணிகள் தொடங்கப்பட்டன. இதன் தோற்றத்திற்கு ஆலோசனைகள் வழங்கிட முனைவர் மு.அனந்தகிருஷ்ணன் தலைமையில் 5.3.1999 அன்று ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. அனந்தகிருஷ்ணன் அவர்கள் தகவல் தொடர்பு துறையில் எந்த




மொழி என்பதற்கு இன்று இந்திய மொழிகளில் தமிழ் மாத்திரமே இரண்டு நாடுகளில் தேசிய அளவில் ஆட்சி மொழி என்ற சிறப்பைப் பெற்றுள்ளது என்பதே சான்றாகும். ஒன்று இலங்கை, மற்றொன்று சிங்கப்பூர். இந்த இரண்டு நாடுகளில் ஆட்சி மொழி அந்தஸ்தை பெற்றுள்ள மொழி, இந்தியாவின் மொழிகளிலே தமிழ் மொழி என்பது நமக்குப் பெருமை!

**ஆங்கிலத்திற்கு அடுத்து கணினியில் இடம் பெற்ற முதல் மொழி தமிழ்மொழி**

அளவிற்கு ஆர்வம் படைத்தவர் என்பதை நான் அறிவேன். நாடு அறியும். அதைப் போலவே நம்முடைய குழந்தைசாமி அவர்களும் இங்கே முரசொலி மாறனும், பேராசிரியரும் குறிப்பிட்டதைப் போல தமிழ் பரவுவது மாத்திரமல்ல, அது அறிவியல் தமிழாக இருக்க வேண்டும் என்பதிலே அக்கறை உள்ளவர்கள். அந்த அக்கறை வெளிப்படுகின்ற அளவிற்கு தங்களுடைய பணிகளை நிறைவேற்றி அதன் அடையாளமாக இந்தப் பல்கலைக்கழகம் இன்றைக்குத் தோன்றியிருக்கின்றது. 19.8.1999 அன்று தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திற்காக இந்த இணையத்தின் தளப் பெயர் "www.tamilvirtualuniv.org" என்று பதிவு செய்யப்பட்டது. உலகத் தமிழ் இணையப் பல்கலைக்கழகம் அமைப்பது குறித்து ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு அந்தப் பணியினை அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் வா.செ.குழந்தைசாமி அவர்கள் தலைமையில் 6.9.1999 அன்று ஓர் உயர்மட்டக்குழுவை அமைத்தது இந்த அரசு. இத்தகைய அமைப்பு ரீதியான பணிகளுடைய வெற்றியின் அடையாளமாக இன்று இந்தப் பல்கலைக் கழகத்தை நாம் காணுகின்றோம்.

தமிழ் மொழி எத்தகைய சிறப்பு வாய்ந்தது, எப்படி உலகத்தில் எல்லா பகுதிகளிலும் வேர் விட்டிருக்கின்ற மலேசியா, மொரீசியஸ் போன்ற நாடுகளில் அங்கீகாரம் பெற்ற மொழியாகவும் தமிழ் விளங்குகிறது. உலகில் பேசப்படும் மொழிகள் ஆறாயிரம். அந்த ஆறாயிரம் மொழிகளில் 17வது இடத்தில் இருக்கிற மொழி நம்முடைய தமிழ் மொழி என்பதை நான் பெருமிதத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய நிலையில் ஆங்கில மொழிக்கு அடுத்தபடியாக, இந்திய மொழிகளிலேயே கணினியில் முதன்முதலாக இடம் பெற்ற மொழியும் நம்முடைய தமிழ் மொழி தான்.

உலகத்தில் தமிழர்கள் எங்கெங்கே வாழ்கிறார்கள், எந்த அளவிற்கு வாழ்கிறார்கள் என்பதை புள்ளி விவரங்களோடு பார்த்தால் பெரும் வியப்பாக இருக்கிறது. ஆங்கிலேயர்கள், சீனர்கள், ஜப்பானியர்கள், யூதர்கள், இந்தியர்கள் ஆகிய ஐந்து பிரிவினர்தான் உலகம் முழுவதும் பல பகுதிகளிலும் பரவி வாழ்கிறார்கள். இவர்களில், "இந்தியர்" என்று பொதுவாகக் கூறப்பட்டாலும், உலகம் தழுவி வாழும் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. எனவே உலகம் முழுவதிலும் ஏறத்தாழ 7 கோடி தமிழர்கள் தமிழ்நாட்டையும் சேர்த்து வாழ்கின்றனர். அவர்களில், 15 விழுக்காட்டினர் ஏறத்தாழ 1 கோடி தமிழர்கள், தாய்த் தமிழகத்திற்கு வெளியே 40 நாடுகளில் வாழ்கின்றனர்.

## உலகெங்கும் ஏழு கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள்

தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 6 கோடிக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள். இலங்கையில் 50 இலட்சம் பேர்களும், மலேசியாவில் 16 இலட்சம் பேர்களும், ரீயூனியனில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர்களும் , இங்கிலாந்து நாட்டில் 3 இலட்சம் பேர்களும், தென் ஆப்பிரிக்காவில் 3 இலட்சம் பேர்களும், பர்மாவில் 2 இலட்சத்து 50 ஆயிரம் பேர்களும், சிங்கப்பூரில் 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர்களும், கனடாவில் 1 இலட்சத்து 20 ஆயிரம் பேர்களும், பிரான்ஸ் நாட்டில் 1 இலட்சம் பேர்களும், மொரீசியஸ் நாட்டில் 1 இலட்சம் பேர்களும், ஆஸ்திரேலியாவில் 75 ஆயிரம் பேர்களும், வளைகுடா நாடுகளில் 25 ஆயிரம் பேர்களும், கயானாவில் 10 ஆயிரம் பேர்களும், பிஜி தீவில் 70 ஆயிரம் பேர்களும், செஷல்ஸ் நாட்டில் 7 ஆயிரத்து 540 பேர்களும், மற்ற நாடுகளில் எல்லாம் மொத்தமாக 2 இலட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதை எண்ணும்போது நமக்குப் புல்லரிக்கின்றது.

## இது உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்

எனவே இது, உலகத் தமிழ் இணைய பல்கலைக்கழகம் என்று பெயர் பெற்றிருப்பதை விட, அதற்குள்ள பொருள் என்னவென்றால் உலகத் தமிழர்களை இணைக்கும் பல்கலைக்கழகம்! தமிழ் இணையப் பல்கலைக் கழகமல்ல, தமிழர்களை இணைக்கும் பல்கலைக் கழகம். அந்த இணைப்பு முயற்சியைத் தான் இரண்டு ஆண்டு காலமாக நாம் மேற்கொண்டு இன்றைக்கு அதனை முழுமைப்படுத்தியிருக்கிறோம். அப்படி முழுமைப்படுத்த உதவிய, துணை நின்ற அனைவருக்கும் நான் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனையோ நினைக்கத்தக்க, நெஞ்சிலே பதியத்தக்க காரியங்களை இந்த அரசு தமிழகத்திலே நடத்தியிருக்கின்றது. கடந்த வாரம் கூட நானும் மத்திய அமைச்சர் முரசொலி மாறனும் தெற்கு மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்து குறிப்பாக திருநெல்வேலி நாங்குநேரி பகுதியிலே 8 ஆயிரம் கோடி ரூபாய் செலவிலே உருவாகக் கூடிய ஒரு தொழில் வளாகத்திற்கு அடிக்கல் நாட்டியிருக்கிறோம். அந்தத் தொழில் வளாகம் அங்கே உருவாகுமேயானால் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். தென் மாவட்டங்களிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு நிம்மதி கிடைக்கும், நல்ல வாழ்வு கிடைக்கும். அதற்கு சில நாட்களுக்கு முன்பு தமிழ்நாட்டிலே சென்னைக்கு அருகே எண்ணூருக்கு பிரதமர் வாஜ்பாய் அவர்கள் வருகை தந்து ஒரு துறைமுகத்தை அங்கே தொடங்கி வைத்துவிட்டுச் சென்றார்கள். ஐந்தாறு மாதங்களுக்கு முன்பு தகவல் தொழில்நுட்பம் தமிழகத்திலே எந்த அளவிற்கு வளர்ந்திருக்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக டைடல்பார்க் – ஏறத்தாழ 400 கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்ட டைடல் பார்க், இந்த ஐந்தாண்டு காலத்திலே இந்தத் துறையிலே நமக்கு ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சியை நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமேயானால் சாப்ட்வேர் ஏற்றுமதி ஐந்தாண்டுகளுக்கு முன்பு 12 கோடி ரூபாய் அளவிற்கு மட்டுமே இருந்தது. இன்றைக்கு 1900 கோடி ரூபாய் ஏற்றுமதி என்கிற அளவிற்கு வளர்ந்திருக்கின்றது. இன்று விஞ்ஞான உலகத்திலே இந்த சாப்ட்வேருக்கு கம்ப்யூட்டருக்கு, இந்த இணையத்திற்கு ஒரு தலையாய இடம் ஏற்பட்டு விட்டது. அந்தத் தலையாய இடத்தை இந்தியாவைப் பொறுத்தவரையில் இப்போது தமிழகம் தான் பெற்றிருக்கின்றது என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். வேறு எந்த மாநிலத்திலும் தமிழகத்திலே வளர்ந்துள்ள அளவிற்கு இந்த தொழில் நுட்பம் வளரவில்லை. எனக்கு பெருமகிழ்ச்சி என்னவென்றால், இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழையும் வளர்க்கிறோமே, தொழிலை மாத்திரம் வளர்க்கவில்லை, அந்தத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமிழையும் வளர்க்கிறோமே என்பது தான் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்பது நான் அடிக்கடி சொல்லி வருகின்ற சூளுரை. அந்தச் சூளுரைக்கேற்ப வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்ற அடிப்படையிலே நினைத்து, செயற்படுத்தி, உங்கள் அனைவருடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் பெற்றுள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழகம் வாழ்க, வாழ்க, டாக்டர் குழந்தைசாமி அவர்கள் சொன்னதைப் போல நமக்கெல்லாம் எச்சமாக நின்று வாழ்க, என்றென்றும் வாழ்க, தமிழ் வாழ்க, தமிழர்களுடைய புகழ் வாழ்க, உலகமெங்கும் பரவிக் கிடக்கும் தமிழர்களை இணைக்கும் பாலமாக இந்தப் பல்கலைக் கழகம் விளங்குக என்று வாழ்த்தி இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

• • •

# சமுதாயத்தின் வேராகத் திகழ்கின்ற மாதர் குலத் திலகங்கள் நாட்டுக்கு தொண்டாற்றக் கூடிய நல்ல தியாக சீலர்களாக மாற வேண்டும்

– முதலமைச்சர் கலைஞர்

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அருமை அன்னையார் பங்காரு அம்மையார் நினைவாகத் தொடங்கப்பட்ட இந்த மகளிர் திட்டத்தின் மகத்தான கருத்தரங்கம், மதுரை மாநகரத்திலே நடைபெறுகின்ற நேரத்தில் இதில் கலந்து கொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

எந்தவொரு சமுதாயத்திலே பெண்கள் விழிப்புணர்ச்சி அடைகிறார்களோ, அங்கே நாகரிகமும், பண்பாடும் சேர்ந்து, அந்தச் சமுதாயத்தை மேம்படுத்துகிறது; உயர்த்துகிறது.

### இலட்சோப லட்சம் பெண்கள் இன்றைக்கு இணைத்துக் கொள்ளும் வகையில் வளர்ச்சி

பெண்களுடைய எழுச்சிதான் ஒட்டு மொத்த சமுதாயத்தின் எழுச்சியாகும். அந்த எழுச்சியைக் காண வேண்டுமென்று விரும்பித்தான் 1989ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக முதல் அமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது இந்த மகளிர் திட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

தருமபுரி மாவட்டத்திலே தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், நான் மூன்றாவது முறை ஆட்சியிலே இருந்தபோது தொடங்கப்பட்ட இத்திட்டம், திடீரென ஆட்சி கலைக்கப்பட்டு பின்னர் வேகமாக வளராமல் மீண்டும் நான்காவது முறையாக நான் ஆட்சிக்கு வரும்வரை காத்திருந்து இன்று இலட்சோப லட்சம் பெண்கள் இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்கிற அளவிற்குப் பெருகியிருக்கிறது. நான் இந்தக் குழுக்களையெல்லாம் வாழ்த்துகிறேன்.

இன்றைக்கு நடைபெறுகின்ற இந்தக் கருத்தரங்கத்திலே கலந்துகொண்டு, இங்கே பல்லாயிரக் கணக்கிலே அமர்ந்திருக்கிற உங்களையெல்லாம் காணும்போது மகிழ்ச்சியடைகிறேன். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப்போல இரண்டு பெண்மணிகள் இங்கே பேசினார்கள். ஒருவர் தக்கலை விமலா ராணி, இன்னொருவர் மாங்குளம் சாலியா பீவி. இந்த இரண்டு பேருடைய பேச்சைக் கேட்ட பிறகு நீங்கள் எல்லோருமே இப்படித்தான் வீராங்கனைகளாக இருப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கின்றது. விமலா ராணிக்கும், சாலியா பீவிக்கும் நான் வாழ்த்து கூறுகின்ற அதே நேரத்தில் ஒன்றை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நான் சொல்வதை யாரும் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இந்து மதத்தைச் சார்ந்த பெண்களைவிட – கிறித்தவச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களைவிட – இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் அதிகமாக வெளியே வரவோ, அல்லது கலகலப்பாக மற்றவர்களோடு பேசவோ தங்களைப் பழக்கிக் கொண்டவர்கள் அல்ல.

இந்துக்கள் வீட்டுத் திருமணங்களிலும், கிறித்தவர்கள் வீட்டுத் திருமணங்களிலும் மேடையிலே மணமக்கள் இருவரையும் நேரில் கண்டு வாழ்த்த முடியும். ஆனால், இஸ்லாமிய சமுதாயத்து வீட்டுத் திருமணங்களுக்குச் சென்றால் மேடையில் மணமகன் மாத்திரம்தான் இருப்பார். மணமகள் இருக்கமாட்டார். அப்படிப்பட்ட கலாச்சாரத்திற்கு தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்ட சமுதாயம் இஸ்லாமிய சமுதாயம். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மங்கையர்க்கரசி சாலியா பீவி, ''வாழ்ந்து காட்டுவோம்'' என்று நான் கொடுத்த குரலை – நான் தந்த தலைப்பை இங்கே கையை உயர்த்தி முழங்கிய போது – ஜான்சிராணி முழங்கியதைப்போல இருந்தது; வேலு நாச்சியார் முழங்கியதுபோல இருந்தது என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

எனக்கு இதயமெல்லாம் பூரிக்கிறது. எந்தச் சமுதாயம் ஆண்டு ஆண்டுக்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்ததோ, அந்தச் சமுதாயம் இன்றைக்கு விழிப்புற்றிருக்கிறது. பெண்கள் சமுதாயம் விழிப்புற்றால்தான் மொத்த சமுதாயமும் உருப்படும்; முன்னேறும். ஆண்கள் என்றும், பெண்கள் என்றும் நாம் பிரித்துப் பார்க்கிறோமென்றாலும்கூட, ஆண்களுக்கு



வழிகாட்டக் கூடியவர்களாக இருப்பவர்கள் பெண்கள். 'ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள்' என்பது பழமொழி. பழமொழி மாத்திரமல்ல; உண்மையான மொழியுங்கூட!

அது இன்றைக்கு, ஆண் சமுதாயத்திற்குப் பின்னால் பெண் சமுதாயமே இருக்கிறது; அப்படி இருந்தால்தான் ஒரு நாடே உயர முடியும்; முன்னேற முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலேதான் இந்தக் குழுக்களை அமைக்கிற முயற்சியில் நான் 1989இல் ஈடுபட்டேன்.

**அறிஞர் அண்ணாவின் அருமைத் தாயார் பங்காரு அம்மாள் பெயரால் திட்டம்**

இதற்கொரு பெயரை வைக்க வேண்டுமென்று விரும்பிய போது, நம்முடைய தாய்மார்கள் அறிஞர் அண்ணா அவர்களைப்போல்; அருமையான அறிவு செறிந்த தன்மானமுள்ள குழந்தைகளைப் பெற வேண்டும் என்பதற்காக – அண்ணாவின் அருமைத் தாயார் பங்காரு அம்மாள் பெயரால் இந்தத் திட்டத் திற்குப் பெயரைச் சூட்டினேன். நான் கண்ட கனவு வீண் போகவில்லை என்பதை மதுரை தமுக்கம் மைதானத்திலே இந்த மண்டபத்திலே நான் காண்கிறேன், பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே உரையாற்றியவர்கள் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார்.

*''ஆடிக்கொண் டிருக்கும் தையற்*
*பொறியினை அசைக்கும் ஓர்கை;*
*ஓடிக்கொண் டிருக்கும் தைத்த*
*உடையினை வாங்கும் ஓர்கை!*
*பாடிக் கொண் டேயிருக்கும்*
*பாவையின் தாமரைவாய்;*
*நாடிக்கொண் டேயிருக்கும்*
*குடித்தன நலத்தை நெஞ்சம்!''*

ஒரு பெண் தையல் இயந்திரத்தை வைத்துக் கொண்டு சட்டையோ அல்லது ரவிக்கையோ தைக்கிற நேரத்தில் ஆடிக் கொண்டிருக்கின்ற தையல் இயந்திரத்தை ஒரு கை அசைக்கிறது. அப்போது ஓடிக் கொண்டிருக்கின்ற தைத்த உடையினை இன்னொரு கை வாங்குகிறது. அப்போது பாடிக்கொண்டே இருக்கிறது அந்தப் பாவையின் தாமரை வாய்.

இவ்வளவு வேலைகளுக்கிடையேயும் அவளுடைய நெஞ்சம் குடும்ப நலனை – வீட்டு நலனை நாடிக் கொண்டிருக்கின்றது என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'குடும்ப விளக்கு' என்கிற தலைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அப்படி குடும்ப நலனை நாடுகின்ற பெண்கள் நாட்டு நலனையும் நாட வேண்டும் என்கிற முனைப்பான எண்ணத்தோடுதான் இந்த மகளிர் குழுக்கள் ஆங்காங்கு தொடங்கப்பட்டிருக்கின்றன.

நான் உங்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்கிறேன். ஏதோ குழுவில் சேர்ந்தோம். மதுரையில் கூட்டம் போட்டார்கள். சென்றோம், நன்றாகப் பேசினார்கள், பரிசெல்லாம் கொடுத்தார்கள் என்று நீங்கள் வீட்டிற்குப் போகும்போது சொல்லிக் கொண்டு போகிற கூட்டமல்ல இந்தக் கூட்டம்.

நீங்கள் இங்கே உறுதிமொழி எடுத்துக் கொண்ட காட்சியைப் பார்த்தேன். அந்த உறுதிமொழிகளில் குறிப் பிட்டிருந்த கருத்துக்களையெல்லாம், உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று குறித்து வைத்துக் கொண்டிருந்தேன். அதையெல்லாம் நீங்கள் உறுதிமொழிகளில் குறிப்பிட்டீர்கள். உங்கள் உறுதி மொழிகளில் உள்ள கருத்துக்களை உங்கள் உள்ளங்களில் பதிய வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அந்தக் கருத்துக்களைப் பரப்பிடவேண்டும். மற்றவர்களுடைய உள்ளங்களிலும் அந்தக் கருத்துக் களைப் பதிய வைக்க வேண்டும். அதனை நீங்கள் செய்ய வேண்டும்.

நான் குறிப்பாக மகளிருக்கு அருமைச் சகோதரிகளுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். உடல் நலத்தை நாம் பாதுகாக்க வேண்டும். உடல் நலத்தைப் பேண வேண்டும். உணவு பழக்க வழக்கங்கள் உடலை ஆரோக்கியம் உள்ளதாக ஆக்குகின்ற வகையில் அமைந்திட வேண்டும். ஒரு பெண் சோர்வடைந்தால் குடும்பமே சோர்வடைந்து விடும். ஒரு பெண் சக்தி பெற்றவராக இருந்தால்தான் அந்தக் குடும்பம் வலிமையுள்ள குடும்பமாக இருக்கும்.

**கணவனின் முடிவுகளில் மனைவியும் பங்கேற்க வேண்டும்**

பெண்கள் கணவன் எடுக்கும் முடிவுகளிலே புறக்கணிக்கப்படாமல் பங்கேற்க வேண்டும் என்பது என் விருப்பம். அதைத் தான் நேற்று ஒரு திருமண விழாவிலே பேசும்போது கூடக் குறிப்பிட்டேன். தந்தை பெரியார் சொல்வார். கணவன் – மனைவி என்பதில் கணவன் மனைவி என்கிற இரண்டு சொற்களால் சுட்டிக் காட்டப்பட்டாலும்கூட இருவரும் வாழ்க்கையிலே இரண்டு நண்பர்களாகவிளங்கிட வேண்டும்; பழகிட வேண்டும். அந்தக் கருத்தைத்தான் நான் சொல்கிறேன். கணவன் எடுக்கும் முடிவில் புறக்கணிக்கப்படாமல் மனைவிக்கும் பங்கு இருந்திடல் வேண்டும். அந்தப் பங்கினை நீங்கள் உதறித் தள்ளக் கூடாது – நீங்கள் அலட்சியப்படுத்தக் கூடாது. அந்தப் பங்கினை நீங்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு ஆரோக்கியமான தாயாரிடமிருந்துதான் ஒரு ஆரோக்கியமான குழந்தை பிறக்கிறது என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. அப்படிப் பிறக்கின்ற குழந்தையால்தான் நாட்டிற்கு ஆரோக்கியம். சமுதாயத்திற்கு ஆரோக்கியம். அதையும் நீங்கள் நெஞ்சிலே நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

அண்மையிலே மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு தாய்க்கு பிரதமர் வாஜ்பாய் அவர்களுடைய முன்னிலையிலே ஜீஜீபாய் பெயரால் ஒரு விருது வழங்கப்பட்டது. அதைப் பாராட்டி, தமிழக அரசின் சார்பிலே கூட அந்தத் தாய்க்கு நாங்கள் பரிசளித்து ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் வழங்கினோம். அந்தத் தாய் இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற நிலையை எண்ணி நீங்கள் பெருமையடையலாம்.

அந்த விருதைப் பெற்ற அந்த மங்கையர்க்கரசி வாழ்கின்ற இந்த மாவட்டத்தில் உங்களையெல்லாம் நான் வாழ்த்தவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அம்மையார் பிரதமர் வாஜ்பாய் அவர்களிடம் விருதைப் பெற்றபோது, பிரதமர் ஆயிற்றே என்று அந்த அம்மையார் குனிந்து பிரதமரின் காலைத் தொட – இந்த வயதான தமிழ் மூதாட்டியை நான் முந்திக் கொண்டு வணங்குகிறேன் என்று பிரதமர் வாஜ்பாய் தலைகுனிந்து வணங்க – அந்தக் காட்சி ஏடுகளிலே வெளிவந்ததையெல்லாம் நீங்கள் கண்டிருப்பீர்கள்.

**ஆண்கள் மாத்திரமல்ல பெண்களும் வணங்கத்தக்கவர்களே**

எனவே, ஆண்கள் மாத்திரம் வணங்கத்தக்கவர்கள் அல்ல; பெண்களும் வணங்கத்தக்கவர்கள்தான் என்பதற்கு அவ்வையார் காலத்திற்குப் பிறகு இப்போதுதான் நமக்கு ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டிருக் கிறது. நான் இவைகளையெல்லாம் சொல்லுகிற காரணத்தால், பெண் ஆதிக்கம்தான் வர வேண்டும்,

ஆண் ஆதிக்கம் அழிய வேண்டும் என்பதல்ல. எனக்கு பயமாகக்கூட இருக்கிறது. நீங்கள் (பெண்கள்) வளருகின்ற வேகத்தைப் பார்த்தால் ஆண்கள் எல்லாம் இனிமேல் சேர்ந்து, ஆண்களின் உரிமைக்காகப் போராட வேண்டிய ஒரு நிலைமை வந்தாலும் வரும் போல் இருக்கிறது. அது வரட்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். அது வந்தால்தான் இந்த ஆண் ஆதிக்கம் அடங்கும் முதல் அமைச்சரே பெண் ஆதிக்கம் இருக்கலாம் என்று சொல்லிவிட்டார் என்று நீங்கள் தைரியமாக வீட்டிற்குச் சென்றதும் இன்றைக்கே அந்த ஆதிக்கத்தைச் செலுத்தத் தொடங்கி விடாதீர்கள் என்று உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இதெல்லாம் சில உணர்வுகள், சில உரிமைகளுக்குத் தான் நான் குறிப்பிடுகிறேன்.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் உங்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மகளிர் முன்னேற்றத்திற்காக அவர்களுடைய உரிமைகளுக்காக சட்டங்களைத் திட்டங்களை வகுத்த அரசு இந்த அரசு. நான் வேறு எந்த அரசைப் பற்றியும் குறிப்பிட மாட்டேன். அதைப் பற்றியெல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை இந்த அரசைப் பொறுத்தவரையில் என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைச் சொல்ல வேண்டுமேயானால் 1989–ஆம் ஆண்டு நான் முதலிலே குறிப்பிட்டேன் மூன்றாவது முறையாக முதலமைச்சராக இருந்தேன் என்று அப்போதுதான் இந்த மகளிர் குழுக்களை உருவாக்கினேன் என்று சொன்னேனே அந்த ஆண்டு சட்டப்பேரவையில் ஒரு சட்டம் கொண்டு வந்தேன். என்ன சட்டம் தெரியுமா? பெற்றோர்களுடைய சொத்தில் ஆண்களுக்கு உரிமை இருப்பதைப் போல பெண்களுக்கும் உரிமை உண்டு என்ற சட்டத்தைக் கொண்டு வந்தேன்.

அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த போது என்ன பேசினேன் தெரியுமா? “1929–ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் சுயமரியாதை கட்சிக் கொடியை பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களுடைய தந்தை பி.டி.ராஜன் அவர்கள் ஏற்றி வைக்க, சௌந்தரபாண்டியனார் அவர்கள் தலைமை வகித்த அந்த மாநாட்டில் தந்தை பெரியார் கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் இனிமேல் பெண்களுக்கும் ஆண்களைப் போல சொத்தில் சம உரிமை வேண்டும் என்ற தீர்மானமாகும். அதை அறுபதாண்டுகளுக்குப் பிறகு பெரியாருடைய மாணவனாகிய நான் இங்கே சட்டமாகக் கொண்டு



வருகிறேன்'' என்று சொல்லி தமிழக சட்டமன்றத்திலே அதைச் சட்டம் ஆக்கினோம்.

**ஆதிதிராவிடர் – பழங்குடியினர் பெண் கல்விக்கு ஊக்கத் தொகை**

அது மாத்திரமல்ல. பெண்களுக்காக என்னென்ன காரியங்கள், திட்டங்கள் தீட்டப்பட்டன என்பதையெல்லாம் வரிசையாகச் சொல்ல நேரம் இல்லை. ஒன்றே ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையிலே காட்டப்பட்ட புள்ளி விவரம் அது. பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆதிதிராவிடர் சமுதாயத்தில், பழங்குடியினர் சமுதாயத்தில் உள்ள பெண்களுடைய கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு 3–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரையில் தொடர்ந்து கல்வி பயிலும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி இன மாணவிகள் 60 ஆயிரம் பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் தலா 500 ரூபாய் வீதமும், 6–வது வகுப்பிலே கல்வி பயிலும் 30 ஆயிரம் மாணவிகளுக்கு ஆண்டுக்கு தலா 1000 ரூபாய் வீதமும் ஊக்கத் தொகை இந்த ஆட்சியிலே வழங்கப்படுகின்றது. இதற்கு இந்த நிதியாண்டில் ஆறு கோடி ரூபாய் செலவிடப்படுகிறது.

ஆதிதிராவிட மாணவிகளுக்கு மாத்திரமல்ல, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகளுக்கு ஆறு கோடி ரூபாய் செலவில் மூன்றாம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை படிக்கின்றவர்களுக்கு 60 ஆயிரம் பேருக்கு ஆண்டு தோறும் தலா 500 ரூபாயும், 6–ஆம் வகுப்பு பயிலுகின்ற 30 ஆயிரம் பேருக்கு ஆண்டு தோறும் தலா 1000 ரூபாயும் வழங்கப்பட்டு வருகின்றது. நான் இதைக் குறிப்பிடுவதற்கு காரணம் ஒரு பெண் படித்தால் அந்தக் குடும்பமே படித்ததாகப் பொருள். ஒரு ஆண் படித்தால் அந்தக் குடும்பம் படித்ததாகப் பொருள் அல்ல. என் வீட்டுப் பையன் படிக்கிறான் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளலாம், அவ்வளவுதான். பெண் படித்தால் அந்தப் பெண் வீட்டிலே இருக்கின்ற மற்ற பிள்ளைகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கின்ற அளவிற்கு தன்னுடைய கடமையைச் செய்வாள். அந்த வீடே படித்ததாக அர்த்தம். எனவேதான் பெண் கல்வியின் அவசியத்தை உணர்ந்து இந்த ஊக்கத் தொகையை நாங்கள் வழங்கி வருகிறோம்.

**நாட்டிற்குத் தொண்டாற்றக்கூடிய நல்ல தியாக சீலர்களாக மாற வேண்டும்**

இதைப் போல பெண்களுக்கு ஏராளமான திட்டங்களை நிறைவேற்றியுள்ள இந்த அரசின் சார்பில் இந்தச் சமுதாயத்தின் வேராகத் திகழ்கின்ற, விழுதுகளாக இருக்கின்ற, மரத்தின் கிளைகளாக இருக்கின்ற, பூக்களாக இருக்கின்ற, கனிகளாக இருக்கின்ற, மாதர்குலத் திலகங்கள் மேலும் மேலும் முன்னேற மேம்பட அவர்கள் தங்களுடைய இல்லத்துக் கிழத்திகளாக மாத்திரமல்லாமல் நாட்டிற்கு தொண்டாற்றக் கூடிய நல்ல தியாக சீலர்களாக அவர்கள் மாற வேண்டும், வளர வேண்டும் என்பதற்காக நாங்கள் நிறைவேற்றி வருகின்ற திட்டங்களில் ஒரு மகத்தான திட்டம்தான் இந்த மகளிர் குழுத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தை தம்பி கோ.சி.மணி இங்கே மாநகராட்சிக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இப்போது அடி மட்டத்திலிருந்து பேரூராட்சி, நகராட்சி வரையிலே வந்திருக்கின்ற இந்தத் திட்டம் மாநகராட்சி மன்றங்களுக்கும் விரிவடைய வேண்டுமென்று கேட்டார். நான் அவருடைய கோரிக்கையை ஏற்று மாநகராட்சி மன்றங்களுக்கும் இந்த திட்டம் விரிவடைய நிச்சயமாக ஆணை பிறப்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, இன்னொன்று – இந்தக் குழுக்கள் ஆங்காங்கு இன்றைக்கு அமைக்கப் பட்டாலுங்கூட, ஒரு சிரமம் இருப்பதாக அறிகிறேன். சில தாய்மார்களும் சகோதரிகளும் சொன்னார்கள். அவர்கள் சார்பாக அமைச்சர்கள் துரைமுருகனும் ஆர்க்காடு வீராசாமியும் மேடையிலே என்னிடம் சொன்னார்கள். ஆங்காங்கு அமைந்திருக்கின்ற குழுக்கள் தங்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேச – கிராமத்துப் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாட – என்னென்ன திட்டங்களைத் தீட்டி செயல்படலாம் என்பதைப் பற்றிச் சிந்திக்க – ஆலோசிக்க எங்களுக்கெல்லாம் ஒரு இடம் இல்லாமல் இருக்கிறது, அதற்கு ஒவ்வொரு கிராமத்திலும் – இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள கிராமங்களிலே ஒரு சிறிய சமுதாயக் கூடம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மீண்டும் நான் படிக்கப் போகின்ற பட்ஜெட்டில் விரைவில் நான் படிக்கப் போகும் பட்ஜெட்டில் நிச்சயமாக அப்படி இந்தக் குழுக்களுக்கெல்லாம் ஒரு சமுதாயக் கூடம் ஒவ்வொரு ஊரிலும் கட்டப்படும் என்று அறிவித்து உங்களுடைய எழுச்சிக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

*–மதுரையில் 13.2.2001 அன்று நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.* ★

# உலகளாவிய வாய்ப்புகள்

இந்த இனிய எழுச்சிமிக்க நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் நான் மிகுந்த பெருமிதத்தோடு வரவேற்கின்றேன். வள்ளுவர் கோட்டத்திலே நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்தப் பாங்கினைப் பார்க்கும்போதே என் உள்ளம் பரவசத்தால் துள்ளுகிறது. மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த எழுச்சி பாராட்டத்தக்கது, வரவேற்கத் தக்கது. இது முதன்முதலாக இந்தியாவிலே நம்முடைய தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டுள்ள முதல் முயற்சி என்பதை நான் எண்ணிப் பார்த்து மிகுந்த களிப்படைகிறேன். முதல் முயற்சிக்கே இவ்வளவு பெரிய வரவேற்பு இருக்கிறதென்றால், அதற்குக் காரணம் இந்த நிகழ்ச்சியின் தலைப்புதான்.

இது ஒரு வழிகாட்டி நிகழ்ச்சி. எதற்கு வழிகாட்டி நிகழ்ச்சி ? இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்பதற்கு வழி காட்டுகின்ற நிகழ்ச்சி. இதிலிருந்தே வேலைவாய்ப்பு இல்லாமல் எத்தனை இலட்சக் கணக்கான இளைஞர்கள் இந்த நாட்டிலே அதனை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்பது மிக நன்றாகத் தெரிகின்றது. இதை ஊக்கப்படுத்த தமிழக அரசு எடுத்துக் கொண்டுள்ள இந்த முயற்சிக்கு மத்திய அரசும் தன்னுடைய உதவிக் கரத்தை நீட்டுகின்றது என்பதற்கு அடையாளமாக மத்திய அரசின் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, திட்டத்துறை, அமைச்சர் அருண்ஷோரி அவர்கள் வருகை தந்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

வரவேற்புரையாற்றிய திரு ஷெட்டி குறிப்பிட்டதைப் போல அருண்ஷோரி அவர்கள் ஒரு அமைச்சர் என்கிற நிலையிலே மாத்திரம் நாட்டு நடப்புகளை ஆராய்ந்து அறிந்து அதற்கேற்ற நடவடிக்கை எடுக்கக் கூடியவரல்ல. அவர் ஒரு சிறந்த பத்திரிகையாளர். நாட்டில், உலகத்தில் நடைபெறுகின்ற பல நிகழ்ச்சிகளைப் பற்றி பலரும் பல கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்தில் அருண்ஷோரி இதைப் பற்றி என்ன சொல்கிறார் என்று நாடு ஆவலோடு எதிர்பார்ப்பது வழக்கம். அவ்வளவு சிறந்த பத்திரிகையாளர் என்னுடைய நண்பர் அருண்ஷோரி அவர்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால் இன்றைக்கு அறிவுஜீவி என்கின்ற ஒரு சொல்லை அறிவில்லாதவர்களுக்கெல்லாம் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அறிவுள்ள ஒருவருக்கு அது பயன்படுத்தப்படுகிறது என்பதற்கு உதாரணம் நம்முடைய அருண் ஷோரிக்கு அந்த அடைமொழி பயன்படுத்தப்படுவது தான்.




ஆனால் இன்றைக்கு ஒரு பத்திரிகையாளர் என்ற முறையிலேகூட என்னால் வரவேற்கப்பட வேண்டியவர். ஏனென்றால் நானும் ஒரு பத்திரிகையாளன். முதலமைச்சராக நான் இருந்தாலும் கூட என்னுடைய பொது வாழ்க்கையிலே 1942–ஆம் ஆண்டிலேயே நான் பத்திரிகைதான் தொடங்கினேன். ஒரு துண்டறிக்கையாகத் தொடங்கப்பட்ட பத்திரிகைதான் நாளேடாக வெளிவந்து கொண்டிருக்கின்றது. எனவே இந்த நிகழ்ச்சியிலே ஒரு முதலமைச்சரும் ஒரு மத்திய அமைச்சரும் சந்திக்கிறார்கள் என்பதை விட, இரண்டு பத்திரிகையாளர்கள் சந்திக்கின்றார்கள் என்பதுதான் பொருத்தமுடைய ஒன்றாக இருக்க முடியும்.

**நாட்டைப்பற்றி - சமுதாயத்தைப் பற்றி சிந்திப்பவர்களே பத்திரிகையாளர்கள்**

இந்த இரண்டு பத்திரிகையாளர்களும் எதற்காக சந்திக்கிறோமென்றால், பத்திரிகையாளர்களால் தான் உலகத்தை உண்மையாக உணர முடியும். சில பத்திரிகைகள் இருக்கின்றன. உலகத்தைப் பற்றிக் கவலைப்படாமல், சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாமல் தங்களுடைய வாழ்க்கை, தங்களுடைய வருவாய் இவைகளைப் பற்றி மாத்திரம் கவலைப்படுகின்ற சில பத்திரிகைகள் நாட்டிலே இருக்கின்றன. ஆனால் பொதுவாக சமுதாயத்திற்காகப் பாடுபடுகின்ற பத்திரிகைத் துறையாளர்கள் எதைப்பற்றிச் சிந்திப்பார்கள் ? நாட்டைப்பற்றி, இளைஞர் சமுதாயத்தைப் பற்றி, எதிர்கால சமுதாயத்தைப் பற்றி, எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பதைப்பற்றித்தான் பத்திரிகையாளர்கள் சிந்திப்பார்கள். அந்த வகையில் எங்களுடைய சிந்தனைகள் இந்த நிகழ்ச்சியிலே உங்களுடைய எதிர்காலத்திற்காகப் பயன்படும் என்ற நம்பிக்கையோடு இந்த முயற்சியிலே நாங்கள் ஈடு பட்டிருக்கிறோம்.


தமிழ்நாடு நாட்டு நலப் பணித் திட்டம் நடத்துகின்ற ''உலகளாவிய வாய்ப்புகள்' இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் மேற்படிப்பு வழிகாட்டி நிகழ்ச்சி என்ற தலைப்பிலே தான் இன்றைக்கு கண்காட்சி, பொருட்காட்சி, கருத்தரங்கம் இவைகள் எல்லாம் வள்ளுவர் கோட்டத்திலே நடைபெறுகின்றன.

**வேலைவாய்ப்புகளை வழங்குவதில் மிக உன்னிப்பான அக்கறையுடன் பணியாற்றி வருகிறது இந்த அரசு**

இன்றுள்ள இந்த அரசைப் பொறுத்த வரையில் நான் 1969–ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றேன். என்றாலும்கூட அதற்குப் பிறகு மூன்று முறை அந்தப் பொறுப்பையேற்று நான்காவது முறையாக 1996–ஆம் ஆண்டு முதல் இந்தப் பொறுப்பையேற்றிருக்கிறேன். இந்த அரசு 96–ஆம் ஆண்டில் நான்காவது முறையாக பதவிக்கு வந்த பிறகு வேலைவாய்ப்புகளை வழங்கவேண்டும் என்பதிலே மிகுந்த உன்னிப்பான அக்கறை கொண்டு பணியாற்றி வருகின்றது.


உதாரணமாக சிலவற்றைச் சொல்ல வேண்டுமேயானால், வேலைவாய்ப்புப் பதிவு முன்னுரிமைப்படி – சிபாரிசுகள் இல்லாமல் அல்லது வேறு கைமாறு காரியங்கள் இல்லாமல், 41,887 இடைநிலை ஆசிரியர்களுக்கு இந்த அரசு நான்கரை ஆண்டுக் காலத்தில் பணிகளை வழங்கியிருக்கின்றது. 2916 முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றார்கள். 4046 பட்டதாரி ஆசிரியர்களும் 2270 சிறப்பு ஆசிரியர்களும், 964 கல்லூரி விரிவுரையாளர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

காவல்துறையில் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில் இதுவரையில் 2,343 உதவி ஆய்வாளர்களும் (சப்–இன்ஸ்பெக்டர்களும்) 13,472 ஆண் காவலர்களும், 4,052 பெண் காவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் 3,500 காவலர்கள் புதிதாக நியமிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தீயணைப்புத் துறையில் 2,127 தீயணைப்பு வீரர்களும், 113 தீயணைப்பு நிலைய அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 1,000 தீயணைப்பு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு, விரைவில் நியமனம் செய்யப்பட உள்ளனர்.



மக்கள் நல்வாழ்வுத்துறையில் 2,641 மருத்துவர்களும், 1,570 மருத்துவ செவிலியர்களும், கால்நடை மருத்துவத்துறையில் 174 கால்நடை மருத்துவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். பத்திரப் பதிவுத்துறையில் 22,000 இளைஞர்கள் பத்திர எழுத்தாளர்களாக உரிமம் பெற்று வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

நெடுஞ்சாலைத் துறையில் 10,000 சாலைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஊரக வளர்ச்சித்துறையில் 13,000 மக்கள் நலப்பணியாளர்கள்



நியமிக்கப்பட்டுள்ளனர். மின்துறையில் 1000 தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவையல்லாமல், 1996–க்குப் பின் தமிழகத்தின் பல பகுதிகளிலும் பிரம்மாண்டமான பல தொழிற்சாலைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், தொழிற்கல்வி பயின்ற வல்லுநர்கள் எல்லாம் நேரடி வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். மறைமுக வேலை வாய்ப்புகளைப் பெற்றவர்கள் இலட்சக்கணக்கான வர்கள் என்ற நிலையிலே வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த அரசின் இப்போதுகூட நாங்குநேரியிலே ஒரு பெரிய வணிக வளாகத்தை மத்திய அரசினுடைய உதவியோடு சிறப்பு மையம் என்று மத்திய அரசின் வர்த்தக அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்டு ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வேலைவாய்ப்பு பெறக் கூடிய அளவிற்கு மாபெரும் திட்டம் ஏறத்தாழ 8 ஆயிரம் கோடி ரூபாய் அளவிலே மதிப்பீடு செய்யப்பட்டு, அதனுடைய தொடக்க விழா அண்மையிலே ஒரு வாரத்திற்கு முன்பு நடைபெற்றிருக்கின்றது. அது போன்ற பெரிய பெரிய திட்டங்கள் தொழிற்சாலைகள் மூலமாகவும் வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கு இந்த அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது.

அத்துடன் தமிழக இளைஞர்களுடைய ஆற்றலை சீராக மேம்படுத்தி அவர்களுடைய எண்ணம் சமூக விரோதச் செயல்களிலே ஈடுபடாத அளவிற்குத் தடுத்து நிறுத்தி சமுதாய வளர்ச்சிக்கு முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காக இந்த அரசின் சார்பில் தமிழகத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை என்னும் புதிய துறையை உருவாக்கியிருக்கிறோம்..

தமிழக கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள மாணவர்களும் சரி, மாணவர்கள் அல்லாத இளைஞர்களும் சரி மத நல்லிணக்கதோடு சமூக ஒன்றுமையோடு உடல் ஆரோக்கியத்தோடு வாழ உதவுகின்ற வகையில் கிராமப்புறங்களிலே கடந்த ஆண்டு தான் தொடங்கி இதுவரையில் 8 ஆயிரம் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் தமிழ்நாட்டிலே அமைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்வேன்.

எனவே படித்த இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக வழிகாட்டக்கூடிய வகையிலே பலதிட்டங்களை இந்த அரசு இன்றைக்கு தீட்டியிருக்கின்றது. அதற்கு மேலும் மேலும் வழி காட்டவும் உதவிடவும் துணை நிற்கவும் தான் இன்றைய நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதிலே இந்தத் துறை எடுத்துக் கொண்ட முயற்சிக்கு என்னுடைய பாராட்டு. குறிப்பாக முதலமைச்சர் செயலகத்தினுடைய செயலாளர்களில் ஒருவராக இருக்கின்ற அஷோக் வர்தன் ஷெட்டி அவர்களும், அவரோடு உள்ள அலுவலர்களும் பெரிதும் முயற்சி எடுத்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நம்முடைய அருண்ஷோரி அவர்களுக்கு உகந்த ஒரு தேதியாக இந்த இடமும் கிடைக்கக் கூடிய ஒரு தேதியாக இந்தத் தேதி அமைந்தது. ஆனால் நான் முழு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள இயலாமல் வேறு பல நிகழ்ச்சிகளுக்கு இன்றைக்கு நான் முன்பே நேரம் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலும், வேறு சில சந்திப்புகளுக்கு நான் ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் முழுநேரமும் உங்களோடு இருக்க இயலவில்லை. இன்றைக்கு இயலவில்லை என்றாலும் கூட நான் என்றைக்கும் முழு நேரமும் உங்களோடு இருப்பவன் தான், என்றைக்கும் உங்களோடு இருப்பவன் தான் என்பதை மாத்திரம் தெரிவித்து உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

**உலகளாவிய வாய்ப்புகள் - இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் மேற்படிப்பு வழிகாட்டி நிகழ்ச்சியின் கண்காட்சியைத் திறந்து வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17-2-2001 அன்று ஆற்றிய உரை.**

• • •

# கிராம நிருவாக அலுவலர்களுக்கு அலுவலகம்

□ முதலமைச்சர் கலைஞர்

என்னுடைய இளவல் மறைந்த நாஞ்சிலார் அவர்களின் பெயரால் அமைந்துள்ள இந்தப் பந்தலில் குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன். கிராமங்கள் ஒரு நாட்டுக்கு எவ்வளவு இன்றியமையாதவை என்பதை நாட்டின் தலைவர்கள் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்கிய மறைந்தும் மறையாமல் விளங்கிக் கொண்டிருக்கின்ற மகாத்மா காந்தி போன்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கிராமங்கள் வளர்ந்தால்தான், கிராமங்களின் வளம் செழித்தால்தான் கிராமங்களில் நாகரிகத்தின் நிழல் படிந்தால்தான் கிராமங்களில் உலகத்தில் வளர்ந்து வருகின்ற விஞ்ஞானத்தின் ஒலி கேட்டால்தான் ஒளி பரவினால்தான் நாடு வாழ முடியும். ஏனென்றால் நாட்டிற்குள்ளேதான் கிராமங்களும் நகரங்களும் அடங்கியிருக்கின்றன.

**கோரிக்கை வைக்காத மாநாடு என்று சொன்னார்கள்**

அந்தக் கிராம சமுதாயத்தை வாழ்விக்க வேண்டிய பெரும் கடமையிலே ஈடுபட்டிருக்கின்ற உங்களையெல்லாம் சந்திப்பதை நான் ஒரு நல்வாய்ப்பாகவே கருதுகின்றேன். நான் முதலிலே இந்த மாநாட்டிலே கலந்துகொள்ள வேண்டுமென்று என்னிடத்திலே மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் தங்கவேல், ஐ.ஏ.எஸ். அவர்கள் கேட்டபோதும் என்னைச் சார்ந்துள்ள என்னுடைய முதலமைச்சர் செயலகத்திலுள்ள செயலாளர்கள் அறிவித்தபோதும் கோரிக்கைகள் ஏதும் உண்டா இருந்தால் கொடுங்கள் அவைகளையெல்லாம் பரிசீலித்துவிட்டு அங்கே செல்கிறேன் என்று சொன்னேன். என்னுடைய நல்வாய்ப்பினையோ, அல்லது உங்களுடைய துரதிஷ்டமோ "எந்தக் கோரிக்கையும் வைக்க மாட்டார்கள் நன்றி கூறுவதற்காகத்தான் கூப்பிட்டிருக்கிறார்கள். கோரிக்கை வைக்கக் கூடாதென்ற நிபந்தனையோடு இந்த மாநாட்டிலே நீங்கள் கலந்து கொள்கிறீர்கள்" என்று சொன்னார்கள்.

நான் நம்பினேன். ஆனால் இங்கே பொதுச் செயலாளர் பல கோரிக்கைகளைப் படித்து அவைகளை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். வருவாய்த்துறை அமைச்சர் தம்பி ரகுமான்கான் பேசும்போது நீங்கள் கணவன் மனைவிடத்திலே கோரிக்கை வைப்பதைப் போல வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லி ஒரு அருமையான உவமைக்கு என்னை ஆளாக்கினார். அவருடைய அனுபவம் போலும். கணவன் மனைவியிடத்திலே கோரிக்கை வைத்துத்தான் எதையும் பெற வேண்டிய சூழ்நிலை இருப்பது இல்லறத்திற்கு நல்லதல்ல. இருவரும் மனம் ஒத்து கோரிக்கைகளைப் பரிமாறிக் கொள்வதுதான். இல்வாழ்வு என்பார்கள். ஒருவேளை அதிக பசி காரணமாகவோ, அவசரத்தின் காரணமாகவோ வருவாய்த்துறை அமைச்சர் கணவன் மனைவியிடத்திலே கோரிக்கை வைத்திருப்பதைப் போல வைத்திருக்கிறீர்கள் என்று சொன்னார்.

அதிலே ஒரு நயம் இருப்பதாக நான் கருதுகின்றேன். மனைவியாக இருப்பவர்கள் கணவனுடைய கோரிக்கையைப் புறக்கணிப்பது போல் என்ற அந்த அர்த்தத்திலே கூட அவர் சொல்லியிருக்கலாம். அதற்கு எடுத்துக்காட்டாக உங்களுக்கு அனேகமாக தொண்ணூறு விழுக்காடு ஆதரவாகவே வருவாய்த்துறை ஆணையர் சத்ரசால் சிங், ஐ.ஏ.எஸ். பேசியிருக்கிறார். எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நான் இப்போது மேடையிலேதான் இந்தப் புத்தகத்தை புரட்டிப் புரட்டி பார்த்தேன். படித்துப் பார்த்தேன் என்று கூட சொல்ல



முடியாது. ஏனென்றால் படித்துப் பார்ப்பதற்கோ, அதைப்பற்றி ஆழ்ந்து யோசிப்பதற்கோ எனக்கு நேரமில்லை. மேடையிலே தான் இதை வாங்கிப் பார்க்க முடிந்தது.

**நீங்கள் தெரிவித்த கோரிக்கைகள் பற்றி நிச்சயமாக பரிசீலிப்பேன்**

ஆணையர் சத்ரசால்சிங் போன்றவர்கள், வருவாய்த்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் எல்லாம் கலந்து பேசி இதில் எந்தெந்த கோரிக்கைகளை எப்படி நிறைவேற்றலாம் எவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியும், எவைகளை ஓரளவு நிறைவேற்ற முடியும் என்பதையெல்லாம் யோசிப்பதற்கு நீங்கள் எனக்கு நேரம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பதினோராவது சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவுற்று நிறைவுரையும் ஆற்றப்பட்டு ஆகிவிட்டது. இந்தக் கோரிக்கைகள் இடம்பெற வேண்டுமென்றால் ஒரு பட்ஜெட்டிலேதான் இடம்பெற வேண்டும். இது இல்லாமல் ஒரு அவசரக் கூட்டம் போட்டு அறிவிப்பது என்பது இயலாத காரியம். இப்போது அது முறையுமல்ல. ஏனென்றால் பெரிய, பெரிய திட்டங்களை பெரிய, பெரிய சலுகைகளைத் தேர்தல் நேரத்திலே அறிவிப்பது என்பது அவ்வளவு நாகரிகமான ஒன்றல்ல. மிக அவசரமாக நாளைக்கே செய்து முடிக்க வேண்டிய காரியமாக இருந்தால் அவசரச் சட்டத்தின் துணையை நாடலாம். இது நாளைக்கே உங்களுக்கு முடியாவிட்டால் அதனால் ஒன்றும் ஆகிவிடப் போவதில்லை. அது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

இப்படிச் சொல்வதால் இந்தக் கோரிக்கைகளை யெல்லாம் நான் ஏற்கவில்லை என்று பொருள் அல்ல. இவைகளை நிச்சயமாக பரிசீலிப்பேன். அதிகாரிகளோடு, அமைச்சர்களோடு தேவைப்பட்டால் அமைச்சரவைக் கூட்டத்திலும் கலந்து பேசுவேன்.

இதிலே உள்ள கோரிக்கைகள் அத்தனையையும் உள்ளடக்கிய விதமாக இந்தக் கோரிக்கை புத்தகத்தின் கடைசி பக்கத்தில் புதிய ஐந்து குறள்கள் எழுதப் பட்டிருக்கின்றன. திருக்குறள் அல்ல. திருக்குறளைப் போன்ற கோரிக்கை குறள்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது "ஒழுக்கம் நேர்மையோடு சிறப்புறும் செயல்பாடு இருப்பின் பதவி உயர்வு" என்று எழுதப்பட்டுள்ளது. அதாவது ஒழுக்கம் வேண்டும், நேர்மை வேண்டும், சிறப்பான செயல்பாடு வேண்டும். இவைகளெல்லாம் இருந்தால் பதவி உயர்வு தானாகவே கிடைக்கும் என்று நீங்களே குறள் எழுதியிருக்கிறீர்கள். இது நான் உங்களுக்குத் தருகின்ற உறுதிமொழி. ஒழுக்கம் இருந்தால், நேர்மை இருந்தால் சிறப்புறும் செயல்பாடு இருந்தால் பதவி உயர்வு நிச்சயமாக உண்டு என்பதை நான் நீங்கள் சொன்ன குறள் மூலமாகவே உங்களுக்கு பதிலளிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே "வளர்ச்சியும் மாற்றமும் இல்லாயின் மரம்கூட வழங்காது பயனிங்கு காண்" என்ற குறளாகும். நீங்கள் என்னை கொஞ்சம் எச்சரித்திருக்கிறீர்கள். அதாவது வளர்ச்சி இருக்க வேண்டும், மாற்றம் இருக்க வேண்டும், அப்படியே ஒரே நூலில் போய்க் கொண்டிருக்கக் கூடாது. செக்குமாடு போல சுற்றிக் கொண்டிருக்கக் கூடாது. மாற்றங்கள் இருக்க வேண்டும், அந்த மாற்றங்களை நிர்வாகத்திலே நீங்கள் செய்யுங்கள், இல்லாவிட்டால் மரம்கூட பயன் வழங்காது. மரமே வழங்காது என்றால் மனிதர்களாகிய நாங்கள் வழங்குவோமோ என்று என்னைப் பார்த்து எச்சரித்திருக்கிறீர்கள். அந்த எச்சரிக்கையைப் புரிந்து கொண்டு அந்த எச்சரிக்கை இடம் இல்லாமல் நடந்து கொள்வேன் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கிராம அலுவலர்கள் தங்குவதற்கான தேவைகளை ஏற்றுக் கொள்கிறேன்**

"அலுவலகம் இல்லாதார் அலுவலர்கள் கம்பெனிக்கு அவலமே சூழும் அறிக" என்று ஒரு குறள் எழுதியிருக்கிறீர்கள். இதெல்லாம் நான் எழுதியதல்ல. இது குறளோவியம் அல்ல. அதாவது கிராம அலுவலர்களுக்கு ஆங்காங்கு அலுவலகங்கள் வேண்டும். எப்படி சட்டமன்ற, உறுப்பினர்களுக்கெல்லாம் அவரவர் தொகுதியிலே ஒரு அலுவலகம் இருந்தால் அவரை சந்திப்பதற்கு அந்தத் தொகுதி மக்கள் எல்லோருக்கும் எளிதாக இருக்கிறதோ அதைப் போல கிராம அலுவலர்களுக்கு ஒரு அலுவலகம் இருக்குமேயானால் அந்தப் பகுதி மக்கள் அங்கே அவரை சந்தித்து குறைகளைச் சொல்ல பயன்படும். நான் இதை வரவேற்கிறேன். ஏனென்றால் இப்போது சில புகார்கள் வருகின்றன. இருந்தாலும் நான் நம்பவில்லை. இப்போது கிராம அலுவலர்கள் யாரும் கிராமங்களிலே தங்குவதில்லை. பக்கத்திலே உள்ள நகரங்களிலே தங்கிக் கொண்டு அங்கிருந்து சைக்கிளிலே போய்க் கொண்டு வருகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அப்படிச் செல்லாமல் ஆங்காங்கு ஒரு அலுவலகத்தை அமைத்து அந்த அலுவலகத்தை ஒட்டினால் போல் குடியிருக்கின்ற இடத்தையும் சேர்த்து அமைத்து விட்டால் அங்கேயே கிராம அலுவலர்கள் தங்குவதற்கு வசதியும், வாய்ப்பும் ஏற்படும் என்பதால் இந்தக் கோரிக்கையை நான் இப்போதே ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் இவைகளையெல்லாம் பட்ஜெட்டிலேதான் அறிவிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பட்ஜெட்டிலே அறிவிப்பதற்கு என்ன பொருள் என்றால் அதற்காக நிதி ஒதுக்க வேண்டும். நிதி ஒதுக்கீடு மசோதா நிறைவேறினால்தான் அறிவிக்கப்பட்ட திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற இயலும் என்பதை நீங்களெல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்றே கருதுகிறேன்.

எனவே, இத்தகைய இந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் நான் பரிசீலித்து உங்களுக்கு நல்ல செய்தியைச் சொல்வேன் என்பதைத் தெரிவித்து நீங்களும் எனக்கு நல்ல செய்தியைச் சொல்லுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

– தமிழ்நாடு கிராம நிருவாகஅலுவலர்கள் முன்னேற்ற சங்கத்தின் 2–வது மாநில மாநாட்டில் 13.2.2001 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை. •

# கோவை காவல்துறை ஆணையர் அலுவலகத் திறப்பு விழாவில் முதலமைச்சர் கலைஞர்

இங்கு நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைத்ததிலும், அதன் தொடர்பாக வேறு பல கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டியதிலும், பல்வேறு நலத் திட்டங்களை வழங்கியதிலும், குறிப்பாக கோட்டை அமீர் குடும்பத்தாருக்கு அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள இல்லத்திற்கான சாவியை வழங்கியதிலும் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறேன்.

இந்த நகரத்தில் நானும் ஒரு காலத்திலே உங்களோடு, மன்னிக்கவும் உங்களுடைய தந்தை யாரோடு – பாட்டனாரோடு பழகி இந்த ஊரை நன்கு அறிந்தவன் என்ற முறையில் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் ஒரு தனி இன்பம் இருப்பதை நான் காணுகின்றேன்.

இன்றைய நிகழ்ச்சியில் காலையிலே இந்த மாவட்டத்தில் உடுமலைப்பேட்டையில் பகுத்தறிவு கவிராயர் நாராயண கவிராயருடைய பெயரால் அமைந்துள்ள மணிமண்டபத்தைத் திறந்து வைத்து வழி நெடுக இந்த மாவட்ட மக்களுடைய வரவேற்பையும், வாழ்த்தையும் பெற்றுக்கொண்டு இப்பொழுது உங்களையெல்லாம் சந்தித்து அடுத்து மகளிர் குழுக்கள் மாநாட்டு நிகழ்ச்சி ஒன்றுக்கு சென்றுவிட்டு, அதன் பின்னர் சென்னை செல்ல வேண்டிய அவசியத்திலே நான் இருக்கின்றேன்.

இதற்கிடையே உங்களை காணுகின்ற இந்தப் பெரும் வாய்ப்பு உள்ளபடியே எனக்குக் கிடைத்த நல்வாய்ப்பு என்றே கூற வேண்டும். ஏற்கனவே இருமுறை இந்த நிகழ்ச்சிகளுக்கு நான் வருவதாக ஒப்புதல் அளித்து வர இயலாமல் போயிற்று. வர இயலாமல் போனாலும்கூட எப்படியும் வந்துவிடுவேன் என்பதை நிரூபிக்கின்ற வகையிலே இன்றைக்கு வந்திருக்கின்றேன் என்பதை நீங்களெல்லாம் அறிந்து மகிழுகின்றீர்கள், என்ன அர்த்தத்திலே மகிழுகின்றீர்கள் என்பது தெரியாது.

காவலர்கள் ஒரு காலத்தில் மக்களால் நேசிக்கப் பட்டவர்கள் என்று சொல்ல முடியாது. தூசிக்கப்பட்டவர்கள். குறிப்பாக அந்நிய ஆதிக்கம் இந்தியாவிலே இருந்தபோது இந்திய நாட்டு மக்கள் சின்னஞ்சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை காவலர்கள் எவ்வளவு நேர்மையானவர்களாக இருந் தாலும் எவ்வளவு கடமை உணர்ச்சி உள்ளவர்களாக இருந்தாலும் அவர்கள் கடமையாற்றுகின்ற நேரத்தில் அது இந்த நாட்டின் சுதந்திரத்திற்கு எதிராகச் செயல்படுகிறார்கள் என்ற அந்த எண்ணத்தோடு அவர்கள் வெறுக்கப்பட்டவர்கள். நம்முடைய தெருவைச் சேர்ந்த உறவின்முறையாகக் கூட இருக்கலாம். அண்ணன் தம்பி முறையாகக் கூட இருக்கலாம். நம்முடைய ஊரைச் சேர்ந்தவராகக்கூட இருக்கலாம். ஆனால் அவர் காக்கிச் சட்டையையும், சிவப்பு தொப்பியையும் மாட்டிக் கொண்டால், அவர் எந்த அளவுக்குக் கிண்டலுக்கு உரியவரானார் என்பதையெல்லாம் பழைய காலத்திலே என்னுடைய இளம் வயதிலே நான் நன்றாக அறிந்திருக்கின்றேன்.

இன்றைக்கு நிலைமை முழுமையாக மாறி விட்டதா என்றால் இல்லை. இன்றைக்கும்கூட நல்ல முறையிலே பணியாற்றுகின்ற காவலர்கள் கூட கேலிக்குரிய வர்களாக சித்தரிக்கப்படுவதும், கிண்டலுக்குரியவர் களாக சித்தரிக்கப்படுவதும் நாட்டில் ஒரு மேனியா என்பார்களே அப்படி ஆகியிருக்கிறதென்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது.

**23-2-2001 அன்று**
**கோவை காவல்துறை ஆணையர் அலுவலகம்**
**திறந்துவைத்து**
**முதலமைச்சர் கலைஞர்**
**ஆற்றிய உரை**

''உங்கள் நண்பன்'' என்று காவலர்களைப் பற்றி ஒரு படம் பல ஆண்டுகளுக்கு முன்பு பெருந்தலைவர் காமராஜர் ஆட்சி என்று எனக்கு நினைவு. அப்பொழுது அந்தப் படம் எடுக்கப்பட்டு காவலர்கள் என்றால் அவர்கள் மனித சமுதாயத்திலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல, அவர்களும் மனிதர்கள் தான் அவர்களுக்கும் உள்ளம் உண்டு. அவர்களுக்கும் குடும்பம் உண்டு, உறவு உண்டு, உணர்வுகள் உண்டு என்பதை எடுத்துக்காட்டுகிற வகையில் அந்தப் படம் அப்பொழுது அமைந்தது.



அதற்குப் பிறகுகூட இன்றைக்கும் காவல்துறை என்றால் சில பேருக்கு ஒரு கசப்பு. ஒரு காழ்ப்பு உணர்ச்சி இருக்கிறது. அதிலும் குறிப்பாக சில அரசியல் கட்சிகளுக்கு எல்லா அரசியல் கட்சிகளையும் சொல்லமாட்டேன். குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளுக்கு காவல்துறை என்றாலே மிக வெறுப்போடு அதைப் பார்க்கின்ற தன்மை இன்றைக்கும்கூட இருப்பதை என்னால் உணரமுடிகிறது. அது காலங்காலமாக ஏற்பட்ட பழக்கமா? அல்லது காவல் துறையினர் தங்களுடைய தேவையற்ற பணிகளைச் சமூக விரோத செயல்களையெல்லாம் கண்காணித்து கடமை உணர்ச்சியோடு செயல்பட்டு கண்டிக்கிறார்கள் தண்டனைக்குட்படுத்துகிறார்கள் என்ற காரணத்தால் ஏற்பட்ட வெறுப்பா என்ற அந்த விளக்கங்களுக்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை. இருந்தாலும் அந்தச் சூழ்நிலை இருக்கின்றது.

**ஒருவர் செய்கின்ற தவறால் அந்தத் துறைக்கு இழுக்கு**

இது எப்படி ஏற்படுகிறதென்றால், யாரோ ஒரு சிலர் செய்கின்ற காரியங்களால் மொத்த துறைக்கேகூட ஒரு இழுக்கு ஏற்பட்டு விடுகின்றது. ஆனால் அரசியல் ஆகட்டும் அல்லது வேறு பல தொழில்கள் ஆகட்டும் அதிலே ஒருவர் செய்கிற தவறு இன்றைக்கும் மொத்தத்திலே எல்லோரையும் பாதிக்கின்ற அளவிலே ஏற்பட்டிருக்கின்றது. நீ என்ன அரசியல்வாதியா? அரசியல்வாதி என்று சொன்னாலே இந்தக் காலத்தில் வேண்டாத தொடத்தகாத ஒரு ஆள் என்ற அளவிற்கு இந்தக் காலத்திலே ஆகிவிட்டது. அரசியல்வாதி என்பதற்கு அப்படிப்பட்ட ஒரு அசிங்கமான உணர்வை எழுப்பக்கூடிய ஒரு சொல்லாக அந்தச் சொல் இன்றைக்கு ஆகியிருக்கிறது.

அப்படிச் சொல்கிறவர்கள் யார் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு துறையிலும் ஒரு கெட்டவன் இருப்பான் அல்லது பத்து கெட்டவர்கள் இருப்பார்கள். அல்லது நூறு பேர் இருப்பார்கள். அதற்காக இந்த மொத்தத் துறையே அழுக்குப்பட்டது என்கின்ற கணக்குப் போடக்கூடாதென்பதுதான் என்னுடைய கருத்தாகும். டாக்டர்களிலே சில பேர் தவறு செய்வார்கள் என்பதற்காக டாக்டர் சமுதாயத்தையே குறை கூறக்கூடாது. ஆசிரியர்களிலே ஓரிருவர் தவறு செய்பவர்கள் என்பதற்காக ஆசிரியர் சமுதாயமே குற்றமுடைத்து என்று சுட்டிக் காட்டிவிட முடியாது. அதைப் போலதான் அரசியல்வாதிகளில் ஓரிருவர் ஊழல் செய்தார்கள் என்பதற்காக அரசியல்வாதியே ஊழல் பேர்வழிதான் என்கின்ற மொத்த இலக்கணத்தை



வகுத்துவிட முடியாது.

அதேபோன்று காவல்துறையிலே உள்ள ஒரு சிலர் தவறாக நடந்து கொள்கிறர்கள், கடமையை மறந்து செயல்படுகிறார்கள், அல்லது ஆற்ற வேண்டிய கடமைக்கு எதிராக பணியாற்றுகிறார்கள் – இப்படி ஒரு சிலர் இருக்கிற காரணத்தால் அந்தத்துறைக்கே மாசு வந்து சேருகிறது. இதை மனதிலே வைத்துக் கொண்டுதான் ஒவ்வொரு துறையையும் நாம் பார்க்க வேண்டும். அந்தத் துறையே மோசமானது என்கின்ற முடிவுக்கு யாரும் வரக்கூடாது.

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்வேன். யார் யாரிடத்திலே என்னென்ன திறமை இருக்கிற தென்பதற்கு அடையாளமாக ஒன்றிரண்டை சொல் கிறேன். காவலர்களுக்கு வீட்டுவசதிக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டு காவலர்களுக்கு தேவையான வீடுகளை கட்டித் தருவது என்ற ஒரு திட்டம் அரசிடம் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே பணியாற்று கின்றவர்கள் ஏதோ தங்களை ஒதுக்கி விட்டார்கள் என்று கருதுவார்கள். ஒரு பெரிய போலீஸ் ஆபீசரை கொண்டு போய் வீட்டுவசதி திட்டத்தின் டைரக்டர் நீங்கள் தான் என்று அமர்த்தினால் – பார், பார் அவரை முதலமைச்சர் ஒதுக்கி விட்டார் என்று கருதுவார்கள். அங்கேயும் தங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டக் கூடியவர்கள் இருக்கிறார்கள், குறிப்பாக தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதி வாரியத்திற்கு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நான் டைரக்டராக ஒரு பெரிய போலீஸ் அதிகாரி–அவர் டி.ஜி.பியாக ஆகியிருக்க வேண்டும். ஆனால் டி.ஜி.பி.யாக ஆக்காமல், வீட்டு வசதி வாரியத்துறையினுடைய பொறுப்பிலே அவரை அமர்த்தினேன். எல்லோரும் சொன்னார்கள், ''இவரை வேண்டுமென்றே முதலமைச்சர் பழி வாங்கிவிட்டார்'' என்று சொன்னார்கள். ஆனால் அவர் அந்தத் துறையிலே பணியாற்றி நானே வியக்கின்ற அளவிற்கு இதுவரையில் தமிழ்நாட்டில் காவல்துறை நண்பர்களுக்குக் கட்டித் தர முடியாத அளவிற்கு, அவ்வளவு வீடுகளை அவர்களுக்கு கட்டித் தந்து என்னுடைய பெருமதிப்புக்கு ஆளானார். அவர் தான் இன்றைய டி.ஜி.பி. நம்முடைய ராஜகோபாலன் அவர்கள் என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று கோயம்புத்தூரில் தகராறு எல்லாம் ஏற்பட்டு, அதற்கு போலீஸ் அதிகாரிகளும் ஒரு வகையில் காரணமாகி விட்டார்கள். அவர்களும் சரியாக நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களுடைய அலட்சியத்தால் அல்லது அவர்களுடைய பொறுப்பற்ற தன்மையால் இப்படியெல்லாம் நிகழ்ந்து விட்டது என்ற சூழ்நிலை உருவானபோது நான் என்னுடைய செயலாளர்களை அழைத்து ''வேறு ஒருவரை இங்கே ஆணையராக நியமிக்கலாம், யாரை நியமிக்கலாம் ?'' என்று கேட்ட போது, திருச்சியிலே இராதாகிருஷ்ணன்

என்று ஒருவர் இருக்கிறார் அவரை நியமிக்கலாம் என்றார்கள். நான் சொன்னேன், "கோயம்புத்தூர் கலவரப் பகுதியாக ஆகியிருக்கிறது இந்தச் சூழ்நிலையிலே திருச்சியில் அமைதியாக இருக்கிற அவர், கோயம்புத்தூருக்குப் போக விரும்புவாரா ? என்று கேட்டுச் சொல்லுங்கள்'' என்றேன்.

**அரசியல் தலையீடு இருக்காது; உங்கள் கடமையைச் செய்யுங்கள்**

மறுநாள் எனக்குப் பதில் சொல்லப்பட்டது. "போய் கேட்டோம். எந்த அரசியல் தலையீடும் இல்லாமல் இருந்தால் நான் கோயம்புத்தூருக்குச் சென்று வேலை பார்க்கத் தயாராக இருக்கிறேன் என்று அவர் சொல்கிறார்' என்று குறிப்பிட்டார்கள். உடனே எனக்கு ஒரு ஆசை "அப்படிப் பட்ட ஆளை நான் பார்த்தாக வேண்டும். முதலில் சென்னைக்கு வரச்சொல்லி என்னைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு கோயம் புத்தூருக்குப் போகச் சொல்லுங்கள்'' என்றேன்.

என்னைப் பார்க்க வந்தார், ஒரு ஸ்டூடண்ட் மாதிரிதான் இருந்தார். இப்பொழுது பார்த்தாலே தெரியும் உங்களுக்கு. வந்தார். நான்கூட பார்த்தேன். இவரா கோயம்புத்தூர் கலவரத்தை அடக்கப்போகிறார் என்று.

உளி பெரிய சிலையை செய்கிறது அல்லவா ? உளி சிறியதுதான். திருவள்ளுவர் சிலையை செய்தது யார் ? உளியல்லவா! நான் அப்பொழுது கேட்டேன். ''என்ன உங்களுக்கு இஷ்டமா ? அரசியல் தலையீடு எல்லாம் கூடாது என்று சொன்னீர்களாம். என்னுடைய ஆட்சியில் கடந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி, என்றைக்கும் அரசியல் தலையீடு இருந்ததில்லை. இருக்கவும் இருக்காது. நீங்கள் கவலையில்லாமல் போய் உங்களுடைய கடமையைச் செய்யலாம்'' என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.

இந்த இராதாகிருஷ்ணனைப் பற்றி இந்த இராதாகிருஷ்ணனுக்குத்தான் கொஞ்சம் வருத்தமே தவிர, வேறு யாருக்குமில்லை. இரண்டு இராதா கிருஷ்ணனும் நல்லவர்கள் தான் என்னைப் பொறுத்தவரையில். ஏனென்றால் இராதாகிருஷ்ணன் என்ற பெயரே நல்ல பெயர். ஜனாதிபதி இராதா கிருஷ்ணனைப் பற்றி நாமெல்லாம் கேள்விப்பட்டிருக் கிறோம், அவர் எவ்வளவு நல்லவர் என்று. அது மாதிரிதான் இந்த இரண்டு இராதாகிருஷ்ணன்களும் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலுங்கூட இன்றைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் பேசிய பேச்சைக் கேட்டபிறகு எவ்வளவு பண்பார்ந்த முறையில் அவர் பேசினார் என்பதை எண்ணிப் பார்த்து நான் மிகுந்த பெருமையடைகிறேன். மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

கோவை மாநகரத்தில் வாழ்ந்தவன் என்கின்ற முறையில் இங்கே வாழுகின்ற உங்களையெல்லாம் மகிழ்ச்சியோடு பார்க்கின்ற இந்த நேரத்தில் ஒன்றிரண்டு கருத்துக்களை மேலும் உங்கள் முன்னால் வைக்க நான் விரும்புகின்றேன்.

காவல்துறையைப் பொறுத்த வரையிலே இந்த ஆட்சியில் எவ்வளவோ முன்னேற்றமான காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. நான் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு 96–ஆம் ஆண்டு சட்டமன்றத்திலேயே சொன்னேன்.

ஈரல் முழுவதும் கெட்டுப் போய் விட்டால் அதைச் சரிப்படுத்த முடியாது. கிட்டத்தட்ட 99 சதவிகிதம் ஈரல் கெட்டுப் போயிருந்தாலும்கூட மிச்சம் 1 சதவிகிதம் இருந்தாலும்கூட ஆளைப்பிழைக்க வைத்து விடலாம். அதைப்போல காவல்துறையினுடைய ஈரல் தமிழகத்திலே காவல்துறை எனப்படும் ஈரல் 99 சதவிகிதம் கெட்டிருக்கிறது. 1 சதவிகிதம் தான் மிச்சமிருக்கிறது. ஏதோ பிழைக்க வைக்க முடியுமா பார்க்கிறேன் என்று சட்டமன்றத்திலே சொன்னேன். அந்த 1 சதவிகித மிச்சத்தை வைத்துக் கொண்டு இன்றைக்கு காவல்துறையை மாத்திரமல்ல, தமிழகத்தையே பிழைக்க வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டதற்காக – இந்தச் சூழ்நிலையை உருவாக்கித் தந்த காவல் துறையில் இருக்கின்ற எல்லா மட்டத்திலும் இருக்கின்ற உயர் அதிகாரிகளானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

காவல்துறையினர் எவ்வளவு மோசமான நிலையிலே ஒரு காலத்தில் நடத்தப்பட்டார்கள். அவர்களுக்காக வாதாடியது, போராடியது யார் என்றால் நான் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொல்லமுடியும். நான் தான்! காவல்துறை நண்பர்களுக்காக வாதாடியவன் நான்தான். அதற்காகத் தண்டிக்கப்பட்டவன் நான்தான்! நான் எதிர்க்கட்சியிலே இருந்த அந்தக் காலகட்டத்தில் 'உதயசூரியன்' என்ற ஒரு நாடகம் நடத்தினேன். அந்த நாடகம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. திடீரென்று ஒருநாள் அன்றைக்கு இருந்த அரசாங்கம் அந்த நாடகத்துக்கு தடை விதித்துவிட்டது. ஏன் தடை விதித்தார்கள் என்று நான் கேட்டேன். அதற்கு எனக்கு சொல்லப்பட்ட விளக்கம், நீ நாடகத்திலே போலீஸ் காரர்களுக்காக மிகவும் பரிந்து பேசுகிறாய். அதனால் தான் தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். என்ன பரிந்து பேசுகிறேன் என்று கேட்ட

போது ஒரு போலீஸ்காரனுடைய குடும்பம் மாதம் 80 ரூபாய் சம்பளம் வாங்குகிறது. அந்த 80 ரூபாயை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்தவேண்டும். போலீஸ்காரர் வீட்டில் குழந்தை 'கோ'வென அழுகிறது. அதைப்பார்த்து மனைவி அழுகிறாள். இப்படிப்பட்ட குடும்பத்தை வைத்துக் கொண்டு போலீஸ்காரர்கள் எப்படி தங்களுடைய கடமையை ஒழுங்காக செம்மையாக ஆற்ற முடியும் என்ற இந்தக் கருத்தை வைத்து ஒரு தாலாட்டுப் பாடல். போலீஸ்காரர் வெளியிலே வேலைக்குச் சென்றிருக்கிறார், அம்மையார் குழந்தையை தொட்டிலிலே போட்டு ஆட்டிக் கொண்டிருக்கிறார். அந்த ஒரு பாட்டுக்காக நான் எழுதி நடித்த உதயசூரியன் நாடகம் தடுக்கப்பட்டது. தடை செய்யப்பட்டது. அது என்ன பாடல் என்றால்,

*"போலீசு வேலைக்கு என்று போகின்ற*
*உங்கொப்பனுக்கு*

*புத்திரனாய் வந்துதித்த தரித்திரமே கண்வளராய்*

*காக்கி உடை போட்டுகிட்டு, சிவப்பு தொப்பி*
*மாட்டிக்கிட்டு*

*போகின்ற உங்கொப்பனுக்கு*

*உன்னைப் போல நாலு வந்து பிறந்து விட்டால்*

*காவி உடை வேணுமடா! கமண்டலமும்*
*தேவையடா!''*

– இதுதான் பாட்டு.

**காவல்துறையினரின் கஷ்டங்களை கண்டறிய் கமிஷன்**

இதற்காக அந்த நாடகம் தடை செய்யப்பட்டது. ஆனால் அந்தத் தடையை மீறி நான் என்ன செய்தேன் என்று தெரியுமா? நான் அதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவராக ஆன பிறகு பக்தவத்சலம் முதலமைச்சர், அவருக்கு நேராகவே, "இந்த நாடகத்தை இந்தப் பாட்டுக்காகவே தடை செய்தீர்கள். நீங்கள் நாட்டில் தடை செய்யலாம். சட்டமன்றத்திலே இந்தப் பாட்டைப் பாடுகிறேன் பாருங்கள்'' என்று அதே பாட்டை சட்டமன்றத்திலே பாடிக் காட்டினேன். அங்கே யாரும் தடை செய்ய முடியவில்லை. முடியாது. அதற்குப் பிறகு ஆட்சி மாறியது. எங்கள் தலைவர் அறிஞர் அண்ணா தலைமையிலே ஆட்சி மலர்ந்தது. மலர்ந்த ஆட்சி அண்ணாவினுடைய மறைவினால் மறைந்தது மறைந்தாலும் அதை மலர வைப்போம் என்கின்ற அந்த மறுமலர்ச்சி எண்ணத்தோடு அந்தப் பொறுப்பினை நான் சுமந்து கொண்டேன். அதற்குப் பிறகு 1969–ஆம் ஆண்டு முதன் முதலில் காவல்துறையின் நண்பர்கள் படும் கஷ்டம் தான் என் கண்ணில்பட்டது. நாமே நாடகம் எழுதி விட்டு, நாமே பாராமுகமாக இருக்கலாமா என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டு, கோபால்சாமி ஐயங்கார் என்ற ஒரு ஐ.சி.எஸ். ஆபீசர் (ஒய்வு) அவருடைய தலைமையிலே போலீஸ் கமிஷன் போடப்பட்டு, போலீஸ் துறை நண்பர்களுடைய கஷ்டங்களையெல்லாம் அவைகளை என்னென்ன வகையிலே தீர்க்கலாம் என்பதையெல்லாம் ஒரு அறிக்கையாகக் கேட்டு அவர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலே பல காரியங்கள் செய்யப்பட்டன. இந்தியாவிலேயே போலீஸ்காரர்களுக்காக இரண்டு முறை போலீஸ் கமிஷன் போட்ட ஆட்சி எனது ஆட்சிதான். வேறு ஆட்சியெல்லாம் வேறு கமிஷன்தான் போட்டது . நான் சொல்வது போலீஸ்காரர்களின் நன்மைக்காக போடப்பட்ட கமிஷன். அதுவரையில் கொடுக்கப்பட்ட 80 ரூபாய் சம்பளம் முதன் முதலாக மாதச் சம்பளம் 200 ரூபாய் கொடுக்கப்பட்டது. இன்றைக்கு காவலர்களுக்கு மாதச் சம்பளம் 3,200 ரூபாய். 80 ரூபாயாக இருந்த மாதச் சம்பளத்தை மாற்றியமைத்ததின் காரணமாக இன்றைக்கு மாதச்சம்பளம் ஒரு போலீஸ்காரருக்கு 3,200 அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்றால், அன்றைக்கு இந்த ஆட்சியில் எடுக்கப்பட்ட முயற்சி தான் இதற்குக் காரணம் என்பதை சொல்ல விரும்புகின்றேன்.

அவர்களும் மனிதர்கள் தான். அவர்களை கடமையாற்ற விட வேண்டுமேயானால் அவர்களை மனிதத்தன்மையோடு நடத்த வேண்டும் என்ற உணர்வோடு இந்த ஆட்சி அவர்களுக்குப் பல நல்ல காரியங்களைச் செய்து கொடுத்திருக்கின்றது. இன்னும் குறை இருக்கிறது. அவர்களாலும் செய்து முடிக்க முடியாத பல காரியங்கள் நாட்டில் இருக்கின்றன. போலீஸ்காரர்கள் இருக்கின்ற காரணத்தால் நாட்டிலே திருட்டு அறவே ஒழிந்து விட்டதா? கொலையே நடக்காமல் இருக்கிறதா? எல்லோரும் புத்தர்களாக மகாத்மாக்களாக மாறி விட்டார்களா? இல்லை. இன்னும் இருக்கிறது. அவைகளை கொஞ்சம் கொஞ்சமாக அவ்வப்போது களைய வேண்டிய அவசியமிருக்கிறது. காலாகாலமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இருந்து வருகின்ற அநீதிகள், அக்கிரமங்கள் இன்றைக்கும் இருக்கிறது, ஆனால் அவைகளை தடுப்பதற்கு இன்றைக்கு போலீஸ்காரர்கள் தேவைப்படுகிறார்கள்.

**கள்ளச்சாராயத்தை ஒழிக்க சவாலோடு பணியாற்றுங்கள்**

சில நேரங்களில் வேலியே பயிரை மேய்ந்து விடுவதைப் போல காவல்துறையிலே உள்ளவர்கள்கூட

தவறு செய்கிறார்கள். வேலியே பயிரை மேய்வது காவல்துறையிலே மாத்திரமல்ல, நான் தொடக்கத்திலே குறிப்பிட்டதைப் போல எல்லாத்துறையிலும் இருக்கின்ற விவகாரம்தான். அதை மனிதன் தன்னை மனச் சாட்சிக்கு ஏற்றவாறு அவனவனும் மாற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு மாற்றிக் கொண்டால் பல காரியங்களை நாம் வெற்றிகரமாக முடிக்க முடியும். இன்றைக்கு கள்ளச் சாராயம் நாட்டிலே பெருக்கெடுத்து ஓடுகிறது என்று ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. ஆனால் அதைத் தடுத்து நிறுத்த நமது போலீஸ்துறை ஒரு சவாலே விட்டு அந்தக் காரியத்திலே இறங்கி இருக்கிறது. ஆனால் ஒன்றை நான் சொல்ல விரும்பு கின்றேன். அந்த வியாபாரத்திலே சில இடங்களிலே சில போலீஸ்காரர்களும் ஈடுபடுகிறார்கள் என்பதை நான் மறந்து விடவில்லை. எனக்குத் தெரியாமலில்லை. அதையும் மீறி ஒரு நிகழ்ச்சி ஒன்றை உங்களுக்குச் சொல்கிறேன். நானும் வீராசாமி அவர்களும், தம்பி துரைமுருகனும் மற்றவர்களும் அண்மையிலே நாங்குநேரிக்குப் போய் வந்தோம். நாங்குநேரியிலே ஒருபெரிய விழா. 8 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்திலே ஒரு பெரிய தொழில் வளாகத்தை அங்கே தொடங்குகிறோம். அந்த தொடக்க விழாவிற்காக சென்றிருந்தோம். அந்த விழாவிலே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் அந்த விழாவிலே பேசினார். அவர் பேசும்போது சொன்னார்.

"தமிழ்நாட்டில் என்னுடைய தொகுதியில் இப்பொழுது கள்ளச்சாராயமே கிடையாது, அறவே ஒழிந்து விட்டது. போலீஸ்காரர்களைப் பாராட்டுகிறேன்'' என்று சொன்னார்.

அவர் நம்முடைய அணியிலே இல்லை. ஏற்கனவே இருந்து வேறு அணிக்குப் போய் விட்டார். அணி மாறியதில் அவர் அங்கேயும், இராதாகிருஷ்ணன் இங்கேயும் என ஆகியிருப்பது உங்களுக்குத் தெரியும். எனவே இந்த அணி மாற்றத்தில்அவர் மனச் சாட்சியை விட்டுவிடவில்லை.

மாநாடு போன்ற அந்த மாபெரும் கூட்டத்திலே அவர் சொன்னார். "நாங்குநேரி தொகுதியில் கள்ளச் சாராயத்தை அறவே ஒழித்து விட்டோம். போலீஸ் காரர்கள் அதற்கு நல்ல முறையிலே பணியாற்றி அதை ஒழித்திருக்கிறோம்'' என்று அவர் குறிப்பிட்டார்.

இப்படி நாங்குநேரி தொகுதி மாத்திரமல்ல, நாடு முழுவதும் கள்ளச்சாராயம் ஒழிந்தது என்ற நல்ல செய்தியைக் கேள்விப்பட வேண்டும். அதற்கு காவல்துறை நண்பர்கள் ஒத்துழைப்பைத் தர வேண்டும் என்பதும் இந்த நல்ல விழாவிலே நான் அவர்களுக்கு விடுக்கின்ற ஒரு அன்பான வேண்டுகோளாகும். அதற்கு எல்லோரும் ஒத்துழைத்தாக வேண்டும்.

கள்ளச்சாராயத்தால் எவ்வளவு கெடுதிகள் ஏற்படுகின்றன என்பதை எல்லாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. அனுபவ ரீதியாக அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

இன்று கூட நிருபர்கள் கூட்டத்திலே கேட்டார்கள். "மறுபடியும் நீங்கள் எப்படியாவது கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டும் என்ற சில பேர் சில அரசியல்வாதிகள் கூட, கோரிக்கை வைக்கிறார்களே, என்ன சொல்கிறீர்கள்'' என்று கேட்டார்கள். அவர்கள் அதை கண்டிப்பாகக் கேட்டார்கள். சீரியசாகக் கேட்டார்கள். உண்மையிலே கேட்டார்கள். அந்தக் கோரிக்கை நியாயம் என்ற கருதிக் கொண்டு கேட்டார்கள். நான் அவர்களுக்குச் சொன்னதில், அவ்வளவு அவசரப்பட்டு எடுக்கின்ற முடிவு அல்ல, கள்ளுக்கடைகளை எல்லாம் மீண்டும் திறப்பது என்பது, தேர்தல் முடிந்தபிறகு, எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்குமேயானால் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அதிலே அவர்களுடைய யோசனைகளை எல்லாம் கேட்டு, அதற்குப் பிறகு தான் அந்த முடிவு எடுக்க வேண்டும் என்று நான் சொன்னேன்.

ஏனென்றால் மதுவின் காரணமாக ஏற்படக்கூடிய தீமைகளை நாம் உணர்ந்தவர்கள். அதை விட அதிகமாக கள்ளச் சாராயத்தால் ஏற்படக் கூடிய தீமைகளை உணர்ந்தவர்கள். இந்தத் தீமைகளை எல்லாம் ஒழிப்பதற்காகத்தான் இந்த அரசின் சார்பில் இருக்கின்ற காவல்துறை பாடுபட்டுக் கொண்டி ருக்கிறது. அப்படி பாடுபடுகின்ற அந்தத்துறை ஒரு இடத்திலே அமர்ந்து யோசித்து, என்னென்ன திட்டங் களைத் தீட்டலாம், என்னென்ன வகையிலே சட்டத்தை நிலை நாட்டுவதற்கு இங்கே நாம் பணியாற்றலாம் என்ற அந்த வேலைகளை எல்லாம் வகுத்துக் கொள்ள ஒரு இடம் தேவை. அந்த இடம்வசதி மிக்கதாக நல்ல முறையிலே, அவர்களுக்கு உவகை ஊட்டுவதாக, உற்சாகம் ஊட்டுவதாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் மிக அருமையான ஒரு கட்டடத்தை இங்கே நாம் எழுப்பியிருக்கின்றோம். இந்தக் கட்டடம் எழுப்பியதற்கு மிகவும் ஒத்துழைத்த பொதுப்பணித் துறைக்கும், பொதுப்பணித்துறை அமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் எனது அன்பான நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டு, உங்களைச் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பு கிடைத்தமைக்காக மகிழ்ச்சியை மீண்டும் மீண்டும்தெரிவித்து விடை பெறுகிறேன்.

• • •

இடைக்கால நிதிநிலை அறிக்கை மீது தொடர்ந்து நடைபெற்றுள்ள விவாதத்தில் இறுதியாக இன்றைய தினம் சில கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைக்க நான் முன் வந்துள்ளேன். 1996ஆம் ஆண்டு 4ஆவது முறையாக பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்த ஆட்சியின் சார்பில் ஐந்தாண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளை இந்த மாமன்றத்தின் முன்னால் நான் வைத்திருக்கின்றேன். தற்பொழுது வைத்துள்ளது இடைக்கால நிதிநிலை அறிக்கைதான்.

**ஐந்தாண்டுகள் பேரவையை அமைதியாக நடத்திய பேரவைத் தலைவர் - துணைத் தலைவருக்கு நன்றி**

இங்கே முதலில் இதயம் திறந்து சில கருத்துக்களைக் கூற நான் கடமைப் பட்டிருக்கின்றேன். இந்த அவையை இந்த ஐந்தாண்டுக் காலமாக பெருமளவுக்கு அமைதியாகவும், கண்ணியத்தோடு கட்டுப்பாடாகவும் தங்களுடைய ஆற்றலால் நடத்திச் சென்றிருக்கிற பேரவைத் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



அவருக்குத் துணையாக இருந்து அவையில் துணைத் தலைமைப் பொறுப்பை ஏற்று, சீரோடு இந்த அவையை நடத்திய பேரவைத் துணைத் தலைவர் பரிதி அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எதிர்க்கட்சித் தலைவர் - அனைத்துக்கட்சி தலைவர்களுக்கும் நன்றி**

அரசுக்குத் தக்க யோசனையைக் கூறுவதிலும், குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும் கண்ணியமான முறையைக் கடைப்பிடித்து, ஒத்துழைத்துள்ள எதிர்க்கட்சித் தலைவருக்கும், மற்றுமுள்ள கட்சித் தலைவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஐந்தாண்டுக் காலம் என்னோடு ஒத்துழைத்து, துணை நிற்கின்ற பேராசிரியர் உள்ளிட்ட அமைச்சரவை சகாக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அனைத்துக்கட்சி உறுப்பினர்கள் - பத்திரிகையாளர்களுக்கு நன்றி**

என்பால் அன்பும், பாசமும் கொண்டு, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் ஒரே உணர்வோடு உரிமை கொண்டாடி, அன்பு காட்டி வரும் உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையினுடைய செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு உறுப்பினர்களையும், உற்சாகப் படுத்துகின்ற பத்திரிகையாளர்கள் அனைவருக்கும்

# மீண்டும் சந்திப்போம்

என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே விவாதத்திலே கலந்துகொண்டவர்கள் பல்வேறு விஷயங்களை எடுத்து இங்கே குறிப்பிட்டிருந் தாலும்கூட, அடுத்து என்ன என்ற கேள்வியைக் கேட்டு, ''இதுதான் கடைசியாக நீ இந்த இடத்திலே உட்கார்ந்திருக்கிற கால கட்டம். இதற்கு மேல் நீ உட்கார முடியாது'' என்றெல்லாம் ஆரூடம் கூறி அல்லது சபித்து சிலர் தங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றி உள்ளபடியே கவலைப்படவில்லை. அதற்காக நான் வருத்தம் கொள்ளவும் இல்லை. அவர்கள் மீது நான் ஆத்திரப்படவும் இல்லை. நான் முதலமைச்சர் பொறுப்பிலே உட்கார்ந்து 14 ஆண்டுகள் ஆட்சி நடத்தியிருக்கிறேன்.

14 ஆண்டுகள்; இராமாயண இதிகாசத்திலே இராமன் பட்ட பாடுதான், 14 ஆண்டுகள் என்பது உங்களுக்குத் தெரியும். இந்த 14 ஆண்டு காலத்தில், 1969 முதல் 1976 வரை 7 ஆண்டுகளும், 1989 முதல் 1991 வரை இரண்டு ஆண்டுகளும் 1996 முதல் 2001 வரை 5 ஆண்டுகளும், ஆட்சியிலே இருந்து வருகிறேன்.

**1969 முதல் 1971 முடிய நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

இவற்றில், நான் முதன்முதலில் 1969இல் என்னை ஆளாக்கிய என் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு முதல்வர் பொறுப்பை ஏற்று ஆட்சி நடத்திய 1969 முதல் 1971 முடிய தீட்டப்பட்ட திட்டங்களில் சிலவற்றை உங்கள் முன்னால் நான் நினைவூட்ட விரும்புகின்றேன். கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், கை ரிக்ஷா ஒழிப்புத் திட்டம், மகாத்மா காந்தியடிகளுடைய மனக்குறையைத் தீர்க்க இந்தியாவிலேயே முதன்முதலாக அவருடைய கொள்கையை நிறைவேற்ற தீட்டப்பட்ட திட்டம்தான் மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷாக்களை ஒழித்த அந்தத் திட்டமாகும். இன்னமும் இந்தியாவிலே சில மாநிலங்களில் கை ரிக்ஷா, மனிதனை வைத்து மனிதன் இழுக்கின்ற கை ரிக்ஷா இருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

அடுத்து, ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டம், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடு கட்டித் தருகின்ற திட்டம், குடிசை மாற்று வாரிய திட்டம், குடிநீர் வாரிய திட்டம், பேருந்துகளை நாட்டுடைமையாக்கியத் திட்டம், போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கியத் திட்டம், தொடக்கத்தில் 18 ஆயிரம் தொழிலாளர்கள் பயனடைந்த இந்தத் திட்டம், இன்று ஒரு இலட்சத்து 25 ஆயிரம் தொழிலாளர்கள் பயன்பெறக்கூடிய அளவுக்கு போக்குவரத்துக் கழகங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிவீர்கள்.

**'குடியிருப்பு மனைச்சட்டம்' என்ற புரட்சிகரமான சட்டம்**

குடியிருப்பு மனைச்சட்டம் என்ற ஒரு புரட்சிகரமான சட்டம், திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலேதான் 1970ஆம் ஆண்டு வாக்கிலேதான் கொண்டு வரப்பட்டது. நிலங்களிலே பணியாற்றுகின்ற



தொழிலாளர்கள், நிலக்கிழாருடைய தயவினால், அவர்கள் தருகின்ற மனையிலே குடியிருந்து, அவர்கள் விரட்டப்படக்கூடிய ஒரு சூழ்நிலையிருந்தது. தஞ்சை, திருச்சி போன்ற மாவட்டங்களில் இந்தக் கொடுமை இருந்தது. இதை நீக்குவதற்காக குடியிருப்பு மனைச்சட்டம் கொண்டு வரப்பட்டு, அதனால் பயன்பெற்றவர்கள் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேர். அதிலே, ஆதிதிராவிடர்கள் மாத்திரம் ஒரு இலட்சத்து 2 ஆயிரம் பேர்.

இந்தத் திட்டத்தை அறிவித்து செயல்படுத் தியதற்காக பொதுவுடைமை வீரர் மணலி கந்தசாமி அவர்கள் திருத்துறைப் பூண்டியிலே நடைபெற்ற அந்த விழாவிலே கலந்துகொண்டு சொன்ன சொல் இன்னமும் என்னுடைய நெஞ்சிலேயே பதிவாகியிருக்கிறது. ''பல துளி இரத்தத்தைச்

செலவழித்து கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. பல துளி இரத்தத்தால் சாதிக்க முடியாத ஒன்றை கருணாநிதி, ஒரு துளி மையினால் சாதித்திருக்கிறார்" என்று குறிப்பிட்டார்.

அதைத் தொடர்ந்து தமிழ்நாடு பண்ணைத் தொழிலாளர்கள் நியாய ஊதியச் சட்டம். பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக தனி அமைச்சகம்; பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்றை சட்டநாதன் அவர்கள் தலைமையிலே அமைத்து, அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில் முதல் தடவையாக பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை 25 விழுக்காட்டிலிருந்து 31 விழுக்காடாகவும், ஆதி திராவிடர்களுடைய் இடஒதுக்கீட்டை 16 விழுக் காட்டிலிருந்து 18 விழுக்காடாகவும் உயர்த்தினோம்.


அதைத் தொடர்ந்து முதலாவதாக இந்தியா விலேயே போலீஸ் கமிஷன் அமைத்து, காவல்துறையில் உள்ளவர்களுடைய கஷ்டங்களை யெல்லாம் போக்குவதற்கு வழி கண்டோம்.

அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு தரப்பட்டது. மின் இணைப்பு இல்லாத கிராமங்களே இருக்கக்கூடாது என்று இந்த அவையிலே சபதம் ஏற்று அதைச் செய்து முடித்தோம்.

**புகுமுக வகுப்பு வரையில்**
**அனைவர்க்கும் இலவசக் கல்வி**

பெருந்தலைவர் காமராசர் அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளித்தார். அதைத் தொடர்ந்து நாங்கள் புகுமுக வகுப்பு வரையிலே அனைவருக்கும் இலவசக் கல்வி என்று ஆணை பிறப்பித்தோம்.

தொழிலாளர்களுடைய புரட்சி தினமான மே தினத்திற்கு ஊதியத்தோடு கூடிய அரசு விடுமுறை வழங்கப்பட்டது. நபிகள் நாயகம் பிறந்த நாளான மிலாது நபி திருநாளுக்கு அரசு விடுமுறை வழங்கப்பட்டது.



1,500 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கியமான சாலைகளோடு இணைப்பதற்கு, இணைப்புச் சாலைகள் திட்டம் என்று ஒன்றை உருவாக்கி, முதலில் 1,500 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைத்து, அதன்பிறகு 1000 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைத்து, இப்பொழுது 500 மக்கள் கொண்ட கிராமங்களை முக்கிய சாலைகளோடு இணைக்கின்ற திட்டத்தை நிறைவேற்றத் தொடங்கி இருக்கின்றோம்.

**1971 முதல் 1976 வரை 5 ஆண்டுகளில்**
**நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

பின்னர், 1971 முதல் 1976 வரை நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்; நான் முதலிலே சொன்னவைகள் எல்லாம் 1971 வரையிலே நிறைவேற்றப்பட்டவை. 1971–க்குப் பிறகு 1976 வரை 5 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் :

கோவையில் இந்தியாவிலேயே முதன்முதலாக வேளாண்மைப் பல்கலைக்கழகம். அரசு ஊழியர் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்; அது முதலில் 10 ஆயிரம் ரூபாய் என்று தொடங்கி இன்றளவில் ஒரு இலட்சம் ரூபாய் என்று பெருகி இருப்பதை நீங்கள் அறிவீர்கள். அரசு அலுவலர் இரகசியக் குறிப்பேடு முறை ஒழிப்பு. மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம், சிறார்களுக்கு ஆலயங்களில் கருணை இல்லங்கள்.

**சேலம் உருக்காலை**

நீண்டகாலக் கனவாக இருந்த சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக டில்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலே வாதாடி போராடி, அம்மையார் இந்திரா காந்தி அவர்கள் தலைமையிலே நடைபெற்ற அந்த மாநாட்டிலே அதை வலியுறுத்தி, வெளிநடப்புக்கூட செய்து, அதன் காரணமாக உடனடியாக சேலம் உருக்காலை வழங்கப்பட்டதை அறிவீர்கள்.

நில உச்ச வரம்புச் சட்டம்; உச்ச வரம்பு 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று திருத்தம் செய்யப்பட்டு 1,78,880 ஏக்கர் நிலம் கைப்பற்றப்பட்டது. 1,37,236 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் 61,989 பேர் ஆதிதிராவிடர்கள்.

நெய்வேலி நிலக்கரி இரண்டாவது சுரங்க மின் திட்டம், தூத்துக்குடி இரசாயன உரத் தொழிற்சாலை (ஸ்பிக்), சிட்கோ –சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்; இராணிப்பேட்டை, ஒசூர், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், பெருந்துறை, கும்மிடிப்பூண்டி, கேளம்பாக்கம், செய்யாறு ஆகிய இடங்களில் சிப்காட் தொழில் வளாகங்கள், புஞ்சை நில வரி அறவே நீக்கப்பட்ட நிலை.

மனுநீதித் திட்டம். கிராமங்களுக்கு சென்று அதிகாரிகள் மனுக்களைப் பெற்று ஆங்காங்கே அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்ற திட்டம், மனுநீதித் திட்டம். நிலக்கரி போக்குவரத்துக்காக, முக்கியமாக இறக்குமதிக்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தொடங்கிய அந்தத் திட்டம். இவைகள் எல்லாம் அந்த 5 ஆண்டு காலத்திலே நடைபெற்றன.

**1989-90ஆம் ஆண்டுகளில்**
**நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்**

பின்னர் 1989–91ஆம் ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், வருமான வரம்பிற்கு உட்பட்டு பெண்களுக்கும் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி. அடுத்து மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், வருமான வரம்பிற்கு உட்பட்டு இதர பிற்படுத்தப் பட்ட் வகுப்பினருக்கும், பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி.

**பெண்களுக்கு சொத்துரிமை வழங்குகின்ற சட்டம்**

பெண்களுக்கு சொத்து உரிமை வழங்குகின்ற சட்டம். 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் அவர்களும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய தந்தையார் பி.டி. ராஜன் அவர்களும் கலந்துகொண்டு டபிள்யூ.பி.ஏ. சௌந்தரபாண்டியன் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம், பெண்களுக்கு சொத்திலே சம உரிமை வழங்க வேண்டும் என்பதாகும். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி பெண்களுக்கு சொத்துரிமை வழங்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஆசியாவிலேயே முதன்முதலாக கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தை தொடங்கினோம். சென்னையில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம். எம்.ஜி.ஆர். அவர்கள் உயிரோடு இருந்தபொழுதே அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நாமெல்லாம் வருந்துகின்ற அளவிற்கு அவர்கள் மறைந்த பிறகு, அந்தப் பல்கலைக்கழகம் தொடங்கப்படுமா என்பது கேள்விக்குறியாக இருந்து, நானே முன்நின்று நம்முடைய ஆட்சியிலே அன்றைய குடியரசுத் தலைவர் ஆர்.வி. அவர்களை அழைத்து எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்த நிகழ்ச்சி. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.

**விவசாயிகளுக்கு இலவச மின்சார திட்டம்**

அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு. ஏழைப் பெண்களுக்கு திருமண உதவித் திட்டம், விதவைகளுக்கு திருமண உதவித் திட்டம், கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கும் வகையில் தங்கப்பதக்கம் வழங்கும் திட்டம். விவசாயிகளுக்கு இந்தியாவில் எங்கும் இல்லாத அளவிற்கு முதன்முதலாக இலவச மின்சாரம்.



மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு. அதற்காக நடைபெற்ற பெரும் போராட்டத்தில் பல வீரர்கள் வீழ்ந்தார்கள். பல குடும்பங்கள் நிர்க்கதியாகின. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு வழங்க டாக்டர் ராமதாஸ் அவர்களை அழைத்துப் பேசி, நானும் இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும் அவரோடு விவாதித்து மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு தனி ஒதுக்கீடு என்ற அறிவிப்பு. அந்தப் போராட்டத்திலே உயிரிழந்த குடும்பங்களுக்கு நிதியுதவியாக 23 குடும்பங்களுக்கு தலா 3 இலட்ச ரூபாய், மற்றும் அந்தக் குடும்பங்களில் இறந்து போனவர்கள் போக மிச்சம் இருக்கிற அவர்களுடைய வாரிசுக்கு மாதந்தோறும் 1500 ரூபாய் ஒய்வூதியம் வழங்குதல்.

ஏற்கெனவே 18 விழுக்காட்டிலே பழங்குடி மக்களுக்கும் என்று இடஒதுக்கீடு இருந்தது. அதை மாற்றி, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு என்றும்,


பழங்குடி மக்களுக்கு 1 விழுக்காடு என்றும் மொத்தம் 19 விழுக்காடாக ஆக்கப்பட்டது.

**பெரிய பணிகளையும் முக்கியமான சட்டங்களையும் நிறைவேற்றியுள்ளோம்**

இதற்குப் பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு, 4–வது முறையாக பொறுப்புக்கு வந்துள்ள இந்தச் சூழ்நிலையில் அன்றைக்குக்கூட பேசும்போது சுப்பராயன் குறிப்பிட்டார்; ஒரு அரசு செய்யக்கூடிய சாதாரணப் பணிகளைத்தான் செய்திருக்கின்றீர்கள் என்று. பெரிய பணிகளையும் செய்திருக்கிறோம். முக்கியமான சட்டங்களையும் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நாங்கள் இங்கே காட்டிய பட்டியல்களிலிருந்து நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

**நாங்குநேரியில் உயர் தொழில்நுட்பப் பூங்கா: பிப்.11-ஆம் தேதி அடிக்கல் நாட்டு விழா**

பெரிய திட்டமாக, தென் பகுதியிலேயுள்ள மாவட்டங்களை, அங்கேயிருக்கின்ற மக்களை



வாழவைக்கக்கூடிய திட்டமாக, அவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டமாக 8,000 கோடி ரூபாய் முதலீடு செய்யக்கூடிய அளவிற்கு நாங்குநேரியில் சர்வதேச தரம் வாய்ந்த உயர்தொழில் நுட்பப் பூங்கா ஒன்றிற்கு 11–ஆம் தேதி அடிக்கல் நாட்டுவிழா நடைபெற இருக்கிறது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றுகூட ஒரு பத்திரிகையில் ''திருமணத்திற்காக வரப்போகிற முதல்வருக்காக இத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அடிக்கல் நாட்டு விழாவிற்குச் செல்கின்ற முதல்வர் ஒரு திருமணத்திலே கலந்துகொள்கிறாரேயல்லாமல், திருமணத்திற்காகச் செல்கின்ற முதல்வர் அடிக்கல் நாட்டு விழாவிலே கலந்துகொள்ளவில்லை. ஏனென்றால், அதைப் பற்றிச் சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாங்குநேரி வளாகத்திற்காக 2,200 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுவிட்டது. மத்திய அரசிடமிருந்து வெளிநாட்டு முதலீட்டிற்கான ஒப்புதல் பெறப்பட்டாகி விட்டது, மத்திய அரசு இந்த வளாகத்தை ஏற்றுமதி வளாகம் என்றும் அதற்குப் பிறகு சிறப்பு பொருளாதாரப் பகுதி என்றும் அறிவித்து அனுமதியும் வழங்கியுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் இந்த வளாகத்திற்கு தண்ணீர் வழங்குவது சம்மந்தமான திட்டத்தை முடிவு செய்துள்ளது.

இணைத் துறையிலே இந்த வளாகத்தை நடத்த அட்மாக் லிமிடெட் என்ற கம்பெனி உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டு முதலீட்டாளர்கள் இதுவரை இந்த வளாகம் தொடர்பான பல்வேறு ஆய்வுகளுக்காக ஐந்து கோடி ரூபாய் செலவிட்டுள்ளதோடு நிறுவனத்தின் கணக்கில் ஏழு கோடி ரூபாயை டெபாசிட்டும் செய்துள்ளார்கள். இந்த அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிக்கான தேதியையும் அமெரிக்க நாட்டு முதலீட்டாளர்கள்தான் என்னிடத்திலே கேட்டுப் பெற்றார்கள். அவர்களும் இந்த நிகழ்ச்சிக்கு வருகிறார்கள்.

இத்திட்டத்திற்கான மாஸ்டர் பிளானை சிங்கப்பூரைச் சேர்ந்த ஜெ.டி.சி. நிறுவனம் தயாரித்து அளித்துள்ளது. அமெரிக்க முதலீட்டாளர்கள் உலகின் தலைசிறந்த நிறுவனங்களை இந்த வளாகத்திற்கு கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டிட்கோ நிறுவன அலுவலர்களும் இதற்காக அமெரிக்கா சென்று அமெரிக்க முதலீட்டாளர்களைச் சந்தித்து வளாகம் அமைப்பதை இறுதி செய்துள்ளார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் இரண்டாவது கணினி மென்பொருள் பூங்கா**

டைடல் பூங்காவைத் தொடர்ந்து, 20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 2–வது கணினி மென்பொருள்

பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகி இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கணினியைப் பற்றிப் பேசும்போது, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பெங்களூரிலே 9,000 கோடி ரூபாய் இங்கே 2,000 கோடி ரூபாய்தானே ஏற்றுமதியாகியிருக்கிறது என்று சொன்னார்கள். உண்மைதான். அது 9,000 கோடி ரூபாயா, என்னவென்று எனக்குத் தெரியவில்லை. 7,500 கோடியா? இங்கே 2,000 கோடி ரூபாய் என்பதை நான் மறுக்க வில்லை.

ஆனால் ஒன்றை மறந்துவிடக் கூடாது. சிங்கப்பூர் காரிடார் என்ற ஒன்று கடந்த காலத்தில், (கடந்த காலம் என்றால் உங்களுக்குத் தெரியும்) இங்கே வர இருந்து, அது பெங்களூருக்குப் போய்விட்ட மர்மமும் உங்களுக்கெல்லாம் தெரிந்த உண்மைதான். அதன் காரணமாக நாம் வளர வேண்டிய நேரத்தில் கணினித் துறையில் சாஃப்ட் வேர் துறையில் வளர முடியாமல் போய்விட்டது. எனவே அவர்கள் முன்கூட்டியே வளர ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே 7000 கோடி ரூபாய் அல்லது 8000 கோடி ரூபாய்க்கு அவர்களால் ஏற்றுமதி செய்ய முடிகிறது.

**சுறுசுறுப்புக்கு காரணம் நாம்!**
**சுணக்கத்திற்கு காரணம் யார்?**

நான் சொல்கிறேன்; 1995 ஆம் ஆண்டு நம்முடைய ஏற்றுமதி மதிப்பு 12 கோடி ரூபாய், இந்த நான்கு ஐந்து ஆண்டு கால வளர்ச்சியில் நாம் எடுத்த ஆக்கப்பூர்வமான ஆர்வம் மிகுந்த செயல்பாடுகள் காரணமாக ஏறத்தாழ 2000 கோடி ரூபாய்க்கான ஏற்றுமதி இப்போது ஏற்பட்டிருக்கிறது. எனவே, சுணக்கத்திற்குக் காரணம் நாம் அல்ல என்பதையும், ஆனால் சுறுசுறுப்புக்குக் காரணம் நாம்தான் என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

உழுவோரும் நுகர்வோரும் பயன்பெற 14.11.2000–க்குள் 100 உழவர் சந்தைகள்; தொழில் முதலீடுகளில் இந்தியாவிலேயே நாம்தான் முதல் இடம்; இந்தியாவிலேயே மென்பொருள் பொறியியல் வல்லுநர்கள் பணியாற்றுவதில் நாம்தான் முதல் இடம்; அமெரிக்காவிற்குச் செல்ல உலகிலேயே விசா பெறுவதில் நாம்தான் முதலிடம்.

தம்பி செல்லக்குமார் கூட அதைப் பேசும்போது, இந்த கணினி அல்லது சாஃப்ட்வேர் எல்லாம் தானாக வளர்ந்தது. நீங்கள் ஒன்றும் வளர்த்துவிட வில்லை என்று குறிப்பிட்டார்கள். நான் அவருக்கும் சொல்கிறேன். மற்றவர்களுக்கும் சொல்கிறேன். இந்தியாவிலேயே எங்கேயும் எந்த ஒரு மாநிலத்திலும் மாணவர்களுக்கு கணினி கற்பிக்கின்ற காரியம் தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கும் நடைபெறவில்லை.

கல்லூரிகள் மற்ற பள்ளிகளிலே சேர்த்து 1 இலட்சம் மாணவர்கள் இன்றைக்கு கணினி கல்வி பெறுகிறார்கள் என்றால் கல்வித் துறையின் மூலமாக, தனியார் துறையைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தை இந்த ஆட்சி கடந்த ஓராண்டு காலத்திலே செய்து முடித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால்தான் அமெரிக்காவிற்குச் செல்ல உலகிலேயே விசா பெறுவதில் தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக**
**தனிக்கொள்கை வகுத்த முதல் மாநிலம்**

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக தனிக் கொள்கையை அறிவித்த முதல் மாநிலமும்



தமிழ்நாடுதான். அதுமாத்திரம் அல்ல; இந்தியா விலேயே முதல் முதலாக உயிரியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு தனிக் கொள்கையை அறிவித்திருப்பதும் நாம்தான்; மகளிருக்கான முதல் உயிரியல் தொழில் நுட்பப் பூங்கா தொடங்கப்பட்டிருக்கிறது. மாநில உயிரியல் தொழில்நுட்ப வாரியம், தொடங்கப் பட்டிருக்கிறது. இந்திய மாநிலங்களில் உணவு

உற்பத்தியில் முதலிடம் தமிழ்நாட்டுக்கு. 1995 – 96 இல் 64 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த தமிழ்நாட்டினுடைய உணவு உற்பத்தி 1998–99–ல் 94 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**கரும்பு உற்பத்தித் திறனிலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது**

கரும்பு உற்பத்தித் திறனிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது. போலியோ ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடம் என்ற பெருமையைப் பெற்றிருக்கிறது.

எய்ட்ஸ் என்னும் கொடிய நோயைக் கட்டுப்படுத்தியதில் தமிழகம் இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. பிறப்பு விகிதத்தைக் குறைத்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தியதில் இந்தியாவிலேயே தமிழகம் முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. சிசு மரண விகிதத்தைக் குறைத்துள்ளதிலும் தமிழகம் சாதனை புரிந்துள்ளது.


ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம். கடந்த காலத்தில் சிங்கிள் டெண்டர் முறை இருந்தது. அதை மாற்றியதால் ஆண்டு ஒன்றுக்கு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத் துறைகளில் 100 கோடி ரூபாயும், மின் வாரியத்திலே 100 கோடி ரூபாயும், நம்மால் சேமிக்க முடிந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய மருத்துவக் கல்லூரிகள் நான்கு. ஏற்கெனவே இரண்டு திறக்கப்பட்டுவிட்டன; மேலும் இரண்டு மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட இருக்கின்றன. ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்றொன்று வேலூரில்.

இதய நோய், சிறுநீரக நோய், புற்றுநோய் போன்றவைகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய 4,774 பயனாளிகளுக்கு இதுவரையில் சுமார் 8 கோடி ரூபாய் உதவி செய்யப்பட்டிருக்கிறது. கிராமங்களை நாடிச் சென்று சிகிச்சை அளிக்கும் வருமுன் காப்போம் திட்டம்; உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 33 விழுக்காடு; உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல்; கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல்; மனிதக் கழிவுகளை மனிதனே சுமக்கும் அவல நிலை அகற்றப்பட்ட நிலை; பெரியார் நினைவு சமத்துவபுரங்கள்; அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – இந்த 4 ஆண்டுகளில் மொத்தம் 415 கோடி ரூபாய். வாழ்ந்து காட்டுவோம் திட்டம், மகளிருக்காக; 10 இலட்சம் மகளிர் உறுப்பினராகக் கொண்ட 58,391 மகளிர் சுய உதவிக் குழுக்கள்; சேமிப்புடன் கூடிய மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம்.

**பாலங்கள்**


சென்னையிலே அண்ணா மேம்பாலம், நெல்லையில் ஈரடுக்குப் பாலம், திருமானூர் பாலம்,



கோவையில் மேம்பாலம், பாம்பன் பாலம் தொடங்கி தற்போது சென்னையில் 115 கோடி ரூபாய் செலவில் 10 மேம்பாலங்கள். தமிழகம் முழுவதிலும் 1947 முதல் 1996 வரை 195 பாலங்கள்தான். கடந்த 5 ஆண்டு களில் மட்டும் 601 பாலங்கள்.

**அணைகள்**

1969 முதல் பாலாறு, பொரந்தலாறு, வரதமாநதி, மருதாநதி, பரம்பிக்குளம் ஆளியாறு, சிற்றாறு பட்டினங்கால், பொய்கையாறு, நம்பியாறு, மோர்தானா உட்பட 55 பாசனத் திட்டங்கள். 1998–ல் காவிரி நீர் ஆணையம், நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம் செல்ல ஒரு பிடிப்பு. நண்பர் பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். காவிரி நீர்ப் பிரச்சினை உங்களது காலத்திலே தீரும் என்று கருதினோம். தீரவில்லை என்று சொன்னார்கள். என் காலமே இன்னும் தீரவில்லையே! ஆகவே அவசரப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். காவிரி நீர்ப் பிரச்சினையில் நாம் பாதுகாப்பாக இருக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ,



சட்டப்பூர்வமாக அவ்வளவு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மினி பஸ் திட்டம்**

எல்லா மாநிலங்களையும் விட பேருந்துக் கட்டணம் தமிழ்நாட்டில் தான் குறைவு என்பதை அனைவரும் அறிவீர்கள். மினி பஸ் திட்டத்தின் மூலம் 3030



கிராமங்களுக்கு இன்றைக்கு பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. 1957 ஆம் ஆண்டு நான் குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, இந்த மினி பஸ் திட்டம் என்னுடைய மூளையிலே உதித்தது. அப்போது குளித்தலைத் தொகுதி, என்பது கரூரில் தொடங்கி கிட்டத்தட்ட திருச்சி எல்லை வரை உள்ள தொகுதி, அவ்வளவு பெரிய தொகுதி, அந்தத் தொகுதியிலே மிகமிக மோசமான கள்ளிக்காடுகள் நிறைந்த கிராமங்கள் ஏராளமாக உண்டு. அங்கே எல்லாம் பேருந்துகள் செல்வதில்லை. அங்கே வேன்களை, சிறு சிறு பஸ்களை, யாரோ சிலபேர், தனியார்கள் வாடகைக்கு விட்டு அதிலே 50 பேர், 100 பேர் தொத்திக் கொண்டு சென்று ஆங்காங்கே கவிழ்ந்து பலபேர் செத்து மடிந்த கொடுமைகளை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன்.

அன்று முதல் எனக்கு ஒரு நினைவு, ஏன் இப்படிப்பட்ட சிறிய பஸ்களை அரசின் சார்பில் விடக்கூடாது என்று. அதை நிறைவேற்றலாம் என்பதற்காக மினி பஸ் திட்டத்தை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, அமைச்சரவைக் கூட்டத்திலே அதைப்பற்றி விவாதித்து, இன்றைக்கு 3030 மினி பஸ்கள் தமிழ்நாட்டில் விடப்பட்டு எல்லா கிராமங்களும் பெரும்பயன் அடைகின்றன.

**விளையாட்டு மையங்கள்**

கிராமங்களிலே இருக்கின்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால் – இந்தச் செயலால் வேலைவாய்ப்பு இன்மை நீங்கிவிடும் என்று



நான் உறுதியளிக்க விரும்பவில்லை. இருந்தாலும் அவர்கள் வேறு திசையிலே திரும்பாமல் நல்ல திசையிலே அவர்கள் திரும்புவதற்கு விளையாட்டு மையங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இளைஞர் நலத்துறை சார்பாக 7000 இடங்களில் இதுவரையில் இந்த ஒராண்டு காலத்திற்குள்ளாக விளையாட்டு மையங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

உங்களுக்குத் தெரியும் கிலோ அரிசி ரூபாய் 3.50க்கு வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும், மேலே உள்ளவர்களுக்கும் என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் இந்தியாவிலே தமிழ்நாட்டில் மாத்திரம்தான் வழங்கப்படுகிறது என்கிற உண்மை உங்களுக்குத் தெரியும்.

மண்ணெண்ணை வழங்கும் நிலையங்கள் 214 அமைக்கப் பட்டிருக்கின்றன. மத்திய சர்க்கார் நிர்ணயித்த விலையைவிட லிட்டருக்கு 60 காசு குறைத்து தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்திருப்பதும், அப்படியே விற்பனையாவதும் உங்களுக்குத் தெரியும்.

தியாகிகளையும் சான்றோர்களையும் போற்றுவிக்கும் வகையில் மணிமண்டபங்கள், நினைவகங்கள், சிலைகள், நூல்கள் நாட்டுடமை, இவைகள் எல்லாம் இந்த நான்கரை ஆண்டுக் காலத்தில்; ஏற்கெனவே 1969 முதல் 1976 வரை நடைபெற்றது; இப்போதும் அந்தக் காரியம் நடைபெற்றிருக்கிறது.

**தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலவாரியம்**


60–க்கு மேற்பட்ட பல்வேறு வகை தொழிலாளர்களின் நலன் காக்க தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியம், இது தவிர மேலும் 10 தனித்தனி நல வாரியங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ஒய்வூதியத் திட்டம், மாநகராட்சிப் பகுதிகளில் குடிசைகளில் வாழும் குடும்பத்தினருக்கு கல்நார் வீடுகள், சுமார் 60 கோடி ரூபாய் செலவில் 9 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்கள், வணிகர்களுக்கு தொலைநோக்கு வரிக் கொள்கை.

1996–க்குப் பின் இதுவரையில் 2,60,654 தொகுப்பு வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. 'மெட்ராஸ்' சென்னை என பெயர் மாற்றப்பட்டது. தமிழ் இலக்கிய சங்கப் பலகை, குறள்பீட விருது வழங்கப்பட்டது. 1996–க்குப் பின் 2459 கோயில்களுக்கு குடமுழுக்கு விழா நடைபெற்றிருக்கிறது. திருக்கோயில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு காரியங்கள் நடைபெறுகின்றன. அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடி சிலை, சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்து குமரி முனையிலே திறந்து வைக்கப்பட்டது.

பத்திரிகையாளர்களுக்குக் குடும்ப உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. அரசு அலுவலர்களுக்கு மத்திய அரசின் 5–வது ஊதியக்குழு பரிந்துரை அடிப்படையில் வரலாறு காணாத ஊதிய உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது. அரசு ஒய்வூதியதாரர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியப் பெருமக்களுக்கு அவ்வாறே சலுகைகள், இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு முன்னுரிமைப்படி செய்யப்பட்டிருக்கிறது.

10,12 வகுப்புத் தேர்வுகளில் மாநில, மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. கிராமப்புற மாணவர்களுக்கு தொழிற் கல்விப் பிரிவுகளில் 15 விழுக்காடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து ஒவ்வொரு வகைத் தொழில் கல்விப்



பிரிவிலும் சேர விரும்பும் முதல் பத்து நிலை மாணவர்களின் செலவை அரசே ஏற்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொறியியல் கல்லூரியில் சேர ஒற்றைச் சாளர முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகம், சென்னையில் அண்ணல் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம், ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், பழங்குடியினர், சிறுபான்மையினர் நலம்பெறக் குழுக்கள், பல்வேறு திட்டங்கள் – உருது அகாடமி, அதனுடைய செயல்பாடுகள், பின்னடைவுப் பணியிடங்களை முன் தேதியிட்டு நிரப்ப முடிவு செய்து வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. மொத்தம் 11,264 இடங்கள் பின்னடைவு இடங்கள் என்று

கண்டுபிடிக்கப்பட்டு, இந்த ஆண்டு முதற்கட்டமாக 2,374 இடங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஆதிதிராவிடர்களுடைய இடங்கள் 1,467 என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் டெட்ராய்ட் என்று கூறக்கூடிய அளவிற்கு போர்டு, ஹுண்டாய், மிட்சுபிஷி கார் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சென்னை, திருச்சி, மதுரை, நெல்லை, கரூர், தஞ்சை, திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை, ராமேஸ்வரம் திருச்செந்தூர், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டத்தை ஏற்படுத்துதல், நீர்க்கால் வாய்கள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றைத் தூர் வாருதல் போன்ற பணிகளை நிறைவேற்றுதல், 1,700 கோடி ரூபாய் செலவில் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியோடு ஒரு மிகப்பெரிய திட்டம் செயல் படுத்தப்பட அறிவிக்கப்பட்டு, அதற்கான மத்திய அமைச்சரவை அதனுடைய ஒப்புதலையும் வழங்கியிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மிகப்பெரிய சலுகைகள்**

விவசாயிகளுக்கு, கழக அரசால் வழங்கப்பட்ட மிகப்பெரிய சலுகைகள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், விவசாயிகளைப் பற்றி நிறைய இங்கே பேசப்பட்டிருக்கிறது. கவர்னர்



உரையிலே நடைபெற்ற விவாதத்தில், குறிப்பாக வீரப்பனைப் பற்றித்தான் பேசப்பட்டது. இந்த விவாதத்திலே விவசாயிகளைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். வீரப்பனைப் பற்றிப் பேசிய தற்குச் சில விளக்கங்களை அளித்துவிடுவது நல்லது என்று கருதுகின்றேன்.

**அறியாத காரணத்தால் செய்யப்படுகின்ற பிரச்சாரம்**

ஏதோ 200 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய் வீரப்பனை பிடிக்கின்ற செலவு, போலீசாருக்காக இதுவரையிலே ஆகியிருக்கிறது என்றெல்லாம் பிரச்சாரம் செய்யப்படுகிறது. அது ஒருவேளை அறியாத காரணத்தால் செய்யப்படுகிற பிரச்சாரமாக இருக்கலாம். அறிந்து வேண்டுமென்றே செய்யப் படுகின்ற பிரச்சாரமாக நான் கருதவில்லை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், 1993–94 முதல் 31.12.2000 வரை தமிழகத்தில் சிறப்பு அதிரடிப்படைக்கான செலவு, ஊதியம் படிகள் அனைத்தும் சேர்த்து, வீரப்பனைத் தேடிச் செல்கின்ற அந்தக் காவல்துறைக்கான செலவு, அவர்களுடைய மாதச் சம்பளம் எல்லாம் உட்பட, 7 கோடியே, 42 இலட்சத்து, 75 ஆயிரத்து 385 ரூபாய்.

கர்நாடகத்தினுடைய செலவு, 1993–94 முதல், அக்டோபர் 2000 வரை, கர்நாடகத்தில் சிறப்பு அதிரடிப்படைக்கான செலவு, அந்தப் படைக்கான ஊதியம் படி எல்லாம் சேர்த்து, 20 கோடியே, 24 இலட்சத்து, 30 ஆயிரத்து 840 ரூபாய்.

ஏதோ, வீரப்பனிடத்திலே அணுகியிருக்கின்ற தீவிரவாதிகளுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும், நிறைய தொடர்பு இருப்பதைப்போல இந்த அவையிலே பேசப்பட்டது. நேற்றைக்குக் கூட இந்த அவையில் பேசப்பட்டிருக்கிறது. வெளியிலேயும் அறிக்கைகள் அவ்வாறு விடப்படுகின்றன. நான் அவர்களுக்கு ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். சொல்லத் தேவையில்லை, இருந்தாலும் சொல்ல விரும்புகின்றேன்.

**இரண்டு தீவிரவாத இயக்கங்களையும் தடைசெய்ய மத்திய அரசுக்கு கடிதம்**

1984–85 லேயிருந்து இந்தத் தீவிரவாதிகள் தமிழ் தேசிய மீட்புப் படையான டி.என்.ஆர்.டி., தமிழ்நாடு விடுதலைப்படை டி.என்.எல்.ஏ. என்று இரண்டு தீவிரவாத இயக்கங்கள் 1984–85–லேயிருந்து இருக்கின்றன. அதிலே

அப்பொழுது எல்லாம் அதிகம் பேர் கைது செய்யப்படவில்லை. இப்பொழுது, அந்தத் தமிழ் தேசிய மீட்புப் படையின் சார்பிலே உள்ளவர்கள் 25 பேரும், தமிழ்நாடு விடுதலைப்படையின் சார்பிலே உள்ள தீவிரவாதிகள் 141 பேரும் கைது செய்யப்பட்டு, சிறையிலே இருக்கிறார்கள். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

இந்த இரண்டு தீவிரவாத இயக்கங்களையும் தடை செய்ய வேண்டுமென்று தமிழக அரசு, மத்திய அரசுக்கு 16.12.2000 அன்று கடிதம் எழுதியிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன். 3.1.2001 அன்று மத்திய அரசு அதைப்பற்றி வேறு சில விவரங்களைக் கேட்டு, கடிதம் அனுப்பியிருக்கிறது. அந்த விவரங்களும் அனுப்பப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பிரச்சினைக்கு இனியாவது முற்றுப் புள்ளி வையுங்கள் என்று நண்பர்களையெல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்தியா விலேயே முதன் முதலாக 1990–ஆம் ஆண்டுதான் 16 இலட்சம் மோட்டார் பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் மறந்திருக்க முடியாது.

1995–96 இல் நெல் கொள்முதல் குவிண்டால் ஒன்றிற்கு மோட்டா ரகம் 360 ரூபாய், சன்ன ரகம் 375 ரூபாய்; 1.9.2000 முதல் குவிண்டால் ஒன்றிற்கு மோட்டா ரகம் 510 ரூபாய், சன்ன ரகம் 540 ரூபாய்; மத்திய அரசு நிர்ணய விலையை விட குவிண்டால் ஒன்றிற்கு 40 ரூபாய் இடைநிகழ்ச் செலவாக அரசு வழங்கி வருகிறது. இது ஏகபோக கொள்முதலாக இருக்குமேயானால் 50 ரூபாய் வழங்கப்படுகிறது.

மைய அரசு நிர்ணய விலையைவிட முந்தைய அரசினால் கரும்பு டன் ஒன்றிற்கு ரூபாய் 50, ரூபாய் 60 என்ற அளவிலேயே விலையை உயர்த்தி பரிந்துரை விலை நிர்ணயிக்கப்பட்டு வந்தது. ஆனால், இந்த அரசுதான் மைய அரசு நிர்ணயித்த விலையைவிட டன் ஒன்றிற்கு ரூபாய் 180 கூடுதலாக பரிந்துரை விலையை நிர்ணயித்து உள்ளது.

சர்க்கரை கட்டுமானத்தைப் பொறுத்து, 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிற்கு 1995–96ல் முந்தைய அரசு பரிந்துரை விலை ரூபாய் 560. தற்போது கழக அரசு பரிந்துரை விலை ரூபாய் 740. 10 விழுக்காடு சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு டன் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று தற்போது அறிவிக்கப் பட்டுள்ளது.

கரும்பு பயிர்க் கடன், கூட்டுறவுக் கடன் 45 ஆயிரம் என்பது கரும்பு விவசாயி ஒருவருக்கு, 55 ஆயிரமாகவும், இதர பயிர்களுக்கு ரூபாய் 25 ஆயிரம் என்பது 35 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

கரும்பு விவசாயிகளுக்கு நிலுவைத் தொகை வழங்க 1997–98இல் கூட்டுறவு, பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கழக அரசு வழங்கிய முன்பணம் 76.41 கோடி ரூபாய். 1998–99இல் இத் தொகை ரூபாய் 210 கோடி ரூபாய். 1999–2000ஆம் ஆண்டிற்கு 30 கோடி ரூபாய், இப்போது மீண்டும் வழங்கப்பட்டிருக்கிறது.

டிசம்பர் 1996 இல் ஏற்பட்ட வெள்ளச் சேதம் காரணமாக விளைபொருள் இழப்பிற்காக கழக அரசால் வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.55.15 கோடி. இதன் மூலம் பயன்பெற்ற விவசாயிகள் 10 இலட்சத்து, 5 ஆயிரத்து 166 பேர். மீண்டும் நவம்பர் 1997ல் ஏற்பட்ட வெள்ளச் சேதம் காரணமாக, விவசாயிகளுக்கு கழக அரசால் வழங்கப்பட்ட பயிர் இழப்பீட்டுத் தொகை, வெள்ள நிவாரணம் உட்பட ரூ. 59 கோடி ரூபாய். இதன் மூலம் பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 50 ஆயிரத்து 297.

மூன்று குதிரைத் திறன் கொண்ட ஆயில் இன்ஜின்களுக்கு பதிலாக 5 குதிரைத் திறன் கொண்ட ஆயில் இன்ஜின் வாங்க சிறு விவசாயிகளுக்கு, மிக, மிகச் சிறு விவசாயிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மலை வாழ் விவசாயிகளுக்கு, மானியத் தொகை கழக அரசால் வழங்கப்படுகிறது.

கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்படும் கடன் தொகைக்கு விதிக்கப்படும் 13 சதவிகித வட்டி, 12 சதவிகிதமாகவும் 50 ஆயிரம் ரூபாய் வரை கடன் தொகைக்கு விதிக்கப்படும் 16 சதவிகித வட்டி 15 சதவிகிதமாகவும் குறைப்பது என்று 24.10.2000 அன்று அறிவிக்கப்பட்டது.

இஃதன்னியில் வட்டியைக் குறைப்பதற்காக வட்டியை அறவே இரத்து செய்ய முடியாத சூழ்நிலை நபார்டின் காரணமாக நமக்கு ஏற்பட்டிருக்கிறது. வட்டியினுடைய தொகையைக் குறைப்பதற்காக நாம் ஊக்கத் தொகையாக தருவதன் மூலமாக 12 சதவிகித வட்டி என்பது நாம் தருகின்ற 7 சதவிகிதம் ஊக்கத்

தொகையின் காரணமாக 5 சதவிகிதம் வட்டியாக குறைகிறது என்பதையும் நாம் மறைத்துவிடக் கூடாது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதுபோல வணிகர்கள். வணிகர்களை அழைத்து வைத்துப் பேசிதான், கடந்த 2 ஆண்டுக்காலமாக தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதிநிலை அறிக்கையை தயார் செய்து, அவர்கள் கோருகின்ற சலுகைகள், அவர்களுடைய கோரிக்கைகள் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து, தக்க தீர்வு கண்டு அந்த வகையிலேதான் வரி விதிப்பதை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கிறது. அதைப்போல, விவசாயிகளை அழைத்து வைத்துப் பேசி, அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, அவைகளையும் நிதிநிலை அறிக்கையிலே நாம் வெளியிட்டிருக் கின்றோம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடன் தீரவில்லை என்ற கவலை**

நிறைவாக ஒன்றிரண்டைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் இந்த அவையில் **96–97, 97–98** வரை என்று வைத்துக் கொள்ளலாம். இங்கே எனக்கு ஏராளமான பாராட்டுக்கள். நானே கூட எழுந்து வெளியே சென்று விடலாமா என்று வெட்கப்படுகின்ற அளவிற்கு அவ்வளவு பாராட்டுக்கள். எதிர்க்கட்சிகள் ஆனாலும் சரி, தோழமைக் கட்சிகளானாலும் சரி, எல்லா கட்சிகளின் சார்பிலும் அப்படிப்பட்ட பாராட்டுகள் எனக்குக் குவிந்தன. அண்ணா சொல்வதைப் போல எனக்கு அந்தப் பாராட்டுக்களைக் கூறிய போது நான் மிகவும் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறேன் என்று அப்போது எண்ணினேன். ரொம்பக் கடன்பட்டிருக் கிறோமே, இவ்வளவு பாராட்டுகிறார்களே, என்ன செய்வது, எப்படி திருப்பிக் கொடுக்கப் போகிறோம் என்று எண்ணினேன். நல்ல வேளையாக அவைகளை யெல்லாம் குறைத்துக் கொண்டு பாராட்டுவதற்குப் பதிலாக என்னைத் தாக்கி சில பேர் பேசியிருக்கிறீர்கள். அப்பொழுதும் கடன் தீர்ந்ததாகச் சொல்ல முடியாது. பாராட்டியது தான் அதிகம். இன்னும் கடன் தீரவில்லை என்ற கவலை எனக்கு இருக்கின்றது.

**அனைவரையும் எனது உடன்பிறப்புக்களாக கருதித்தான் செயல்பட்டிருக்கிறேன்**

நான் இந்த பதினான்கு ஆண்டுக் காலம் முதலமைச்சராக இருந்து எந்தவொரு நேரத்திலும் ஆணவமாகச் செயல்பட்டதில்லை. உங்களுடைய கோரிக்கைகளை நான் அலட்சியப்படுத்தியதில்லை. உங்களை ஏதோ சட்ட மன்ற உறுப்பினர்கள், நான் முதலமைச்சர், நாங்கள் எல்லாம் அமைச்சர்கள் என்ற அளவிலே என்றைக்கும் உங்களைப் பார்த்ததில்லை. எல்லா நேரத்திலும் உங்களை – நான் எப்படி எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களை உடன்பிறப்புக்கள் என்று அழைக்கிறேனோ அப்படிப்பட்ட உடன் பிறப்புக்களாகத் தான் உங்களையெல்லாம் கருதிக்கொண்டு இந்த 14 ஆண்டுக் காலமும் செயல்பட்டிருக்கிறேன்.

குறைகள் இருக்கலாம். ஆனால் இந்த 14 ஆண்டுக் கால ஆட்சியில் குற்றங்கள் என்று சொல்லப்பட்டு, ஊழல்கள் என்று சொல்லப்பட்டு அவைகள் நிரூபிக்கப்பட்டன என்ற எந்தச் சான்றும் கிடையாது என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

நீங்கள் சொன்னவைகளையெல்லாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். பனியன் வரியைக் குறை என்று சொன்னால் குறைத்தோம். கோட்டை அமீர் பெயரில் பதக்கம் கொடு என்று எதிர்க்கட்சித் தலைவர் சொன்னால் கொடுக்கிறோம். அது மாத்திரமல்ல; அவர்கள் குடும்பத்திற்கு வீடு கொடு என்று கட்டளையிட்டார். வீடு கொடுத்து ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது. வீடும் கொடுக்கப்பட்டு விட்டது. அவர்கள் குடும்பத்தினருக்கு வேலை கொடு என்றார். வேலையும் கொடுக்கப்பட்டுவிட்டது. இப்படி ஒவ்வொன்றாகச் சொல்ல விரும்பவில்லை. தனிப்பட்ட முறையிலும் சரி, நண்பர்கள் என்ற முறையிலும் சரி, அவையின் உறுப்பினர்கள் என்ற முறையிலும் சரி, நீங்களும் ஆட்சியிலே ஒரு அங்கம் என்ற முறையில் எல்லோருக்கும் எங்களால் ஆன எங்களுடைய கடமைகளை ஆற்றியிருக்கிறோம்.

இதிலே சில நேரங்களில் நானோ, அமைச்சர்களோ ஆத்திரப்பட்டுப் பேசியிருந்தால் அவைகளை யெல்லாம் நீங்கள் பொருட்படுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் அப்படிப்பட்ட நிகழ்வுகள் ஏற்படவில்லை. உங்களுடைய ஆத்திரத்தைத் தான் நாங்கள் தாங்கிக் கொண்டிருந்திருக்கிறோமே யல்லாமல் எங்களுடைய ஆத்திரம் எதுவும் வெளிப்பட்டு விடவில்லை என்பது உங்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

**பெயர்தான் குப்பைத்தொட்டி; ஆனால் அதிலே பல விஷயங்கள் இருக்கும்**

நேற்றைக்கு இங்கே நடந்ததைக் கூடக் கேள்விப்பட்டேன். இந்த நிதி நிலை அறிக்கை ஒரு

குப்பைக் கூடையிலே போடப்பட்டது என்று கேள்விப்பட்டேன். குப்பைக் கூடையை நான் கேவலமாகக் கருதுபவனல்ல. குப்பைத் தொட்டி என்ற பெயரில் நானே ஒரு கதை எழுதி, அது பல மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு பலராலும் பாராட்டப்பட்டுள்ளது. உலக மொழிகளிலே எல்லாம் குப்பைத் தொட்டி மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதனை நம்முடைய அழகிரி போன்றவர்கள் படித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். பெயர்தான் குப்பைத் தொட்டி, ஆனால் அதிலே பல விஷயங்கள் இருக்கும்.

ஒரு குப்பைத் தொட்டியிலே என்னென்ன இருக்கும் என்று அதிலே போடப்படுகின்ற காகிதங்களிலே உள்ள ஒவ்வொன்றும் கதை சொல்வதைப் போல ஒரு சிறு கதை எழுதியிருந்தேன். அது இந்தியில், மலையாளத்தில், கன்னடத்தில், தெலுங்கில், ஆங்கிலத்தில் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதனால் குப்பைத் தொட்டியில் போட்டதால் நான் ஒன்றும் வருத்தப்படவில்லை. அந்த நிதி நிலை அறிக்கையிலே கருணாநிதியின் பெயர் இருக்கிறது என்பதால் அதைக் குப்பைத் தொட்டியிலே போட்டால் நான் வருத்தப்படப் போவதில்லை. நான் மிகவும் கேவலம். அவ்வளவு பெரிய ஆள் அல்ல. என்னைக் குப்பைத் தொட்டியிலும் போடலாம், சாக்கடையிலும் போடலாம். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப் படக் கூடியவன் அல்ல. அண்ணாவைப் போல எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்ற அந்தக் கொள்கையைப் பின்பற்றி நடந்து கொண்டிருப்பவன் நான். எனவே அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

எனக்குள்ள வருத்தம் எல்லாம் அந்த நிதி நிலை அறிக்கையிலே வள்ளுவருடைய குறளும் இருக்கிறதே, அதைக் குப்பைத் தொட்டியிலே போடலாமா? பெரியார் சமத்துவபுரத் திட்டம் இருக்கிறதே, அதைப்போடலாமா? அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்று அவருடைய பெயர் இருக்கிறதே, அதைக் குப்பைத் தொட்டியிலே போடலாமா? அருமை நண்பர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் இருக்கிறதே, அதைக் குப்பைத் தொட்டியிலே போடலாமா? தியாகிகள், பெருந்தலைவர் காமராஜரின் பெயர், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பெயர், அண்ணல் அம்பேத்கர் பெயர், மற்றும் தலைவர்களுடைய பெயர்கள் எல்லாம் அடங்கிய திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் குப்பைத் தொட்டியிலே போட்டு விட்டார்களே என்பது தான் எனக்குள்ள வருத்தம்.

அதையெல்லாம் விட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 77 இலட்சம் ரூபாய் கொடுக்கின்ற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், அதையும் குப்பைக் கூடையிலே போட்டு, தன்னையும் குப்பைத் தொட்டியிலே போட்டுக் கொண்டு விட்டார்களே என்பது தான் எனக்குள்ள கவலை.

**தாய் உள்ளத்தோடு பேசிய பொன்னம்மாள் அவர்களுக்கு கனிவான நன்றி**

நான் கேள்விப்பட்டேன். நேற்றையதினம் அக்காள் பொன்னம்மாள் அவர்கள் பேசிய பேச்சை பத்திரிகையிலே படித்தேன். நான் அவைக்கு வர இயலவில்லை. ஒரு தாய் உள்ளத்தோடு அவர்கள் பேசிய பேச்சுக்கு என்னுடைய கனிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டசபை கட்சித் தலைவர் தம்பி கணேசன் அவர்கள் பேசிய பேச்சு என்னை ஊக்கப் படுத்துவதாக அமைந்திருக்கின்றது. என்னைக் குறை சொல்லி சிலர் பேசிய பேச்சுக்கள் எல்லாம்கூட என்னை ஊக்கப்படுத்து வதற்காகத்தான் என்று நான் எடுத்துக் கொள்வேன் என்று கூறி உங்களுக்கெல்லாம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி தெரிவிப்பதால் நாளைக்கு, நன்றி தெரிவித்து விட்டார், அவ்வளவு தான், ''கடைசியாக நன்றி தெரிவித்து விட்டார், விடை பெற்றுக் கொண்டார்'' என்று யாரும் கருதிக் கொள்ளக் கூடாது. மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

**சட்டப்பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து 2.2.2001 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

● ● ●

தமிழகத்தின் தென்பகுதியிலே குறிப்பாக தென்மாவட்டங்களிலே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற முனைப்போடுதான் கடந்த ஆண்டு உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னாள் நீதியரசர் இரத்தினவேல் பாண்டியன் அவர்களின் தலைமையில் தெற்கு மாவட்டங்களை ஆய்வு செய்து ஒரு அறிக்கையைத் தாருங்கள், அங்கே என்னென்ன முன்னேற்றங்களைச் செய்யலாம் என்று கேட்டு அந்தக் குழுவும் இந்த மாவட்டங்களுக்கெல்லாம் சென்று சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் இவர்களையெல்லாம் கலந்துரையாடி என்னென்ன திட்டங்கள் தெற்கு மாவட்டங்களுக்குத் தேவை

**நாங்குநேரியில் தொடங்கப்பட்ட திட்டத்தால் 1 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு**

அவற்றிலே ஒன்றுதான் நேற்றைக்கு நாங்குநேரியில் தொடங்கப்பட்ட மாபெரும் திட்டம். அந்தத் திட்டத்தின்படி அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளிலிருந்து பல தொழில் மையங்கள் அந்த நாங்குநேரி தொழில் வளாகத்திலே தொழில்களை ஆரம்பிக்கவும் அதன் காரணமாக ஆரம்பத்திலே ஐம்பதாயிரம் பேர், அறுபதாயிரம் பேருக்கு வேலை கிடைக்கத் தொடங்கி ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய அளவிற்கு ஐந்தாண்டு காலத்திலே அந்தப் பகுதி வளர்ச்சி பெற இருக்கிறது.

# கட்சிக்கு அப்பாற்பட்டு தமிழர்களுக்காக உழைக்கின்ற ஆட்சி இந்த ஆட்சி

□ முதலமைச்சர் கலைஞர்

என்பதை ஒரு அறிக்கையாகத் தந்தார்கள். அந்த அறிக்கையின் அடிப்படையில் இன்றைக்குக் காரியங்கள் இந்த அரசின் வாயிலாக நடைபெறத் தொடங்கி யிருக்கின்றன.

அந்த விழாவிலே கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியவர்களில் முக்கியமானவர் நாங்குநேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணன். அவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அவர் அந்த விழாவில் பேசும்போது "என்னால் பாராட்டாமல் இருக்க



முடியாது'' என்று பாராட்டினார். அவர் பாராட்டிப் பேசும்போது, "என்னுடைய தொகுதிக்கு எந்தக் கோரிக்கை வேண்டுமென்றாலும் நான் முதலமைச்சரை கேட்பேன். சலிக்காமல் அவரும் தந்தார். மற்ற அமைச்சர்களிடமும் நான் தனித் தனியாகக் கேட்டு யாரும் இல்லை என்று சொல்லாமல் பல திட்டங்களை என் தொகுதிக்கு கொடுத்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் நன்றி தெரிவிக்கிறேன்" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கிருஷ்ணன் நேற்று சொன்னார்.

### மாற்றுக் கட்சியினரின் மனம் திறந்த பாராட்டு

இன்றைக்கு இந்த தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத் திறப்பு விழா நிகழ்ச்சியில் இந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய நீண்ட கால அருமை நண்பர் அழகர் ராஜா அவர்கள் இந்த அரசை பாராட்டினார். நேற்று பாராட்டியவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். இன்று பாராட்டியிருப்பவர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். இரண்டு பேரும் இப்பொழுது "ஒரு அணியில் இருப்பதாகக் கேள்வி". எங்கள் அணியிலே இல்லை. வேறு அணியிலே இருந்தாலும் பாராட்டு கிறார்கள். பாராட்டாமல் இருக்க முடியவில்லை என்று சொல்லி மனச்சாட்சிப்படி பாராட்டுகிறேன் என்று அழகர் ராஜா சொன்னார்.

'பூம்புகார்' படத்தில் நான் ஒரு வசனம் எழுதியிருக்கிறேன். "மனசாட்சி உறங்கும்போதுதான் மனக் குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது" என்று எழுதியிருக்கிறேன். சில மனக் குரங்குகள் ஊர் சுற்றுகிற காரணத்தால் நான் அதைச் சொல்ல நேரிட்டது. ஆனால், அழகர் ராஜா போன்றவர்களுக்கு மனச்சாட்சி இருப்பதை இங்கே அவரே எடுத்துச் சொல்லி மனச்சாட்சி இருப்பதால் இந்த அரசை நான் பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டு இந்த ஆட்சியின் மூலமாக இந்தத் தொகுதிக்குக் கிடைத்துள்ள நன்மைகளையெல்லாம் அவர் எடுத்துக்காட்டினார்.

### கட்சி வேறுபாடு இன்றி தமிழர்களுக்காக உழைக்கும் ஆட்சி

நீங்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஆட்சி இங்கே பண்பாளர் பி.டி.ஆர். எடுத்துக் காட்டியதைப் போல ஆளுங்கட்சியிலே உள்ள தொகுதிகளைத்தான் கவனிக்கிறது என்று யாரும் கருத முடியாது. இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்றும் இன்றும் பாராட்டியிருக்கிறார்கள். ஒருவர் கம்யூனிஸ்ட் கட்சி. இன்னொருவர் இன்றைக்குப் பாராட்டிய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். பாராட்டுகிற அளவுக்கு எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்குக்கூட இந்த அரசு தொகுதிகளுக்கு



பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறதென்றால் கட்சி மாறுபாடு இல்லாமல், கட்சி வேறுபாடு இல்லாமல், கட்சிக்கு அப்பாற்பட்டு தமிழர்களுக்காக உழைக்கிற ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற தென்பதற்கு இதைவிட சான்றுகள் வேறு தேவை யில்லை என்றே நான் கருதுகிறேன்.

இங்கே தேனி நகர் மன்ற தலைவர் கண்ணப்பன் அவர்கள் 'வாழ்த்துப்பா' ஒன்றினை அச்சடித்தே கொடுத் திருக்கிறார். அந்த வாழ்த்துப்பாவை நான் படித்தாலே, அதை அவர் பெருமையாகக் கருதுவார்.

படித்தாலே இந்த நகரத்திலே மாத்திரம் இந்த அரசு என்னென்ன செய்திருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

அவர் சொல்கிறார்:

தேனிக்கு புதிய குடிநீர்த் திட்ட துவக்க விழாவில் தேனி நகர் மன்றத் தலைவரின் வாழ்த்துப்பா

முத்தமிழின் முழுமூச்சாம் முதல்வருக்கு-
இயற்றமிழில் இளைப்பாறும் இளையோனின்
முதல் வணக்கம்
பண்பாளர் பழனிவேல் ராஜனாருக்கு
பழகுதோழர் கண்ணப்பனின் வணக்கம்.

மாண்புமிகு அமைச்சர்களுக்கும் மாவட்ட
ஆட்சியருக்கும்
தேனி நகரத்தந்தையின் வணக்கம்.

ஐந்தாண்டு காலத்தில் ஐந்தாம் முறையாய்
தேனிப்பக்கம் வருகைதரும்
தமிழக முதல்வரே!

வரும்முன் காப்பவன் அறிவாளி
வந்தபின் நினைப்பவன் ஏமாளி என
உணர்ந்திட
வரும்முன் காப்போம் திட்டம் தந்தவரே!

உழவனின் உடையோ கந்தை
இந்தக் கந்தையை களைய கொண்டுவந்தாய்
உழவர் சந்தை
இது தமிழகம் கண்டறியா விந்தை என
உழவர் சந்தையை தந்த தமிழகத் தந்தையே!

சகோதரத்துவம் வளர்க்கும்
சமத்துவபுரம்
கிராமங்களை மலர வைக்கும்
அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்
ஒற்றுமை வளர்க்கும் நமக்கு நாமே திட்டம்
நமக்கு நாமே திட்டம்
என பற்பல தந்தவரே!
தேனியை மாவட்டமாக்கினாய்
மாவட்ட தலைநகராக்கினாய்
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை
துவக்குகிறாய்

இதுமட்டுமா?
தேனியில்....

பெனிடிக் மெட்ரிக் பள்ளிக்கு அனுமதி
தந்தாய்
பாக்யா மெட்ரிக் பள்ளிக்கு அனுமதி தந்தாய்
மேரிமாதா மெட்ரிக் பள்ளிக்கு அனுமதி
தந்தாய்
முத்தையா பள்ளியை நடுநிலைப்
பள்ளியாக்கினாய்
பத்மனாபன் பள்ளியை உயர்நிலைப்
பள்ளியாக்கினாய்
கான்வென்ட் பள்ளியை மேல்நிலைப்
பள்ளியாக்கினாய்
நாடார் சரஸ்வதி கலைக் கல்லூரி தந்தாய்
எந்தன் குடும்பத்தினரின் உடையப்பா
பொறியியல் கல்லூரிக்கு
உயிர்தந்து உலவவிட்டாய்... அடேயப்பா!

அதுமட்டுமா!
தேனியில்

வட்டச்சாலை அமைக்க நிதி தந்தாய்
திட்டச்சாலை அமைக்க நிதி தந்தாய்
தெருவிளக்கு பல நூறு அமைக்க நிதி தந்தாய்
சின்னஞ்சிறு குடிநீர்த் தொட்டி அமைக்க நிதி
தந்தாய்

அனைத்துக்கும் மேலாய்

ஆட்சியர் அலுவலக அடிக்கல் விழாவில்
வைகை குடிநீர் திட்டம் வேண்டுமென்ற
எந்தன்
விண்ணப்பத்தை ஏற்று இன்று
தேனிக்கு 6.2 கோடியில் புதிய குடிநீர்
திட்டத்தை துவக்குகிறாய்

இத்தனை செய்த உந்தனுக்கு சர்க்கரையை
வாயில் போட நினைத்தேன்
நீவிரே சர்க்கரை வியாதிக்காரர்
என் மனம் கூசுகிறது. நீவிர் பலகாலம்
வாழவேண்டும்.

என்று வாழ்த்தியிருக்கிறார்.

ஆனால் ஒரேயொரு திருத்தம். நான் ஒன்றும் சர்க்கரை வியாதிக்காரன் அல்ல. அதனால் சர்க்கரையை தாராளமாக என்னுடைய வாயிலே போடலாம் என்று தேனி நகர்மன்றத் தலைவர் கண்ணப்பனுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். இதை நான் படித்துக் காட்டியதற்குக் காரணம் எனக்கு சர்க்கரை வியாதி உண்டா இல்லையா என்பதை தெரிவிப்பதற்காக அல்ல.

**சுயேச்சையாக சிந்திக்கிறவர்களுக்கு இந்த அரசின் நன்மைகள் புரியும்**

இவ்வளவு காரியங்கள் ஒரு நகரத்திற்கு இந்த ஐந்தாண்டு கால ஆட்சியிலே நடத்தப்பட்டிருக்கின்றன என்பதை ஒரு நகராட்சித் தலைவர் – அவர் எந்தக் கட்சியையும் சார்ந்தவரல்ல, சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றவர் என்று எனக்கு நன்றாகத் தெரியும் – அவர் ஆளுங்கட்சியையோ எதிர்க்கட்சியையோ சார்ந்தவரல்ல... எனவே சுயேச்சையாக யார் சிந்தித்தாலும் அவர்களுக்கு இந்த அரசின் நன்மைகள் நன்றாகப் புரியும். சுயேச்சையாக சிந்திக்கின்ற காரணத்தினால்தான் அழகர்ராஜா அவர்கள்கூட மனச்சாட்சிப்படி சொல்கிறேன் என்று என்னைப் பாராட்டியிருக்கிறார், இந்த அரசைப் பாராட்டி யிருக்கிறார்.

இன்றைக்கு இங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கின்ற மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் இருக்கிறதே, இதுபோன்ற மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்களை அமைப்பதற்கு பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகனும், அவருடைய துறையிலே இருக்கின்ற அதிகாரிகளும் எடுத்துக் கொள்கின்ற முயற்சிகள் நானே வியந்து போற்றுகின்றவண்ணம் அழகுற அமைந்திருக்கின்ற இந்தக் கட்டடங்கள் சாட்சியமாக விளங்குகின்றன.

1996–இல் தமிழகத்திலே கழக அரசு அமைந்தபிறகு எந்த ஆட்சியும் செய்யாத ஒரு பணியாக அனைத்து நவீன வசதிகளோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள் தொடர்ந்து கட்டப்பட்டன. சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 9 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு 11.12.1996 அன்று திறக்கப்பட்டது. விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 8.6.1998 அன்று திறக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 4 கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 16.9.98 அன்று திறக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 5 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 8.6.2000 அன்று திறக்கப்பட்டது. நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 6 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 24.6.2000 அன்று திறக்கப்பட்டது.

கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 25.6.2000 அன்று திறக்கப்பட்டது. திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 6 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 27.8.2000 அன்று திறக்கப்பட்டது. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 6 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 27.8.2000 அன்று திறக்கப்பட்டது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 7.10.2000 அன்று திறக்கப் பட்டது.

இன்று 12.2.2001–இல் பத்தாவது மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடமாக தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு திறக்கப்படுகிறது.

எனவே 10 மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டடங்களைப் பார்த்தோர் வியக்கும் வண்ணம், பார்த்தோர் பாராட்டும் வண்ணம் எழுப்பியுள்ள பொதுப்பணித்துறைக்கும் அந்தத் துறையின் அமைச்சர் தம்பி துரைமுருகனுக்கும் என்னுடைய பாராட்டுக்களை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**அடிக்கல் நாட்டப்பட்ட 6 மாதங்களில் கட்டடங்கள்**

இதுவரையிலே வழங்கிய திட்டங்கள், நிறைவேற்றப்பட்ட காரியங்களுக்கு மேலாக இன்றைக்கு மாத்திரம் 26 கோடியே 86 இலட்சம் ரூபாய் செலவில் பல வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்படுகின்றன. 25 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ள பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டப்படுகின்றன. இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் அடிக்கல் நாட்டப்பட்டால், அடிக்கல்லாகவே இருந்து விடாது. அடிக்கல் நாட்டப்பட்ட ஆறு மாதக் காலத்திற்குள் கட்டடம் எழுப்பப்படும். ஆரம்பிக்கப்பட வேண்டிய பணி ஆரம்பிக்கப்பட்டே தீரும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

5 கோடியே 18 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் செலவில் 7,633 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளின் கீழ் நலத் திட்ட உதவிகள் இன்றைக்கு வழங்கப் படுகின்றன. ஆக மொத்தம் 57 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு பணிகள் தேனி மாவட்டத்தில் இன்றைக்கு செயலாக்கம் பெறுகின்றன.

இவையல்லாமல் 43 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு நலத்திட்டப் பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டு தேனி மாவட்டம் முழுவதிலும் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

10,585 பயனாளிகளுக்கு தேனி மாவட்டத்தில் மட்டும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. 272 பேருக்கு 468 ஏக்கர் நிலம் இலவசமாக பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளன. வீட்டுமனைப் பட்டா வழங்கும் இந்த அரசின் புதிய திட்டத்தின் கீழ் 3,169 பேருக்கு 102 ஏக்கர் நிலத்தில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 14 கோடியே 4 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் 1,616 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 2 கோடியே 17 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில் 289 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதிலே மக்களின் பங்கு 54 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய். பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டத்தின்கீழ் 3 கோடியே 97 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவிலே நான்கு சமத்துவபுரக் குடியிருப்புகள் இந்த மாவட்டத்திலே மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் ஆரம்பிக்கப் படாமல் தமிழ்நாட்டில்தான் முதன் முதலாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டிற்காகத் தொடங்கி – முதலில் 25 இலட்சம் ரூபாய் ஒரு தொகுதிக்கு என்று ஆரம்பித்து, பிறகு 35 இலட்சம் ரூபாய், 50 இலட்சம் ரூபாய் என்று தொடர்ந்து இந்த ஆண்டு தொகுதிக்கு 77 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டு ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

தேனி மாவட்டத்தில் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் 162 மருத்துவ முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டிருக்கின்றன. 1 இலட்சத்து 71 ஆயிரம் பேருக்கு மருத்துவப் பரிசோதனை நடத்தப் பட்டிருக்கிறது. 8,800 பேர் தொடர் சிகிச்சைக்காக பெரிய மருத்துவமனைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளார்கள். 9 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்புடைய மருந்துகள் இலவசமாக இந்தத் திட்டத்திற்காக இந்த மாவட்டத்திலே மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்திலே தேனி, பெரியகுளம், கம்பம், போடிநாயக்கனூர் ஆகிய நான்கு இடங்களில் உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டுள்ளன. உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டதின் காரணமாக உழவருக்கு உவகை, உபயோகிப்போருக்கும் நன்மை. இடைத் தரகர் இல்லாமல் இன்றைக்கு உழவர் சந்தைகளில் பல கோடி ரூபாய் காய்கறிகள் விற்பனையாகின்ற காட்சியினை நாம் காணுகிறோம்.

இந்த மாவட்டத்திலே மினி பஸ்கள் ஓடுகின்றன. சிறிய பஸ்கள் திட்டத்தை இந்த அரசு தான் அறிமுகப்படுத்தி தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 3,500 மினி பஸ்கள் இன்றைக்கு பட்டிக்காடுகளை, குக்கிராமங் களை இணைக்கின்ற அளவிற்கு அவைகள் பயன்படுகின்றன. இது கிராம மக்களுக்காகச் செய்யப்பட்ட ஒரு மகத்தான சாதனை.

மூவலூர் மூதாட்டியார் திட்டத்தின்கீழ் இந்த மாவட்டத்தில் 3,674 ஏழைப் பெண்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதம் 3 கோடியே 67 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் நிதி உதவியாக மாத்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆண்டுக்கு 1,634 டன் அளவிற்கு கூடுதல் உணவு உற்பத்தி செய்யப் பயன்படும் சோத்துப்பாறை அணைத் திட்டம் 24 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்படுகிறது. நடப்பாண்டில் அது பூர்த்தியடையும்.

**18ஆம் கால்வாய் திட்டத்தின் திறப்பு விழாவில் உங்களை சந்திப்பேன்**

ஆண்டுக்கு 1,973 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகை செய்யும் 18–ஆம் கால்வாய்த் திட்டம் 23 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. நம்முடைய பேரவையின் தலைவர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அவர்களுடைய பெருமுயற்சியினால் அவர் எடுத்துக் கொண்ட அக்கறையினால், அவர் காட்டிய ஆர்வத்தினால் இந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருடைய ஆர்வத்தின் காரணமாக இந்த மாவட்டத்திற்கு மகத்தான வளத்தைப் பெருக்கக் கூடிய திட்டம் இந்த 18–ஆம் கால்வாய் திட்டம் தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அது விரைவிலே முடிவடையும். அது முடிவடைகின்ற நேரத்திலே அதன் திறப்பு விழா நடைபெறும். அநேகமாக இங்கே வாழ்த்தியவர்களுடைய வாழ்த்தின் அடிப்படையில் அதன் திறப்பு விழாவிற்கு நானே வந்து உங்களையெல்லாம் சந்திக்கக் கூடிய நிலை ஏற்படும் என்று நம்புகிறேன்.

அதைப் போலவே சண்முகா நதித் திட்டம். அது 1,586 டன் கூடுதல் உணவு உற்பத்திக்கு வகை செய்யும் திட்டமாகும். இப்படி பல திட்டங்கள். இதற்கெல்லாம் சிகரம் வைத்ததைப் போல பெரியாறு அணையிலேயிருந்து நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான அளவு தண்ணீர் கிடைக்க வேண்டுமென்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். இதிலே நான் கேரள அரசை குறை கூறுவதற்காகவோ அல்லது கேரள அரசுக்கும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அரசுக்கும் ஒரு சர்ச்சை ஏற்பட வேண்டும் என்பதற்காகவோ பிரச்சினையைப் பெரிதாக்க விரும்பவில்லை. பிரச்சினையைப் பெரிதாக்காமல் இருக்க வேண்டிய பொறுப்பு கேரளத்தை ஆண்டு கொண்டிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்திற்கு உண்டு என்பதை நான் நன்றாக உணருகின்றேன்.

கேரள அரசு 156 அடி மட்டத்திற்கு தண்ணீரைத் தேக்க முடியாது என்றார்கள். சரி 156–ம் வேண்டாம், இப்போது கொடுக்கின்ற 132–ம் வேண்டாம். பதிலாக 146 அடி அளவிற்குக் கொடுங்கள் என்றெல்லாம் கேட்டுப் பார்த்தோம். நானும் பொதுப்பணித்துறை அமைச்சரும், நல்வாழ்வுத்துறை அமைச்சரும் கேரளத்தில் திருவனந்தபுரத்திற்கே சென்று அமைச்சர்களோடும் முதல்வரோடும் விவாதித்தோம். ஆனால் வெற்றி கிட்டவில்லை. அதற்குப் பிறகு டெல்லியிலே உள்ள இந்தத் துறையின் அமைச்சரையும் பிரதமரையும் சந்தித்தோம். அவர்களுடைய முன்னிலையிலே நானும் கேரள முதல்வர் நயினார் அவர்களும் இரண்டு மாநில் அமைச்சர்களும் கலந்து பேசி, சரி அந்த அணையிலே தண்ணீரை அதிகப்படுத்துவதால், உயரத்தை அதிகப்படுத்துவதால் ஆபத்து வருமென்று சொல்கிறீர்கள். அது வருமா வராதா என்று ஒரு நிபுணர் குழு ஆராய்ந்து சொல்லட்டும், நாங்கள் கட்டுப்படுகிறோம், இதைவிட உயர்த்த முடியாது என்று அந்தக் குழு சொல்லுமேயானால் அதற்குக் கட்டுப்படுகிறோம், ஓரளவு உயர்த்தலாம் என்று அந்தக் குழு சொன்னால் நீங்கள் கட்டுப்பட வேண்டுமென்று கேரள முதல்வர் திரு. நயினார் அவர்களிடம் நான் கேட்டேன். அவரும் சரியென்று ஒத்துக் கொண்டார்.

**முழு திருப்தி இல்லாவிடினும் இப்போதைக்கு மகிழ்ச்சிகரமான முடிவு**

மத்திய அமைச்சர் நடுநிலையாக இருந்து ஒரு கமிட்டியை அப்படியே போட்டார். அந்தக் கமிட்டியை கேரள அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வந்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி ஒரு நிபுணர் குழு இதுகுறித்து ஆராய்ந்து முடிவு சொல்லட்டும் என்றும் இறுதியாகச் சொல்லி, அந்த நிபுணர் குழு நேற்றைய முன்தினம் உட்கார்ந்து பேசி எல்லா பொறியாளர்களையும் அழைத்து பேசி, தமிழ்நாட்டின் பொறியாளர்கள், கேரள அரசின் பொறியாளர்கள் அனைவரையும் உட்கார வைத்துப்பேசி 142 அடி வரையிலே உயர்த்தலாம் என்று அந்தக் குழு சொல்லியிருக்கின்றது.

மகிழ்ச்சிகரமான முடிவு. போதுமானதல்ல, முழு திருப்தி இல்லை. இருந்தாலும் இப்போது 142 வருகிறது. அடுத்த கட்டமாக அதற்கு மேலும் கிடைப்பதற்கு நாம் வாதாடுவோம், இப்போது 142 ஆவது வரட்டும் என்று நாம் மகிழ்ச்சி அடைகின்ற நேரத்தில் கேரள அரசு அதற்கும் தடை போடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. கேரள அரசு இதை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பது போன்ற செய்தி கிடைத்திருக்கின்றது.

ஆனால் கேரள அரசை ஒத்துக் கொள்ளச் செய்யக் கூடிய அந்த முயற்சியை இங்கேயிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியிடும்போதுகூட அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே நாங்கள் முல்லைப் பெரியாறு அணையை உயர்த்துவதற்கு, தண்ணீரின் அளவை உயர்த்துவதற்குப் போராடுவோம் என்று கூறியிருக்கிறார்கள். அதை மனதிலே வைத்து இங்கேயிருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், கட்சியின் அமைப்புக்களும் கேரள அரசை வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்களும் வற்புறுத்துகிறோம். ஆனால், கேரள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே கசப்புணர்வு ஏற்படாமல் நடுநிலையாக நின்று கேரள அரசு நியாயத்தை வழங்க வேண்டும், அப்படி வழங்கத் தவறினால் நியாயத்தை வழங்குவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். நாம் சட்டப்படிதான் இந்தப் பிரச்சினையை அணுகவிருக்கிறோம் என்பதையும் நான் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்தை 12–2–2001 அன்று திறந்துவைத்து முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**

• • •

இன்றைய தினம் இங்கே நடைபெறுகின்ற இந்த இனிய நிகழ்ச்சி – எளிய நிகழ்ச்சிதான் என்றாலும், எழுச்சிமிக்க ஒரு நிகழ்ச்சியாகும். கடந்த சில நாட்களுக்கு முன்பு மதுரை மாநகரத்திலே மகளிர் குழுக்களின் சங்கமத்தைக் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றேன். அதை வியந்து வியந்து பலரிடம் பாராட்டினேன். சென்னைக்கு சென்ற பிறகும்கூட சந்தித்தவர்களிடம் மதுரையில் மகளிர் குழுமினார்கள், பெருவெள்ளமென திரண்டிருந்தார்கள், கடலென பொங்கியெழுந்தார்கள், பேசியவர்கள் எல்லாம் உணர்ச்சிகளைக் கொட்டி முழங்கினார்கள் என்று மதுரையில் நடைபெற்ற மகளிர் பெருங்கூட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னேன்.

இன்றைக்கு கோவையில் உங்களையெல்லாம் பார்த்த பிறகு, மதுரையை நீங்கள் வென்று விட்டீர்கள் என்பதை என்னால் காண முடிகிறது. அந்த அளவிற்கு எழுச்சியும், ஏற்றமும் பெற்று, பெரும் விழாவாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தை இங்கே திருமதி சற்குணபாண்டியன் எடுத்துக் கூறியதைப்போல 1989ஆம் ஆண்டு – அப்போதும் நான் முதலமைச்சராக இருந்த போது தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டம் இந்த அளவிற்கு வளர்ச்சியடையுமா என்பது ஐயப்பாட்டிற்குரிய ஒன்றாக இருந்தது. ஆனால், அதற்குப் பிறகு இது கடந்த ஐந்தாண்டு கால அந்த ஆட்சியில் வளர வேண்டிய அளவிற்கு வளரவில்லை யென்றாலும்கூட, 1996ஆம் ஆண்டு நான் நான்காவது முறையாக முதல்வராக வந்த பிறகு – இந்தத் திட்டம் என்னவாயிற்று என்பதைக் கண்டறிந்து – விசாரித்து, இந்தத் திட்டத்தின் கதி என்ன என்பதைப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் பல இடங்களுக்கு நேரடியாகச் சென்று, மேலும்மேலும் ஊக்கப்படுத்தி, உற்சாகப் படுத்தி இன்றைக்கு பெரும் வளர்ச்சியை இந்தத் திட்டம் பெற்றிருக்கிறது.

கடந்த ஆண்டு தேனி மாவட்டத்திற்கு வேறு பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து, மகளிர் குழுக்கள் இங்கே எந்தப் பகுதியில் நடைபெறுகிறது; நான் நேரில் திடீரென்று சென்று பார்க்க வேண்டுமென்று சொல்லி – அவரும் சில இடங்களைக் குறிப்பிட்டு, நானும் என்னுடன் வந்த அமைச்சர்களும் நேரடியாகச் சென்று அந்தக் குழுக்களைப் பார்த்தோம். ஐம்பது பேர்களைக் கொண்ட இரண்டு குழுக்களைக் கண்டோம். அங்கேயிருந்த மகளிரிடம் நீங்கள் எப்படி இந்தக் குழுக்களை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை யெல்லாம் கேட்டறிந்தேன்.

**பெண்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறோம்**

அவர்கள் சொன்னார்கள் – எப்படியெப்படி நிதி திரட்டுகிறோம்; எப்படி கடன் பெறுகிறோம்; எப்படி கடன்களை அடைக்கிறோம், இந்தக் காரணத்தால் கந்து வட்டி என்ற கொடுமையிலிருந்து நாங்கள் விடுபட்டிருக்கிறோம். இந்தப் பகுதியில் கள்ளச் சாராயம் காய்ச்சப்படாமல் பார்த்துக் கொள்கிறோம்; பெண் குழந்தைகளை கொல்லாமல் நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்; அதற்காக வருத்தப்படுகின்ற தாய்மார்களைப் பார்த்து, நீயும் பெண் தானே, நீயே ஒரு பெண் குழந்தை பெற்றதற்காக வருத்தப்படலாமா என்று கேட்டு, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்களுடைய அச்சத்தைப் போக்கி வாழ்க்கையில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறோம் என்றெல்லாம் சொன்னார்கள்.

# மகளிர் சுயஉதவிக்குழுக்கள் கிராமப்புற பெண்களை முன்னேற்றும் புரட்சிகரமான திட்டம்

□ முதலமைச்சர் கலைஞர்



**எல்லோரும் மனிதர்கள்தான் என்ற உணர்வோடு பாடுபடுகிறோம்**

எனக்கு அப்போது அவர்களையெல்லாம் பார்த்தபோது, அசட்டுத்தனமான ஒரு கேள்வி கேட்கும் எண்ணம் தோன்றி, ஒரு பெண்மணியைப் பார்த்து, "ஏனம்மா, இப்படியெல்லாம் செய்கிறீர்களே, நீங்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்கள் ?" என்று கேட்டு விட்டேன். அவ்வளவுதான். உடனடியாக அந்தப் பெண்மணி சீறி எழுந்துவிட்டார். "இப்படி சாதியைக் கேட்கலாமா ?" என்று அவர் கூறியதும், எனக்கு முகத்தில் அறைந்ததைப் போல் இருந்தது. அந்தப் பதில்தான் தமிழ் நாட்டில் எங்கெங்கும் வர வேண்டும். உன்னுடைய சாதி என்ன என்று கேட்டால், ஒவ்வொருவரும் முகத்தில் அறைவதைப் போல் இந்தப் பதிலைக் கூற வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. அந்த அளவிற்கு அன்றைய தினம் அந்தக் குழுவிலேயிருந்த பெண்மணியிடமிருந்து வந்தது, நாங்கள் சாதிகளையெல்லாம் பார்ப்பதில்லை. எல்லோரும் ஒரே சாதிதான், எல்லோரும் மனிதர்கள்தான் என்ற உணர்வோடுதான் பாடு படுகிறோம் என்றார்கள்.

எவ்வளவு நாணயமாக அந்தக் குழு செயல்படுகிறது என்பதற்கு – வரவு எவ்வளவு ? – திருப்பிச் செலுத்தப் பட்ட கடன் தொகை எவ்வளவு, மீதம் எவ்வளவு என்ற விவரங்களையெல்லாம் மிக ஒழுங்காக, நேர்மையாக வைத்திருந்த காட்சியைப் பார்த்தேன். அதைப் பார்த்த பிறகு மேலும் ஊக்கம் பிறந்தது.

ஐம்பது பேர் கொண்ட குழுக்கள் ஒரு கிராமத்தில் மாத்திரம் இருந்தால் போதாது; பத்து, பதினைந்து கிராமங்களில் மாத்திரம் இருந்தால் போதாது; தமிழ்நாடு முழுவதிலும் இந்தக் குழுக்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று திட்டம் தீட்டி, முதற்கட்டமாக 14 மாவட்டங்களிலும், அதைத் தொடர்ந்து 7 மாவட்டங்களிலும், அதைத் தொடர்ந்து மேலும் 7 மாவட்டங்களிலும் என, சென்னை நீங்கலாக, மற்ற எல்லா மாவட்டங்களிலும் இந்தக் குழுக்கள் இப்போது தொடங்கப்பட்டிருக்கின்றன.

இங்கே திருமதி சற்குணபாண்டியன் குறிப்பிட்டதைப் போல இத்திட்டத்தின் மூலம் 11 இலட்சத்து 5 ஆயிரத்து 577 மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். நானே மிகுந்த மகிழ்ச்சி அடைகிற அளவிற்கு, எத்தனை குழுக்கள் தெரியுமா ? 63,598 சுய உதவிக் குழுக்களில் இவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் பல்வேறு தொழில்களைத் தொடங்கிட 1,71,846 மகளிருக்கு 93 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுடைய சேமிப்புத் தொகை மாத்திரம் 69 கோடி ரூபாய்.

**கிராமப்புற பெண்களை முன்னேற்றும் புரட்சிகரமான திட்டம்**

இத்திட்டம் கிராமப்புற பெண்களை சமூக, பொருளாதார, முன்னேற்றத்தை நோக்கி வழி நடத்திடும் ஒரு புரட்சிகரமான திட்டமாகும்.



சமுதாயத்திலே மூடநம்பிக்கையை ஒழித்து, சமுதாயத்திலே சாதி வேற்றுமையை களைந்து, சமுதாயத்திலே மத வேறுபாடுகளையெல்லாம் அகற்றி வாழ்கிற மக்கள் இந்தப் பொருளாதாரத் துறையிலும் முன்னேறியாக வேண்டும். பொருளாதாரத்தில் முன்னேறினால் சாதிகூட தென்படாது. ஒரு ஊரில் ஒரு பெரிய பணக்காரன், அதிக சொத்துக்களை வைத்திருக்கின்ற காரணத்தினாலேயே, உயர்ந்த சாதிக்காரர்கள் எல்லாம் கூட அவனிடத்தில் மரியாதை காட்டுவார்கள். சாதியைப் பற்றி கவலைப்பட மாட்டார்கள்.

காரணம், பொருளாதாரத்தில் ஏற்பட்ட அந்த மாற்றம். அதைப்போல ஏழை – எளிய மக்கள் பொருளாதாரத்தில் ஓரளவாவது சமச்சீர் அடைந்தாக வேண்டும் என்ற அந்தக் குறிக்கோளோடுதான் இந்த ஆட்சி அவர்களுக்கு இது போன்ற திட்டங்களை வங்கிகள் மூலமாக உதவி பெறுகிற திட்டங்களை – வங்கிகளில் பணம் பெற்று தொழில் நடத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்தி அதிலே அவர்களை ஈடுபடுத்தி யிருக்கிறது.

**பாதாளத்தில் இருந்தவர்**
**மலை உச்சிக்குப் போய்விட்டார்**

இங்கே இரண்டு பெண்கள் பேசினார்கள் – ஒருவர் திருமதி அமினா பாஸ்மின்பீவி, ஈரோட்டைச் சேர்ந்தவர். இன்னொருவர் கோவை மாவட்டம். கோபனாரியைச் சேர்ந்த திருமதி நாகம்மாள். இருவரின் பேச்சுக்களையும் இங்கே நீங்கள் கேட்டீர்கள். இதில் நாகம்மாள் மலைவாழ் இன மக்கள் பிரிவைச் சேர்ந்தவர். அவருடைய பேச்சை கேட்ட பிறகு, பாதாளத்தில் இருந்தவர் மலையுச்சிக்குப் போய் விட்டதாக என்னால் கருத முடிந்தது. இந்தப் பெண்கள் சமுதாயத்தை கிடுகிடு பாதாளத்தில் தள்ளி ஆதிக்கம் செலுத்திய காலம் முடிந்து போய் அவர்களும் மலை உச்சிக்கு வர முடியும் என்பதைக் காட்டுகின்ற வகையில் நாகம்மாளின் பேச்சு இருந்தது.

அவருடைய பெயரே நாகம்மாள். தந்தை பெரியாரின் துணைவியார் – பெரியாருக்குத் துணையாக இருந்து – அவருடைய வாழ்க்கைக்குத் துணையாக இருந்து, அவருடைய வெற்றிகளுக் கெல்லாம் துணையாக இருந்தவர் தான் நாகம்மையார். பெரியார் நடத்திய போராட்டங்களில் எல்லாம் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு பெரியாரோடு பெரியாராக அன்றைக்கு இருந்தவர் நாகம்மையார். அந்த நாகம்மையாருடைய எழுச்சியை, அவருடைய புரட்சிக் குரலை இங்கே நான் இந்த நாகம்மாளிடத்தில் காண முடிந்தது. நேரம் இல்லை. இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் பேசுங்கள் என்று நான் சொல்லியிருப்பேன்.

அந்த அளவிற்கு இங்கே அவர் பேசியதைக் கண்டேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், பெண்கள் என்றாலே அவர்கள் ஆதிக்கச் சக்திகளுக்கு உட்படுத்தப்பட்டவர்கள், ஆட்படுத்தப்பட்டவர்கள், அவர்கள் தலை எடுப்பதோ, நிமிர்ந்து பேசுவதோ கூடாது; பெண் என்றால் கட்டை விரலைப் பார்த்துதான் நடக்க வேண்டும். இதுதான் கற்பு என்றெல்லாம் சொல்லப்பட்ட காலம் ஒன்று இருந்தது. ஆனால், இன்றைக்கு அந்தக் காலம் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. அப்படி மாறிவிட்ட காரணத்தால் பெண்கள் கற்போடு இருக்கக்கூடாது என்று சொல்கிற அளவிற்கு முட்டாள் அல்ல நான், பெண்களுக்கு கற்பும் அணிகலன். நான் அதை மறுக்கவில்லை. ஆனால், அதே நேரத்தில் அந்த அணிகலனைக் காத்து அவர்களை அடிமைகளாக ஆக்கி வைக்கக் கூடாது என்பதுதான் நம்முடைய கருத்து. இந்த இயக்கத்தினுடைய கருத்து.

"பெண் அடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீருவது முயற்கொம்பே" என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். எனவே, அந்தப் பெண்ணடிமை தீருவதற்காகத்தான் நாம் இயக்கமே அன்றைக்குத் தொடங்கினோம். அந்தத் தொடக்கத் திலேதான் **1929** ஆம் ஆண்டு செங்கற்பட்டில் சுய மரியாதை மாநாடு

நடைபெற்று தந்தை பெரியாரும், டபிள்யு.பி.ஏ.சவுந்தர பாண்டியனாரும், பி.டி.ராஜனும் மற்றும் பல சமுதாயச் சீர்திருத்தவாதிகளும் கலந்து கொண்ட அந்த மாநாட்டிலே போடப்பட்ட தீர்மானம் தான் பெண்களுக்கும் சொத்திலே சமபங்கு கொடுக்க வேண்டும் என்பதாகும். அதற்கு சட்டம் வரவேண்டுமென்று, அந்த மாநாட்டில் பெரிய – மூன்றாவது முறையாக முதலமைச்சராக வந்தபோதுதான் அந்தத் தீர்மானத்தை சட்டமாக ஆக்கவேண்டுமென்று முடிவெடுத்து சட்டசபையில் அறிவித்தேன்.

**பெண்களுக்கு சம உரிமை தருவதே எங்கள் ஆட்சியின் நோக்கம்**

இது அறுபதாண்டு காலத்திற்கு முன்பு பெரியாரால் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் கொண்டு வரப்பட்ட தீர்மானம். பெண்களுக்கு சொத்தில் சமபங்கு வேண்டும் என்ற தீர்மானம். 60 ஆண்டுகளுக்குப் பிறகு அதை இங்கே நாம் நிறைவேற்றுகிறோம் என்று சொல்லி, சட்டமாக அதை ஆக்கிய அந்த மகிழ்ச்சிகரமான நாளை எண்ணிப் பார்க்கிறேன். எனவே பெண்களுக்கு சம அந்தஸ்து, சமஉரிமை தரவேண்டும் என்பது இன்றைக்கு ஆட்சியில் இருக்கிற எங்களுடைய நோக்கம்.

நான் ஏதோ கட்சிப் பிரச்சாரம் செய்வதாக எண்ணிக் கொள்ளக்கூடாது. இது எல்லா கட்சிகளுக்கும் பொதுவானது. பெண்களைக் கொடுமைப்படுத்தக் கூடாது.

எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் சொல்வது மாத்திரமல்ல; அதைச் செய்தும் காட்டக்கூடியவர்கள். அதனால்தான் சமஉரிமை என்று வெறும் சொல் அளவில் இல்லாமல், பகிர்ந்து கொடுக்கிற சட்டத்தையும் நிறைவேற்றினோம்.

இன்றைக்கு இந்தியாவில் பேசப்படுகின்ற பெண்களுக்கு சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் 33 விழுக்காடு இடம் தர வேண்டும் என்பதற்கு சட்டம் கொண்டு வரப்பட வேண்டுமென்று பேசப் படுகிறது. ஆனால் அதை வாஜ்பாய் அவர்கள் கொண்டு வருவதற்கு முன்வந்தும் கூட சட்டமாக அதனை ஆக்க முடியாத அளவிற்கு பாராளுமன்றத்திலே ரகளை நடக்கிறது. அமளி நடைபெறுகிறது. ஆனால் இன்னின்ன திருத்தம் வேண்டுமென்று சொல்லப்பட்டு, ஏதோ காரணங்கள் கூறப்பட்டு அந்தச் சட்டத்தின் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இன்றைக்கு பாராளுமன்றத்திலே இருக்கின்றது. விரைவில் அந்த சட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது நம்முடைய எண்ணம்.

ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். பாராளுமன்றத்திலும், – 'அது மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும், ஒன்றியமாக இருந்தாலும், ஊராட்சியாக இருந்தாலும், அங்கெல்லாம் பெண்களுக்கு 33 விழுக்காடு இடம் தர வேண்டு மென்று சட்டமே கொண்டு வந்து அப்படி இன்றைக்கு பல்லாயிரக்கணக்கான பெண்கள் அந்த உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்றிருக்கின்ற காட்சியை நீங்கள் பார்க்கிறீர்கள்.

அதைப் போலவே ஆசிரியர்களாக வேலை பார்ப்பவர்கள் ஆரம்பப் பள்ளிகளில் பெண்களாக இருக்க வேண்டும், சிறு குழந்தைகளுக்கு கல்வி போதிக்க பெண்களால் தான் சுலபமாக இயலும், ஆண்கள் என்றால் குழந்தைகளிடம் அன்பாக பழக வாய்ப்பில்லாமல் போய்விடும், எனவே ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியர்கள் எல்லாம் பெண்களாகவே இருக்க வேண்டுமென்று விதி செய்தோம். அதை சிலர் நீதிமன்றத்திற்குச் சென்று நிறைவேற்ற முடியாமல் செய்து விட்டார்கள். இருந்தாலும் இன்றைக்கு தமிழ்நாட்டில் அரசாங்கப் பணிகளிலே 30 விழுக்காடு பெண்களுக்காக தரப்படுகின்ற ஒரே மாநிலமாக இன்றைக்கு தமிழ்நாடு தான் இருக்கின்றது.

இப்படி பல வகைகளிலும் பெண்களின் முன்னேற்றத் திற்காகப் பாடுபடுகின்ற இந்த அரசு மேலும் பல பணிகளை பெண்களின் முன்னேற்றத்திற்காக செய்ய வேண்டுமென்று கருதிக் கொண்டிருப்பவர்கள் நாம்.

இங்கே என்னைப் பாராட்டினார்கள், சிறப்பித்தார்கள், பெண்களின் எழுச்சிக்கு காரணம் நான்தான் என்று சொன்னார்கள். இன்னும் பல காரியங்கள் செய்யப்பட வேண்டியிருக்கின்றது. பெண்களின் முன்னேற்றத்திற் காக, பெண்களின் எழுச்சிக்காக அவைகளையெல்லாம் செய்கின்ற காலம் இன்னும் இருக்கின்றது. அந்தக் காலத்தில் அவைகளையெல்லாம் நிச்சயமாக நான் செய்வேன் என்ற உறுதியை உங்களுக்கெல்லாம் தந்து உங்களுடைய உற்சாகத்தைக் கண்டு உவகை கொண்டு உங்களோடு இந்த மாலை நேரத்தில் இவ்வளவு நேரம் கழிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தமைக்காக மனம் மகிழ்ந்து விடை பெற்றுக் கொள்கிறேன்.

**கோவையில் 23-2-2001 அன்று நடைபெற்ற மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

# கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்திற்கு சென்னையில் மணிமண்டபம்

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுடைய மணி மண்டபக் கட்டுமானப் பணியினுடைய தொடக்க விழா சீரோடும் சிறப்போடும் நடைபெறுகின்ற இந்த நேரத்தில் அதிலே கலந்து கொள்கிற அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய நண்பர் இசைமுரசு நாகூர் அனீபா அவர்கள் சொன்னதைப் போலவும், பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப் போலவும் எதற்காகவோ, என்றைக்கோ, எப்போதோ ஒரு நாள் காயிதே மில்லத் அவர்களை நினைப்பவன் அல்ல நான்.

இங்கே அனீபா பாடினாரே, காயிதேமில்லத் அவர்களையும், அண்ணாவையும் இணைத்து ஒரு பாடல், அதைப் போல என் இதயத்திலே இணைந்திருக்கின்ற இரண்டு பெரும் தலைவர்கள் அறிஞர் அண்ணா அவர்களும் காயிதே மில்லத் அவர்களும் என்று சொன்னால் அதை யாரும் மறுக்க இயலாது என்கிற அளவிற்கு காயிதேமில்லத் அவர்களுடைய வாழ்க்கையிலே பெரும் பகுதியை உணர்ந்தவன் நான். அவரோடு அரசியல் செய்தவன் நான். அவரோடு சமுதாயத் தொண்டாற்றியவன் நான். அவர்கள் இன்றில்லை. ஆனால் நம்முடைய நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறார்.

சிலபேர் இதை ஆதாயத்திற்காகச் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டதாக தம்பி திருப்பூர் அல்தாப் இங்கே சொன்னார். ஆதாயத்திற்காக செய்பவர்களாக இருந்தால் தேர்தல் வருகிற நேரத்தில் மலர் மாலையையோ மலர் ஆடையையோ எடுத்துக் கொண்டு காயிதேமில்லத் அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு திடீரென்று போய்க் கொண்டிருப்பார்கள். என்றைக்கு காயிதேமில்லத் அவர்கள் மறைந்தார்களோ, அன்று தொட்டு ஒவ்வொரு



ஆண்டும் அவருடைய நினைவிடத்திற்குச் சென்று அங்கே மலர்ப் போர்வை அணிவிப்பவன் இந்தக் கருணாநிதி என்பதை முஸ்லீம் சமுதாயத்துப் பெருமக்கள் அனைவரும் மிக நன்றாக உணர்ந்திருப்பார்கள்.

### இஸ்லாமிய மக்களோடு நீங்காத தொடர்பு

நாங்கள் ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, இப்படி ஒரு நிலைமை எங்களுக்கு வரும் என்று நினைக்காத அந்தக் காலத்திலும் சரி, இஸ்லாமிய பெருமக்களோடு நீங்கா தொடர்பு கொண்ட ஆட்சி தான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இங்கே இந்த மணி மண்டபம் அமைகின்ற இந்த இடத்தில் பணி ஏறத்தாழ ஆரம்பமாகி விட்டது. இதற்கான தூண்கள் எல்லாம் நடப்பட்டு வெகுவிரைவில் மாதக்கணக்கில் இந்த மணி மண்டபம் முற்றுப்பெற இருக்கின்றது. இந்த மணி மண்டபத்தினை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே என்னுடைய அருமை நண்பர் அப்துல் சமத் அவர்கள் உயிரோடு இருந்த அந்தக் காலக்கட்டத்திலேயே நிறைவேற்ற வேண்டுமென்று முடிவெடுத்து அதற்கான முயற்சியிலே ஈடுபட்ட போது சிலர் இடையூறு விளைவித்தார்கள்.

அவர்களுடைய பெயர்களை எல்லாம் இந்த நல்ல நேரத்தில் நான் சொல்ல வரும்பவில்லை. ஏனென்றால் காயிதேமில்லத் அவர்கள் எங்களைப் போன்ற ஏழைகளுக்காகப் பாடுபட்டவர். ஏழை இஸ்லாமியர் களுடைய இதயங்களிலே இடம் பெற்றவர். ஆதலால் இஸ்லாமியர்களிலேயே சில பணக்காரர்கள், இஸ்லாமியர் களிலேயே சில செல்வந்தர்கள், காயிதேமில்லத் அவர்களுக்காக ஒரு நினைவாலயம் அல்லது ஒரு மணிமண்டபம் அமைவதை அவர்கள் விரும்பவில்லை. அதனால் இடையூறு ஏற்பட்டது. அந்தக் காரணத்தினால் தற்காலிகமாக அது நிறுத்தப்பட்டது,.

அதன் பிறகு நம்முடைய பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களும் அவருடைய நண்பர்களும் என்னைச் சந்தித்து அவர்களே குறிப்பிட்டார்களே – யார் முதலமைச்சராக வரக் கூடாது என்று ஓட்டு போட்டோமோ, அவரைச் சந்தித்து காயிதேமில்லத் மணி மண்டபத்தை எழுப்பித் தாருங்கள் என்று கேட்டோம் என்று. என்னுடைய சுபாவமே அது தான், ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். யார் எனக்கு ஓட்டுப் போடவில்லையோ அவர்களுக்குத்தான் நான் முதலிலே உதவி செய்வது. அதற்காக இப்போதும் அதையே கடைப்பிடித்து விடாதீர்கள் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

அவர் சொன்னவுடன் நான் இடையிலே ஏற்பட்ட சங்கடங்களை அவரிடம் எடுத்து உரைத்து விரைவிலே இந்த மண்டபத்தை எழுப்புகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடும் என்று குறிப்பிட்டேன். இப்படி பல மணி மண்டபங்கள் தமிழகத்திலே தியாகிகளின் பெயரால், பெருந்தலைவர்களின் பெயரால், பேரறிஞர்களின் பெயரால், ஆன்றோர், சான்றோர்பெயரால் எழுப்பப்பட்டு இந்த மணிமண்டபமும் இப்போது எழுப்பப்படுகிற தென்றால் இது, சாதாரணமானதல்ல.

இந்த இடம் பிரச்சினைக்குரிய இடம் என்று கூறப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்ல விரும்பு கிறேன். ஆங்கிலேயரால் தொடங்கப்பட்ட ''சர்க்கார் முகமடன் காலேஜ்'' 1950–இல் "அரசு கலைக்கல்லூரி" எனப் பெயர் மாற்றப்பட்டது. பின்னர் பெண்கள் கல்லூரியாக மாறி இயங்கி வந்த அக்கல்லூரிக்கு 74–ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்தபோது "காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி'' என்று பெயர் சூட்டினேன்.

### கல்லூரிக்கு காயிதேமில்லத் பெயர்


ஏன் அந்தப் பெயரைச் சூட்டினேன் என்றால் கடற்கரையோரத்தில் பல பெரியவர்களுக்குச் சிலை வைக்கப்பட்டது. பல தமிழ் அறிஞர்களுக்கு சிலை எழுப்பப்பட்டது. காயிதே மில்லத் அவர்களுக்கும் ஒரு சிலை வைக்கலாமா என்ற சில கேள்விகள் எழுந்த போது, பேராசிரியர் காதர் மொய்தீனைப் போன்றவர்கள், இஸ்லாமியச் சமுதாயத்தினுடைய பெரும் பிரமுகர்கள் இஸ்லாமிய சமுதாயத்திலே சிலை வைப்பதை யாரும் ஏற்றுக் கொள்வதில்லை என்று என்னிடம் சொன்னார்கள். அப்படியானால் எப்படியாவது ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவ வேண்டுமென்று எண்ணி இந்தக் கல்லூரிக்கு காயிதேமில்லத் அரசினர் மகளிர் கல்லூரி என்று 5.6.74 அன்று பெயரைச் சூட்டினேன். இங்கே தான் இப்போது மணி மண்டபம் உருவாகிக் கொண்டிருக்கின்றது.

அதுமாத்திரமல்ல, சென்னையிலே உள்ள முஸ்லீம் கல்வி கலாச்சார டிரஸ்ட், சென்னை மேடவாக்கத்தில் காயிதே மில்லத் பெயரில் ஆண்கள் கல்லூரி ஒன்றினை 1975–ஆம் ஆண்டு முதல் நடத்தி வருகிறது. இக்கல்லூரி தொடங்கப்படுவதற்கு 40 ஏக்கர் நிலம் அன்றைக்கு அரசின் சார்பிலே நான் வழங்கினேன் என்பதையும் இங்கே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வாலாஜா சாலையிலிருந்து டாக்டர் பெசன்ட் ரோடு வரையிலான நெடுஞ்சாலை "திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை'' என அழைக்கப்பட்டு வந்தது. 1976 ஜனவரித் திங்கள் 29–ஆம் நாள் அந்த திருவல்லிக்கேணி நெடுஞ்சாலைக்கு "காயிதேமில்லத் நெடுஞ்சாலை'' எனப் பெயரிட்டதும் நான் தான். அப்படி பெயர் வைத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் அப்போதிருந்த ஆட்சி கலைக்கப்பட்டது என்பதையும் உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

காயிதே மில்லத் அவர்களின் பெயரில் ஒரு பாலத்திற்கும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அவர்களுடைய பெயரால் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் 25 இலட்சம் ரூபாய் மூலதனத்துடன் அறக்கட்டளை ஒன்றை 1997 ஜூன் திங்களில் அமைத்து, காயிதே மில்லத் அவர்களின் பெயரால் ஏழை மாணவ மாணவியருக்கு உதவிகள் நல்கி வருகிறது இந்த அரசு.

எனவே இப்போது சென்னை அண்ணா சாலையில் இந்தக் கல்லூரி வளாகத்திலே கட்டப்படுகின்ற இந்த மணி மண்டபம் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படுகிறது என்பதை பெரு மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.



**நபிகள் நாயகம் பிறந்த நாளுக்கு அரசு விடுமுறை**

இந்த சமுதாயத்திற்கு இந்த அரசு எந்த வகையில் எல்லாம் உதவிகளைச் செய்திருக்கிறது, அவர்களுடைய உரிமைகளைப் போற்றிக் காப்பாற்றி யிருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டை ஞாபகப் படுத்துகிறேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் 1970–ஆம் ஆண்டு முதல் இந்தியா விலேயே முதன் முதலாக விடுமுறை நாளாக அறிவித்து சிறப்பித்தது எனது அரசு என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேன். இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளுக்காக விடுமுறை அறிவித்தது இல்லை. சம்பளத்தோடு கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்று நான் எடுத்துச் சொல்லி 70–ஆம் ஆண்டு முதல் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்துக் கொண்டாடி வருகிறது.

முஸ்லீம் உலமாக்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகை 400 ரூபாய் என்பதனை, 1996–ஆம் ஆண்டு நான் நான்காவது முறையாக ஆட்சிக்கு வந்தது முதல் 500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. 19.7.2000 முதல் தர்க்காக்களில் பணிபுரியும் முஜாவர்களுக்கும் உலமா ஓய்வூதியம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறும் உலமாக்களின் எண்ணிக்கை 2,000 என்பதை 2,200ஆக 1998–இல் உயர்த்தியதும் இந்த அரசு தான்.

**சிறுபான்மையினர் நலன் காக்க நலவாரியம்**

சிறுபான்மை சமுதாயத்தின் நலன்களைப் பாதுகாத்திட சிறுபான்மையினர் நல ஆணையத்தை 1989–ஆம் ஆண்டில் முதன் முதல் அமைத்ததும் கழக அரசுதான் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

1996–இல் சிறுபான்மையினர் நல ஆணையத்தைப் புதுப்பித்து பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களை அதன் தலைவராகவும், சேலம் அமானுல்லாகான் அவர்களைத் துணைத் தலைவராகவும் நியமித்ததும் இந்த அரசு தான். புதிய விதிமுறைகளின் அடிப்படையில் வக்பு வாரியத்தை 10.6.97 அன்று திருத்தி அமைத்ததும் இந்த அரசு தான். பழுதடைந்துள்ள மசூதிகளைப் புதுப்பித்திடவும், புனரமைத்திடவும் ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்பட்ட மானியத்தினை 1998–99–இல் 7 இலட்சமாக உயர்த்தியதும் இந்த அரசு தான்.

ஆக்கிரமிப்புகளில் 'இருந்து இறுதி அடக்க ஸ்தலங்களைப் பாதுகாத்திட சுற்றுச் சுவர் – கம்பி வேலி

அமைப்பதற்கு ஆண்டுக்கு 5 இலட்ச ரூபாய் விதம் மானியம் வழங்குவதும் இந்த அரசு தான்.

உருது பேசும் இஸ்லாமியர்களையும் பிற்பட்ட சமுதாயமாக அறிவித்து, அவர்களுக்கான சலுகைகள் அனைத்தையும் வழங்கிட வழிவகுத்ததும் கழக அரசுதான்.

இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மைச் சமுதாயத்தினர் மிகுதியாய் பயனெய்திடும் வண்ணம், பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தை இரண்டாகப் பிரித்து, 1.7.99 அன்று சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தை தனியே உருவாக்கியதும் இந்த அரசு தான். இஸ்லாமிய சமுதாயத்தினரின் நீண்ட நாள் கோரிக்கையை எற்று 21.7.2000 அன்று ''உருது அகாடமி'' தொடங்கப்பட்டு, அதற்காக 15 இலட்ச ரூபாய் தொடக்க முதலீடாக வழங்கியதும் இந்த அரசு தான்.

வக்பு வாரிய நிர்வாகச் செலவிற்கு வழங்கப்பட்ட மானியம் ரூ.30 இலட்சம் என்பதை ரூ.45 இலட்சமாக 2000–2001–இல் உயர்த்தி வழங்கியதும் இந்த அரசு தான்.

இவைகளுக்கெல்லாம் மேலாக இந்தச் சமுதாயத்தினுடைய தனிப் பெரும் சிறப்பியாகத் திகழ்ந்து, இங்கே நம்முடைய நண்பர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னதைப் போல, "கருணாநிதி அவர்களே, இந்தச் சமுதாயத்திற்கு நீங்கள் செய்த உதவிகளை நாங்கள் என்றைக்கும் மறக்க மாட்டோம், நன்றி'' என்று கூறினார்களே, அந்தப் பெரு மதிப்பிற்குரிய பெருமகன் காயிதேமில்லத் அவர்கள் எந்த அளவிற்கு நாட்டுப் பற்றும், தமிழ்ப் பற்றும் கொண்டிருந்தார் என்பதை இந்த மணி மண்டபத்தின் கட்டுமானப் பணி தொடங்கப்படுகிற நேரத்தில் எடுத்துச் சொல்வது மிக மிகப் பொருத்தம் என்று நான் கருதுகிறேன்.

1962–இல் சீனஆக்கிரமிப்பு நடைபெற்ற போது, பல அவசர காலச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டன. அப்போது நாடாளுமன்ற விவாதத்தில் காயிதேமில்லத் கலந்து கொண்டு பேசினார். என்ன் பேசின்ார் தெரியுமா ?

"நமது நாட்டின் மீது ஆக்கிரமிப்பு செய்த சீனாவிற்குப் பாரதப்பிரதமர் கொடுத்த சவாலை நான் வரவேற்கிறேன். யாதொரு நிபந்தனையுமின்றி அதை நான் ஆதரிக்கிறேன்'' என்று காயிதேமில்லத் அவர்கள் ஆங்கிலத்தில் மிக வேகமாகப் பேசினார். அப்பொழுது ஒரு உறுப்பினர் எழுந்து குறுக்கிட்டு உருதுவில் பேசுங்கள் என்றார். அதற்கு உடனடியாக காயிதேமில்லத் என்ன மறுமொழி கூறினார் தெரியுமா ?

''ஆங்கிலத்தில் பேசுபவர்களுக்கு எல்லாம் இந்தியிலும் பேசத்தெரியும் என்று நண்பர் நினைத்துக் கொள்கிறார். எனக்கு இந்தியும் அன்னிய மொழி, உருதுவும் அன்னிய மொழி. தமிழ் தான் என் தாய்மொழி'' என்றவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள்.

1947 முதல் 1950–ஆம் ஆண்டு முடிய சுதந்திர இந்தியாவிற்கான அரசியலமைப்பு தயாராகிக் கொண்டிருந்தது. அரசியல் நிர்ணயசபை அடிக்கடி கூடி சட்டங்களையும், விதிகளையும் உருவாக்கிக் கொண்டிருந்தது. இந்தியாவின் தேசிய மொழியாக எது இருக்க வேண்டும் என்ற பிரச்சினை எழுந்த போது, இந்தி பேசுவோர் பெரும்பான்மை என்பதால் அவர்கள் தேசிய மொழியாக இந்தியைத்தான் வைக்க வேண்டும் என்றனர். ஆங்கிலமே இணைமொழியாக இருக்கட்டும் என்றனர் வேறு சிலர். இந்தி பேசுவோர் இதனைக் கேட்டு ஆத்திரம் அடைந்தனர். "ஆங்கிலேய ஆட்சியை விரட்டியாயிற்று, அவர்களது மொழியை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் ? இந்தி பிடிக்காவிட்டால் இந்தியாவில் உள்ள ஏதாவது ஒரு மொழி தேசிய மொழியாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆங்கிலத்தை மட்டும் தேசிய மொழியாக ஏற்க மாட்டோம்'' என்று அனைவருமே பேசினர்.

அப்பொழுது காயிதே மில்லத் விரைந்தெழுந்தார். அப்படியானால் "அவைத் தலைவர் அவர்களே", என்ற கணீரென்ற குரலில் காயிதேமில்லத் பேசத் தொடங்கி, "ஆங்கில மொழி அந்நிய மொழி. அது இந்நாட்டின் தேசிய மொழியாகக் கூடாது. வேறு எந்த இந்திய மொழியானாலும் பரவாயில்லை, அதை தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் எனப் பலர் பேசினர். இந்நாட்டில் உள்ள மொழிகளில் எல்லாம் தொன்மை வாய்ந்தது, இன்றளவும் பேச்சுவழக்கில் இருக்கக் கூடியது, இலக்கண இலக்கிய நயங்களில் உலகில் உள்ள எந்த மொழிக்கும் ஈடுகொடுக்கும் சிறப்புடையது, எனது தாய்மொழி தமிழே ! அதுதான் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று திட்டவட்டமாக கூறிக் கொள்கிறேன்" என்று சொன்ன அந்த மாபெரும் தமிழனுக்குத் தான் இங்கே மணி மண்டபத்தை நாம் எழுப்பவிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, இங்கே அமர்ந்திருக்கிறாரே அவருடைய மகன் மியாக்கான் அன்றைக்கு வனப்பு மிகுந்த வாலிபனாக இருந்த காலக்கட்டத்தில் தனது மகனையே இந்த நாட்டுக்காக தானமாகத் தருகிறேன் என்று சொன்னவர் காயிதே மில்லத். டில்லியில் நடைபெற்ற "புத்ரதான் தினத்தில்" (புத்திரனை நாட்டிற்காக தானம் செய்கின்ற தினம்) காயிதே மில்லத் இவ்வாறு நடந்து கொண்டதாக 13.11.1962–ஆம் நாளிட்ட "The Mail" ஆங்கில இதழில் செய்தி வந்துள்ளது.

என்னுடைய மகனை இந்த நாட்டிற்காக தருகிறேன் என்று காயிதேமில்லத் அறிவித்தார். இந்தச் செய்தியை சென்னையிலே இருந்த மியாக்கான் அறிந்தார். அறிந்த மியாக்கான் அவர்கள், தந்தையின் விருப்பத்துக்குத் தாமும் மனப்பூர்வமாக இசைவதாக ஒரு மடலைக் காயிதேமில்லத்துக்கு எழுதினார்.

காயிதேமில்லத் அவர்கள் மகனது மடல் கண்டு மகிழ்ந்ததோடு அந்த மடலின் நகலைப் பாரதப் பிரதமர் நேருவுக்கு அனுப்பி வைத்தார். நாட்டு நலனுக்காக எந்தத் தியாகமும் செய்ய முன் வந்த காயிதே மில்லத்தையும், அவர் மகனையும் நெஞ்சாரப் பாராட்டி, 17.11.1962–இல் ஒரு பாராட்டு மடல் எழுதினார் நேரு.

> **தனது மகனையே இந்த நாட்டுக்காக தானமாகத் தருகிறேன் என்று சொன்னவர் காயிதே மில்லத்**

இவைகள் எல்லாம் எந்த மனிதனைப் பற்றி, எந்தத் தலைவரைப் பற்றி என்பதை எண்ணிப் பார்க்கும் போது, அந்த மனிதருக்காக, அந்தப் பெருமகனுக்காக, அந்தத் தலைவருக்காக, இங்கே நாம் மணி மண்டபம் எழுப்புகிறோம் என்றால் இதைவிட நமக்கு ஒரு அரும் பேறு கிடைக்க இயலாது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று பாகிஸ்தான் பிரிந்து விடுகிறது. பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் காயிதே மில்லத் அவர்களிடம் ''இந்தியாவில் வாழும் நாலரைக் கோடி இஸ்லாமியரின் நினைவைப் பாகிஸ்தான் என்றென்றும் மறவாது"என்று சொல்கிறார். அப்போது காயிதேமில்லத் சொல்கிறார்,

"ஐயா, முன்கதைகளையெல்லாம் மறந்து விடுங்கள். நாம் அந்நியராகி ஆறு மாதங்களாகிவிட்டன. எங்கள் சர்க்கார் எங்களை நியாயமாக நடத்தும் என்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. அவசியப்பட்டால் எங்கள் உரிமைகளைச் சத்தியப் பாதையில் போராடிப் பெற்றுக் கொள்ள எங்களுக்கு உறுதி உண்டு. எங்கள் நிலைக்காக நீங்கள் இரங்க வேண்டாம்" என்று தெரிவித்தார் என்பது வரலாறு.

**பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மை இந்துக்களின் நலனுக்கு ஆவன செய்வீர்**

தொடர்ந்து லியாகத் அலிகான், காயிதே மில்லத் அவர்களை வற்புறுத்தி, "உங்களுக்கு என்ன வேண்டும் சொல்லுங்கள், எது வேண்டுமானாலும் செய்கிறேன்" என்று கேட்ட போது, காயிதேமில்லத் கூறிய வார்த்தைகள் வரலாற்றில் இடம் பெறக் கூடிய வார்த்தைகள். அவை "எங்களுக்கு வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். ஒன்றை மட்டும் செய்யுங்கள். எங்கள் நாட்டில் எது நடந்தாலும் எங்களுக்காகக் கவலைப் படாமல் உங்கள் (பாகிஸ்தான்) நாட்டில் வாழும் சிறுபான்மை இந்து மக்களின் நலனுக்கு ஆவன செய்திட வேண்டும். எக்காரணம் கொண்டும் எத்தகைய இடையூறும் அவர்களுக்கு இழைக்கக் கூடாது. இது ஒன்றே நீங்கள் எங்களுக்காகச் செய்ய வேண்டிய உதவி'' என்று அன்றைக்கு காயிதே மில்லத் அவர்கள் சொன்னார்கள்.

காயிதே மில்லத் அவர்கள் அன்றைக்குச் சொன்ன அந்தக் காலக் கட்டத்தையும் எண்ணிப் பாருங்கள். காஷ்மீர் பிரச்சினையால் இன்றைக்கு கண்கலங்கி நிற்கின்ற நம்மையும் எண்ணிப் பாருங்கள். காஷ்மீரில் நடக்கின்ற சம்பவங்களையும் எண்ணிப் பாருங்கள். காயிதே மில்லத் போன்றவர்கள் இன்றிருந்தால் காஷ்மீர் பிரச்சினைகள் இந்த அளவிற்கு முற்றியிருக்காது. நாம் அந்தப் பேறு பெற்றவர்களாக இல்லை.

எனவே தான் காஷ்மீர் பிரச்சினை இந்த அளவிற்கு வளர்ந்திருக்கின்றது என்பதையும் சுட்டிக்காட்டி அதையெல்லாம் தடுத்து நிறுத்தக்கூடிய தக்கார் ஒருவர், தகுதி பெற்ற ஒருவர், தலைவர் பொறுப்புக்கு எல்லாவிதமான சிறப்புக்களையும் பெற்ற ஒருவர் கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றாலும் நம்முடைய இதயங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்கின்ற அந்த உணர்வோடு இந்த மணி மண்டபத்தினுடைய கட்டுமானப் பணித் தொடக்க விழாவை நடத்தி வைத்து உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன். வாழ்க கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் புகழ். வணக்கம்.

**- முதலமைச்சர் கலைஞர் அவர்கள்**
**25-2-2001 அன்று சென்னையில்**
**கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத்**
**மணிமண்டபம் கட்டுமானப் பணியினை**
**தொடக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து...**

# உடுமலை நாராயண கவிராயரின் மணிமண்டபம்

நாட்டில் எத்தனையோ கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். தோன்றிய கவிஞர்களெல்லாம் பெரும் புகழ் படைத்தவர்களாக தோன்றவில்லை. மக்களால் பாராட்டப்படவில்லை. மக்கள் கவிஞராக மக்களுக்காக கருத்துக்களைச் சொல்பவராக புதிய, புதிய சிந்தனைகளை தூண்டுபவராக, புரட்சியை எழுப்புபவராக வாழ்ந்து மறைந்தவர்தான் நம்முடைய உடுமலை நாராயண கவிராயர் ஆவார். உடுமலைக்கு அருகிலுள்ள பூளவாடி கிராமத்தில் ஒரு சாதாரண குடும்பத்திலே பிறந்து இன்றைய தினம் தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்திலெல்லாம் நிறைந்த அளவுக்கு செல்வாக்குப் பெற்ற நாராயண கவிராயருடைய மண்டபம் உடுமலைப்பேட்டையிலே மிகச் சிறப்பாக திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

**பெரியார், அண்ணா, கலைவாணரின் பாராட்டுக்களையெல்லாம் பெற்றவர்**

உடுமலை நாராயண கவியோடு எனக்கு நீண்ட கால பழக்கம். எனக்கு முன்னர் பேசியவர்கள் இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல திரைப்படத் துறையிலே மாத்திரமல்ல; பொதுவாக கலைத்துறையிலே நாடகமானாலும், திரைப்படங்களானாலும் அவற்றில் அவர் பாடல்கள் எழுதிய காலத்தில் எனக்கும் அவருக்கும் நிறைந்த அறிமுகம் உண்டு. அந்த அறிமுகம் அவரையும் என்னையும் இந்த இயக்கத்திலே மேலும் தீவிரமாக ஈடுபட வைத்தது என்பதை நான் மிக நன்றாக உணர்வேன். பூளவாடி கிராமத்திலே அவர் பிறந்து உடுமலை நாராயணன் கவி என்கின்ற பெயர் கொண்டு தமிழக மக்களுடைய சிந்தையெல்லாம் மகிழுகின்ற அளவுக்கு எத்தனை பாடல்களை அவர் எழுதி, எழுதி குவித்து பெரியாரின் பாராட்டுக்களை, பேரறிஞர் அண்ணாவின் பாராட்டுக்களை குறிப்பாகவும், சிறப்பாகவும் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் பாராட்டுக்களைப் பெற்று வாழ்ந்தபோது அவருடைய உற்ற நண்பர்களிலே ஒருவராக நானும் இருந்திருக்கின்றேன்.

எனக்கு நன்றாக நினைவு இருக்கின்றது. நான் பிரச்சாரத்திற்காக சுற்றுப்பயணம் செல்கிற நேரத்திலெல்லாம் என்னோடு உடன் வருகின்றவர்களில் ஒருவராக செல்லமுத்து இருப்பார். அவர்தான் நாராயண கவிராயரின் அத்தியந்த சிஷ்யர். நாராயண கவிராயர் பக்கத்திலேயே இருந்து அவருக்குப் பணிவிடை செய்வது மாத்திரமல்ல; அவர் சொல்கின்ற பாடல்களை எழுதி அதை பல பிரதிகள் எடுத்து எந்த நிறுவனத்திற்கு அவைகள் வழங்கப்பட வேண்டுமோ அந்த நிறுவனத்திற்கு வழங்கி அந்தப் பாடல்களுக்கு யார் இசை அமைக்கிறார்களோ அவர்களிடத்திலே அமர்ந்து கவிராயரின் உள்ளம் என்ன, எத்தகைய மெட்டிலே அந்தப் பாட்டு வரவேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் பெற்றவர் என்னுடைய மறைந்த நண்பர் செல்லமுத்து ஆவார்.

அண்மைக் காலம் வரையிலே என்னோடு தொடர்பு கொண்டு அடிக்கடி சென்னைக்கு வந்து என்னைச் சந்தித்துக் கொண்டிருந்தார். திடீரென்று அவர் மறைந்து விட்டார். அப்படிப்பட்ட ஒரு நல்ல நண்பரை இந்த விழாவிலே கண்டிருந்தால் மிகவும் பூரித்துப் போயிருப்பேன். ஏனென்றால் அவ்வளவு கூர் புத்தியுள்ளவர். கவிராயரிடத்தில் அவருக்கு அவ்வளவு ஆழ்ந்த அன்பும், பாசமும் உண்டு. அத்தகைய சிறப்பு எல்லோரும் பாராட்டக்கூடிய சிறப்பு.

கவிராயரிடத்திலே என்ன இருந்தது என்றால், அவ்வளவு நிறைந்த புகழ் படைத்த, செல்வாக்குமிக்க பாடல்களை தமிழகத்திலே பரப்பிய கவிராயர் அதற்குரிய ஆணவம் இல்லாமல், அதற்குரிய கித்தாப்பு கொள்ளாமல் மிக எளிமையாக இருந்தார், எளிமையாக எல்லோரிடத்திலும் பழகினார்.

**உடுமலைப்பேட்டையில்
23-2-2001 அன்று
உடுமலை நாராயண கவிராயரின்
மணிமண்டபத்தை திறந்துவைத்து
முதல்வர் கலைஞர் ஆற்றிய
உரையிலிருந்து...**



**மக்களை திருத்துவதாக அமையக்கூடிய கவிதைகளை தருவதில் ஆர்வமிக்கவர்**

ஒரு பாட்டு எழுத வேண்டுமென்று கலைவாணரோ அல்லது நாங்களோ அவரிடத்திலே சொன்னால் இரண்டு நாள் வரையில் தூங்குவதற்குக்கூட அவர் விரும்ப மாட்டார். நீங்கள் பார்த்திருப்பீர்கள். புனுகு பூனை உலவுவதை, அதைப் போல வீட்டுக்குள்ளே, தாழ்வாரத்திற்குள்ளே, கூடத்திற்குள்ளே அவர் உலவிக் கொண்டே இருப்பார்; சிந்தித்துக் கொண்டே இருப்பார். அவருக்குச் சரியாக தோன்றுகின்ற வரையில் அவருடைய மனதிற்குப் பிடிக்கின்ற வரையில் அந்தப் பாட்டை எழுதி முடிக்கின்ற வரையிலே ஓய்வு கொள்ள மாட்டார். அப்படி தொழிலில் அல்ல; ஒரு நல்ல கவிதையை நாட்டுக்குத் தர வேண்டும், அது மக்களை திருத்துவதாக அமைய வேண்டும், அதிலும் சிறப்பாக என்.எஸ்.கே. அவர்களின் படங்களிலே வருகின்ற பாடல்களெல்லாம் மக்களை திருத்துகின்ற பாடல்களாகத்தான் இருக்கும்.

**பெண்களின் உரிமையை நிலைநாட்டுகிற பாடல்**

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அறிஞர் அண்ணா எழுதிய "நல்லதம்பி" படத்தில் கலைவாணர் என்.எஸ்.கே. பாடுகின்ற பாட்டு ஒன்று. உடுமலை நாராயண கவிராயர் எழுதிய பாட்டு,

*"மனுசன மனுசன் ஏச்சுப் பிழைச்சது*
*அந்தக் காலம்"*

*என்று தொடங்குகின்ற பாட்டு,*
*அதிலே ஒரு வரி வரும்*
*"திரௌபதி தன்னை தொட்டு*
*இழுத்தது அந்தக் காலம்*
*இப்பப் பொண்ண தொட்டுப்*
*பார்த்தா சுட்டுப்புடுவா*
*இந்தக் காலம்"*

– என்று அந்தக் காலத்திற்கும் இந்தக் காலத்திற்கும் – திரௌபதியினுடைய துகிலை உரித்தது அல்லது தொட்டு இழுத்தது. இதெல்லாம் அந்தக் காலத்தில் நடந்தது. ஆனால் இந்தக் காலத்தில் ஒரு பொண்ணை தொட்டுப் பார்த்தா சுட்டுப்புடுவா என்று–சுட வேண்டுமென்ற அந்தக் கொள்கை அழுத்தத்தை பெண்ணின் உரிமையை நிலைநாட்டுகின்ற வகையிலே அந்தப் பாட்டை கவிராயர் அமைத்திருந்தார்.

"சொர்க்க வாசல்" என்ற படத்திலேதான் அவர் எழுதிய பாடல்கள் மிகச் சிறப்பாக அமைந்தன.

***"கன்னித்தமிழ் சாலையோரம்***
***கவிதைக் கனிகள் உண்ணும்***
***பறவைகளே!"***

– என்ற பாடல்.

கனிகளை கவிதைகளாக ஆக்கி அல்ல, கவிதைகளை கனிகளாக ஆக்கி அதை உண்ணும் பறவைகளே, எங்கே ? கன்னித்தமிழ் சாலையோரத்தில் கவிதைக் கனி உண்ணும் பறவைகளே என்று பாடினார்.



*உழவர்களுக்காக அவர் பாடிய பாடல்தான்,*
*"பார் முழுவதும் ஏர் முனையிலே!*
*உழவன் பாட்டிலே!*
*கொண்டாட்டம் போடுதே"*

– என்ற பாடல். பார் முழுவதும் ஏர்முனையிலேதான். இந்த உலகம் முழுவதுமே ஏர்முனைக்குத்தான் சொந்தமானது. ஏர்முனை இல்லாவிட்டால் உலகம் இல்லை என்ற அந்தப் பாடலை யாராலும் மறக்க முடியாது.

இன்னொரு பாட்டு

*"சீறிவந்த புலியதனை*
*சிங்கார மறத்தி ஒருத்தி–*
*முறத்தினாலே துரத்தினாளே!"*

அந்தக் காலத்திலே தமிழச்சி அவ்வளவு வீரமாக இருந்தாளாம். புலி சீறி வந்ததாம். அப்போது இவள் முறத்தை வைத்து புடைத்துக் கொண்டிருந்தாளாம். உளுந்தோ, பயறோ ஏதோ ஒரு தானியத்தை முறத்திலே புடைத்துக் கொண்டிருக்கிறாள். அப்போது ஒரு புலி சீறி வருகிறது. கையிலே இருக்கிற முறத்தாலேயே துரத்தினாள். அந்தப் புலி ஓடிப் போய்விட்டது. இது அந்தக் காலம்.

இந்தக் காலத்தில் பூனை குறுக்கே போனாலே நம்முடைய தாய்மார்கள் பயப்படுகிற காலம் இந்தக் காலம். பூனைக்கே பயப்படுகிற காலம் இந்தக் காலம். ஆனால் அந்தக் காலத்து தமிழச்சி "சீறி வந்த புலியதனை சிங்கார மறத்தி ஒருத்தி, முறத்தினாலே துரத்தினாளே" என்று பாடுகின்ற அளவுக்கு இருந்த காலம். இதைத்தான் கவிராயர் அவர்கள் இந்தப் பாடல் மூலமாக இதை எடுத்துக் காட்டுகின்றார்.

இங்கே தம்பி முல்லைவேந்தன் பேசும்போது தியாகிகளுக்கு, பேரறிஞர்களுக்கு, ஆன்றோர்களுக்கு, சான்றோர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னங்களை இந்த அரசு எழுப்பி வருகிறது என்று சொன்னார். குறிப்பாக அந்த எண்ணம் ஈடேறுகின்ற வகையிலே தம்பி முல்லைவேந்தன் சிறப்பாகச் செயல்படுகிறார் என்பதை எண்ணி நான் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழ்நாட்டிலே பல இடங்களில் பல பெரியவர்களுக்கு சிலைகள், இதைப் போன்ற சிங்கார மண்டபங்கள், நினைவாலயங்கள் இவைகளெல்லாம் எழுவதற்கு நாம் சிந்தித்தால் அதைச் செயல்படுத்துகின்ற வகையிலே சிறப்பாக செயல்படுத்தி என்னை மகிழ்விப்பவர் தம்பி முல்லைவேந்தன் என்று சொன்னால் அது மிகை யாகாது.

**நினைவகங்கள், மணிமண்டபங்கள்**

சென்னை கிண்டி பகுதியில் முன்னாள் முதலமைச்சர் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு நினைவகம் – இதைப் போல ஒரு மண்டபத்தை உருவாக்கி யிருக்கின்றோம். நாகர்கோவிலில் 'பொதுவுடமை வீரர் அண்ணன் ஜீவானந்தம் அவர்களுக்கு ஒரு மணிமண்டபம், 50 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 98ஆம் ஆண்டு திறந்து வைத்திருக்கின்றோம்.

சென்னையில் எல்லா தியாகிகளுக்கும் சேர்த்து ஒரு மணிமண்டபம் 2.10.98 அன்று திறந்து வைத்திருக் கின்றோம். வேலூரில் 1806 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் சிப்பாய் கலகத்திலே உயிர் நீத்த வீரர்களுக்கு நினைவுச் சின்னம் 3 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட்டு 20.12.98 அன்று திறந்து வைத்திருக் கின்றோம்.

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் வீரத் தியாகி விசுவநாததாஸ் – அவர் நாடகத்திலே பாடிக் கொண்டிருக்கும் போதே திடீரென்று உயிர் நீத்தவர். "கொக்கு பறக்குதடி பாப்பா வெள்ளை கொக்கு பறக்குதடி பாப்பா" என்று வெள்ளைக்காரர்களை விரட்டியடிக்க வேண்டுமென்று விடுதலை கீதம் முழங்கிய தியாகி விசுவநாத தாஸ். அவருக்கு திருமங்கலத்திலே உள்ள அவரது இல்லத்தை இடித்து ஒரு பெரிய நினைவு மாளிகை இந்த ஆட்சியால் கட்டப்பட்டிருக்கிறது. 27.12.98 அன்று நெல்லை மாவட்டம் நெல்கட்டும்செவல் கிராமத்திலே சுதந்திரப் போராட்ட வீரர் பூலித்தேவன் நினைவு மாளிகை கட்டப்பட்டு 28.12.98 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பெயரால் ஒரு மணி மண்டபம் உருவாக்கப்பட்டு 15.12.99 அன்று திறந்து வைக்கப்பட்டது. மருதூரில் வள்ளலார் இராமலிங்க அடிகளின் நினைவுத் தூணை புதுப்பிக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. கன்னியாகுமரியில் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு 2.10.2000 அன்று திறந்து வைக்கப்பட்டது. சென்னை கடற்கரை காமராஜர் சாலையில் அண்ணல் காந்தியடிகள் சிலைக்கு எதிரே இந்தியக் குடியரசு பொன்விழா வளைவுத் தூண் 4 இலட்சம் ரூபாய் செலவிலே எழுப்பப்பட்டு 25.1.2001 அன்று திறந்து வைக்கப்பட்டது. சென்னை கிண்டியில் மொழிப்போர் தியாகிகள் நினைவு மண்டபம் 25.1.2001 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நாமக்கல்லில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவகம் 9 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றது. விரைவில் முடிவடையும் தருவாயில் இருக்கின்றது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு மண்டபம் குன்றக்குடியில் 26 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகிறது. விரைவில் திறக்கப்படவிருக்கிறது. மருதுபாண்டியர் நினைவிடங்கள் சிவகங்கையில் 20 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருப்பத்தூரில் 7 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி கட்டாரங்குளத்தில் வீரன் அழகு முத்துக்கோன் நினைவு மண்டபம் 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட திட்டமிடப்பட்டு அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. தியாக சீலர் கக்கன் அவர்களுக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் மேலூர் வட்டம் தும்பைப்பட்டி கிராமத்தில் அழகிய மணி மண்டபத்தில் ஒன்று கட்டப்பட்டு 13.2.2001 அன்று திறந்து வைக்கப்பட்டது.

சென்னை காயிதேமில்லத் அரசு மகளிர் கல்லூரியில் காயிதேமில்லத் மணிமண்டபம் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்ட திட்டமிடப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகள் 25.2.2001 அன்று தொடங்கப்படவுள்ளன.

இன்றைக்கு இந்த கவிராயர் மணிமண்டபம். இவைகளையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம் நான் குறிப்பிட்ட இந்த நினைவுச் சின்னங்களில் பல நினைவுச் சின்னங்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் பெயரால் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் என்பதையும் பெரும் தமிழறிஞர்களுக்கு, ஆன்றோர்களுக்கு, சான்றோர்களுக்கு தியாகச் செம்மல்களுக்காக கட்டப்பட்ட நினைவுச் சின்னங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்பதையும் உங்களுக்கு சுட்டிக்காட்டத்தான் இந்தப் பெயர்களையெல்லாம் குறிப்பிட்டேன்.

பக்தவத்சலம் அவர்களின் பெயரால் ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்கின்ற எண்ணம் அவர்களுடைய கட்சிக்காரர்களுக்குத் தோன்றவில்லை. அது நமக்குத் தான் தோன்றியது. பெருந் தலைவர் காமராஜர் பெயரால் ஒரு மணிமண்டபத்தை எழுப்ப வேண்டுமென்ற எண்ணம் அந்தக் கட்சிக்காரர்களுக்கு ஏற்படவில்லை. நமக்குத்தான் ஏற்பட்டது. இப்படி பல நினைவாலயங்கள், மண்டபங்கள், சிலைகள், மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று யார் நமக்குப் போதித்தாரோ அந்த அண்ணனின் போதனையை சிந்தனையிலே செதுக்கி வைத்துக் கொண்டு இந்தக் காரியங்களிலே நாம் ஈடுபட்டிருக் கின்றோம். நல்லவைகளையே செய்து கொண்டிருக் கின்றோம்.

இங்கே பேசியவர்கள் இந்த ஆட்சியின் சாதனைகளையெல்லாம் எடுத்து விளக்கினார்கள். நான் அவைகளைப் பற்றியெல்லாம் இங்கே பேச விரும்பவில்லை. ஏனென்றால் அவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் நாராயணக் கவிராயரின் பெயர் மறைந்து போய் ஆட்சியின் சாதனைகளைப் பற்றிப் பேசிவிட்டுப் போனார்கள் என்ற செய்திக்குத் தான் முதலிடம் கிடைக்கும். எனவே நான் அவைகளை பற்றிப் பேசவில்லை.

**நாட்டிற்காக - சமுதாயத்திற்காக பாடப்பட்ட பாடல்கள்**

நாராயணக் கவிராயர் நாடு நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பாடினார். அந்தப் பாட்டுக்கள் நாட்டுக்காக பாடப்பட்டவை – சமுதாயத்திற்காகப் பாடப்பட்டவை.

இன்னொன்றை நான் உங்களுக்குச் சொல்லியாக வேண்டும். "கா, கா, கா" என்று ஒரு பாடல், சில பேர்கூட எண்ணிக் கொண்டிருப்பீர்கள். இது நான் எழுதிய பாட்டு என்று இல்லை. பராசக்திக்கு நான் திரைக்கதை வசனம் எழுதிய காரணத்தால் அதிலே வந்த பாட்டு என்பதால் அது நான் எழுதிய பாட்டு என்று எண்ணிக் கொண்டிருப்பீர்கள். "கா, கா" பாட்டுக்கூட எழுதியவர் நம்முடைய நாராயணக் கவிராயர்தான் என்ற உண்மையை நான் உங்களுக்குச் சொல்லி அந்தக் கவிராயரின் புகழ் என்றென்றும் வாழ்க, வாழ்க என்று வாழ்த்துகிறேன்.

• • •

# சென்னையில் அரசின் சார்பில் இராமசாமி படையாச்சியார் சிலை

இன்று ஓர் உணர்ச்சிகரமான விழா. நம்முடைய பேரன்பிற்குரிய – மறைந்தும் மறையாமலும் நம்முடைய நெஞ்சங்களிலே நிறைந்திருக் கின்ற எஸ்.எஸ். இராமசாமி படையாச்சியார் அவர்களுடைய திருவுருவத்தை இங்கே சிலையாக நிறுத்தியிருக்கின்றோம். அதனைத் திறந்து வைத்து அந்த வைபவத்தை நாம் நிகழ்த்திக் கொண்டிருக்கிறோம். சிலையைத் திறந்தவுடன் பக்கத்திலே இருந்த வாழப்பாடியாரிடமும் மற்ற நண்பர்களிடத்திலும் நான் சொன்னேன், எத்தனையோ சிலைகளை அண்மைக் காலத்திலே திறந்திருக்கிறோம். ஆனால் இந்தச் சிலைக்கு தத்ரூபமாக அமைந்த முகத்தைப் போல அந்தச் சிலைகளுக்கெல்லாம் அமையவில்லை. அவ்வளவு அற்புதமாக இந்தச் சிலை அமைந்திருக்கிறது என்று நான் சொன்னேன். சிலையை வடித்த சிற்பிக்கு முதலில் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிலை வடிக்க என்னுடைய உணர்வும் ஒரு காரணமாக இருந்தது என்றாலுங்கூட, அந்த உணர்வைத் தூண்டிவிட்டவர்கள் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும், அருமை நண்பர் தீரன் அவர்களும், வன்னிய அடிகளார் அவர்களும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஒருநாள் காலையிலே என்னைச் சந்தித்து – நேற்றைய தினம் ஒரு தீர்மானத்தை எங்கள் அமைப்பின் சார்பில் நிறைவேற்றியிருக்கிறோம். அதை நாங்கள் செய்து முடித்தாக வேண்டும். சென்னை மாநகரிலே ஒரு இடம் படையாச்சியாருடைய சிலையை அமைப்பதற்கு கொடுங்கள் என்று கேட்டார்கள். வாழப்பாடியார் இங்கே குறிப்பிட்டதைப் போல்– இடம் மாத்திமல்ல, அந்த இடத்திலே நிச்சயமாக சிலையும் அமைத்துத் தருகிறோம், அதுவும் இந்த ஆட்சியின் சார்பாகவே அந்த நற்பணி நடைபெறும் என்று வாக்களித்தேன்.

சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்பதுதான் இந்த அரசினுடைய தாரக மந்திரம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதற்கேற்ப இந்தச் சிலை செய்து முடிக்கப்பட்டு சென்னை மாநகரிலே ஒரு முக்கியமான பகுதியிலே இன்றைக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

இராமசாமி படையாச்சியார் அவர்களை நான் பல்லாண்டு காலமாக பழகி அறிந்தவன். அவர்கள் அமைச்சராக இருந்த காலத்திலே மாத்திரமல்ல, அமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு முன்பு பழைய தென் ஆற்காடு மாவட்டத்தில் உழவர் உழைப்பாளர் கட்சியின் தலைவராக அவர் இருந்த காலத்திலிருந்து நான் அவரை மிக நன்றாக அறிவேன்.

என்னுடைய அருமை நண்பரும் மறைந்த வேளாண்மைத்துறை அமைச்சருமான கோவிந்தசாமி அவர்கள் இராமசாமிபடையாச்சியார் அவர்களிடம் எவ்வளவு நெருக்கமான நண்பர் என்பதை நான் மிக நன்றாக அறிவேன். உழவர் உழைப்பாளர் கட்சியின் வேட்பாளர்களில் ஒருவராக கோவிந்தசாமி அவர்கள் இருந்தபோது அவருக்காக தேர்தல் பணியாற்றவும், தேர்தல் பிரச்சாரம் செய்யவும் அதையொட்டி அதே நேரத்தில் படையாச்சியார் அவர்களுக்காக தேர்தல் பிரச்சாரம் செய்யவும் நான் அப்போது சென்றிருந்தேன். படையாச்சியார் அவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே எவ்வளவு நெருங்கிய பழக்கம் என்பதையும் நான் நன்றாக அறிவேன். அதைப் போலவே அண்ணாவிற்கும் இராமசாமி படையாச்சியாருக்கும் இடையே தூதராக இருந்து அரசியல் விஷயங்கள் பலவற்றைப் பரிமாறிக் கொள்கின்ற ஒரு நண்பராக இருந்தவர் என்னுடைய அருமை நண்பர் மறைந்த மதியழகன் அவர்கள் ஆவார்கள். இப்படி நெருங்கிப் பழகுகின்ற ஒரு சூழ்நிலையிலே வளர்ந்தவர், வாழ்ந்தவர், மறைந்தும் மறையாத எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார் அவர்களாவார்கள்.

இங்கே 20 விழுக்காடு இட ஒதுக்கீடு பற்றி வாழப்பாடியார் குறிப்பிட்டார். மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக இந்தச் சமுதாயத்தை மாற்றிட வேண்டும்,




நடத்திட வேண்டுமென்று ஒரு குரல் தமிழகத்திலே எழுந்தது. அது போர்க் குரலாக எழுந்தது என்றாலுங்கூட முதன் முதலாக அதை உரிமைக் குரலாக எழுப்பியவர் வேறு யாருமல்ல, அவர்தான் இன்றைக்குச் சிலையாக இங்கே நின்று கொண்டிருக்கின்ற இராமசாமி படையாச்சியார் அவர்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதல் குரல் கொடுத்தவர் இராமசாமி படையாச்சியார் அவர்கள்தான். அதற்குப் பிறகு தான் அது போர்க்குரலாக மாறியது. அந்தப் போர்க்குரலால் ஏற்பட்ட விளைவுகள் எல்லாம் உங்களுக்குத்தெரியும். அதனால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களையும் நீங்கள் அறிவீர்கள். அந்த நேரத்திலே நாங்கள் ஆளுங்கட்சி அல்ல. எதிர்க்கட்சியாக இருந்து சென்னை மாநகரத்திலே அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் அண்ணா அறிவாலயத்தை அமைத்து அதனுடைய திறப்பு விழாவை, நடத்தியபோதுதான் அந்த விழாவிற்கு வந்து திரும்பிச் சென்றவர்கள் எல்லாம் அந்தப் போராட்டத்திலே தாக்கப்பட்டார்கள். வேடிக்கை என்னவென்றால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு குறிப்பிட்ட விழுக்காடு ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை எழுப்புகின்ற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அந்தப் போராட்டத்திலே தாக்கப்பட்டார்கள். அதுதான் விபரீதமான வேடிக்கை. ஆனால், அன்றைக்கு இருந்த அரசு அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கவில்லை.

### இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் குடும்பத்திற்கு நிதி

அதற்குப் பிறகு 1989–ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு முதலமைச்சராக நான் பொறுப்பேற்றிருந்த போது தான் அந்தக் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கைக்காக உயிர் தந்தவர்களுக்கு – தியாகம் செய்தவர்களுக்கு நிதி வழங்க வேண்டும், குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்ற குரலை நண்பர் தீரன் அவர்கள் சட்டப்பேரவையிலே எழுப்பினார்கள். அதனையேற்று 23 குடும்பங்களுக்கு தலா மூன்று இலட்ச ரூபாய் வீதம் நிதி வழங்கப்பட்டது. அது மாத்திரமல்ல, அந்த உயிர் நீத்தவர்களின் வாரிசுகள் இருக்கிறார்களே, அவர்களுடைய மனைவி, மக்கள் அவர்களுக்கும் மாதந்தோறும் 1,500 ரூபாய் வழங்குவது என்று ஆணையிடப்பட்டு அவ்வாறே வழங்கப்பட்டு வருகின்றது. விடுதலை தியாகிகளின் பட்டியலில் மொழிப்போர் தியாகிகளின் பட்டியலில் ஒரு சமுதாயத்திற்காக குரல் கொடுத்து, மிகவும்



பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக குரல் கொடுத்து, அதிலே வெற்றி கண்டு, ஆனால் பிணமாகி விட்ட, வீழ்ந்து விட்ட அந்த வீரர்களின் குடும்பத்திற்காக அந்த நிதி வழங்கப்பட்டது.

இப்போது கூட மேலும் இரண்டு மூன்று பேர்களுக்கு அந்த நிதி வழங்கப்படவில்லை. அவர்களின் பெயர்கள் விடுபட்டு விட்டது என்று அந்தப் பட்டியலை இந்த இடத்திலும் வாழப்பாடியார் என்னிடத்திலே கொடுத் தார்கள். அதுவும் நிறைவேற்றப்படும் என்பதை நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**1989**–ஆம் ஆண்டு தமிழகத்திலே சட்டமன்றத்திற் கான பொதுத் தேர்தல் நடைபெற்ற போது நான் கடலூர் பகுதியிலே பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தேன். அப்போது கூட்டத்திலே அமர்ந்திருந்த போது படையாச்சியார் அவர்களுக்கு உடல் நலம் இல்லை. அவர் வீட்டிலே தங்கி ஓய்வெடுத்துக் கொள்கிறார் என்று சொன்னார்கள். நான் அந்தக் கூட்டத்தை முடித்துக் கொண்டு புறப்பட்டு அடுத்த ஊருக்குச் செல்லவேண்டிய அவசியம். இருந்தாலுங்கூட அதையும் ஒத்தி வைத்துவிட்டு நேராக எஸ்.எஸ்.ஆர். வீட்டிற்குச் சென்று அவரைச் சந்திக்க வருகிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டுச் சென்றேன்.

### சாதிபேதமற்ற சமுதாயம் ஏற்பட அனைவரும் ஒன்றுபட்டு பாடுபடுவோம்

அவருடைய பெருந்தன்மையைப் பாருங்கள். நான் வருகிறேன் என்று எதிர்பார்த்து, அப்போது நான் ஒன்றும் ஆட்சிப் பொறுப்பிலே அமைச்சராக இருந்தவன் அல்ல. அவர் வீட்டு வாசலிலே உடம்பு முடியாத நிலையிலேயே, எழுந்து கூட நிற்க முடியாத நிலையிலே அமர்ந்து கொண்டு ஒரு மாலையை கையிலே வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார். நான் சென்றவுடனே எனக்கு அந்த மாலையைப் போட்டு வரவேற்றார். தம்பி இராமதாஸ் எல்லாம் அப்போது அங்கே கூட இருந்தார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அந்த அளவிற்கு ஒரு அன்பு, பாசம் எனக்கும் அவருக்கும் இடையிலே உண்டு. அதற்கு என்ன காரணம் என்று எண்ணியெண்ணிப் பார்க்கிறேன். ஒன்றும் காரணமல்ல, நானும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன். அவர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இனமும் இனமும் ஒன்று சேருவதிலே ஒன்றும் பெரிய ஆச்சரியமில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவருடைய சிலையை இங்கே நான் நிர்மாணித்து திறந்து வைத்திருக்கிற இந்தச் சூழ்நிலையில் இந்தச் சமுதாயத்திற்காக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக – மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக –தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காக – அதே நேரத்தில் முன்னேறிய சமுதாயத்தை அழிப்போம் என்கிற எண்ணம் இல்லாமல் எல்லா சமுதாயத்தினரோடும் ஒன்றுபட்டு ஒத்துழைத்து பேதங்களை மறந்து அனைவரும் பாடுபடுவோம் என்ற உறுதியை எடுத்துக் கொள்வதுதான் எஸ்.எஸ்.இராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற நன்றிக் காணிக்கையாக இருக்க முடியும். சிலை திறப்பதைவிட அதுதான் சிறந்த ஒன்றாக இருக்க முடியும் என்பதை எடுத்துக்கூறி வாழ்க படையாச்சியார் அவர்களுடைய பெயர், புகழ் என்றென்றும் வாழ்க வாழ்க என்று வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**இராமசாமி படையாச்சியார் திருவுருவச்சிலையை 21-2-2001 அன்று சென்னையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்து ஆற்றிய உரையிலிருந்து...**

வழக்கம் போல் சைதாப்பேட்டையில் மிக விமரிசையாக இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சைதாப்பேட்டையில் நான் நிற்கப் போவதாக ஒரு வதந்தி. அதனால்தான் அதை மறுக்கின்ற வகையில் உட்கார்ந்து கொண்டு பேசுகிறேன். நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினரும், என்னுடைய அருமைத் தம்பிகளில் ஒருவருமான – செயலில் சிட்டு என்று நான் பாராட்டிய சைதை கிட்டு அவர்களுடைய பெருமுயற்சி காரணமாக அன்றாடம் அவர் கனவு கண்ட இந்தச் சுரங்கப் பாதை இன்றைக்கு திறந்துவைக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு நன்றி பாராட்டுவதென்றால், மேயரைப் பாராட்டுவதை விட, என்னைப் பாராட்டுவதைவிட, மத்திய அமைச்சர் தம்பி பாலுவை பாராட்டுவதை விட, ரெயில்வே இலாகாவைப் பாராட்டுவதைவிட தம்பி கிட்டுவைப் பாராட்டுவதுதான் மிகப் பொருத்தம் உடையதாக இருக்கும்.



மாநகராட்சி மன்றத்தின் சார்பிலே மூன்றரை கோடி ரூபாயும், ரெயில்வே துறையின் சார்பில் இரண்டரை கோடி ரூபாயும் செலவிட்டு மொத்தம் ஆறு கோடி ரூபாய் செலவில் இந்த அருமையான சுரங்கப் பாதை அமைந்திருக்கின்றது. நாம் பாலங்களையும் கட்டுகிறோம். சுரங்கப் பாதைகளையும் அமைக்கிறோம். ஏற்கெனவே இருந்த சில பேர் சுரங்கப் பாதைகளை மாத்திரம் அமைத்தார்கள். அரசாங்க கஜானாவிலிருந்து தங்களுடைய வீடு வரையிலே அந்தச் சுரங்கப் பாதை யாருக்கும் தெரியாமல் சென்று கொண்டிருந்தது. அதையெல்லாம் மாற்றியமைத்து இன்றைய தினம் திறந்த பாலங்கள், திறந்த சுரங்கப் பாதைகள், இவையிரண்டும் சிறந்தவை, திறந்தவை மாத்திரம் அல்ல, சிறந்தவை என்ற வகையிலும் சென்னை மாநகராட்சி மன்றத்தாலும் இன்றைய உங்கள் அரசு – தமிழக அரசின் சார்பிலும் தமிழகம் முழுதும் விளங்குவதை நீங்கள் காணுகிறீர்கள்.

**ஐந்தாண்டில் 354 பாலங்கள்**

ஒரு சிறிய ஒப்பீடு. முந்தைய அரசு ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு முழுதும் கட்டி முடித்த பாலங்களின் எண்ணிக்கை **53.** ஐம்பத்தி மூன்று என்று நீட்டிச் சொல்ல வேண்டும். ஆனால் இந்த அரசு இந்த ஐந்தாண்டு காலத்திலே கட்டி முடித்த பாலங்களின் எண்ணிக்கை **354.**

இந்தப் பாலங்கள் எவ்வளவு கட்டப்பட்டன என்கின்ற ஒரு ஒப்பீட்டில் இருந்தே இந்த அரசு மக்கள் நன்மைகளை நாடிச் சென்று அவர்களுக்காக எப்படியெல்லாம் பணியாற்றுகின்றது என்பதையும் இந்த அரசோடு தொடர்பு கொண்டிருக்கின்ற சென்னை போன்ற மாநகராட்சி

# ஐந்தாண்டில் 354 பாலங்கள்

மன்றங்கள் – அது மாநகராட்சி மன்றத்தின் மேயர்கள், பல்வேறு நகராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சி மன்றங்களின் தலைவர்கள், நிர்வாகிகள் என்று இவர்கள் எல்லாம் அளப்பரிய சாதனைகளை இந்த ஐந்தாண்டுக் காலத்தில் மக்களுக்காக ஆற்றியிருக்கிறார்கள் என்றால் மக்கள் எதை எதிர்பார்த்து இந்த ஆட்சியை அமைத்தார்களோ, எதை எதிர்பார்த்து உள்ளாட்சி மன்றங்களில் தங்களுடைய பிரதிநிதிகளை தேர்வு செய்து நியமித்தார்களோ அதை நாம் நிறைவேற்றி வருகிறோம் என்று பொருள்.

ஊழல் என்று சொல்கிறார்கள் என்றால் நீங்கள் அவர்களைப் புரிந்து கொள்ளவேண்டும் என்பதை நான் வேண்டி உங்களிடத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் ஐந்தாண்டு காலமாக நடைபெற்று வருகின்ற இந்த ஆட்சி சாதாரண சாமான்ய மக்கள், நடுத்தர மக்கள் – அவர்களுடைய தேவைகளை உணர்ந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்கின்ற வகையிலே தன்னுடைய நிர்வாகச் சக்கரத்தை சுழற்றிக் கொண்டிருக்கிறது. அந்தத் தேவைகளிலே ஒன்று தான்



**பொதுமக்கள் பணம் சிக்கனமாக செலவு செய்யப்பட்டிருப்பது ஊழலா?**

ஏறத்தாழ பத்து மேம்பாலங்களை கட்டி முடிப்பது என்று திட்டமிட்டு ஒன்பது மேம்பாலங்கள் சென்னை மாநகரிலே கட்டி முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டிருக்கின்றன. கட்டி முடிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட ஒன்பது மேம்பாலங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை 94 கோடியே 50 இலட்சம் ரூபாய். ஆனால் இந்த ஒன்பது பாலங்களுக்கான கட்டுமானச் செலவு எவ்வளவு ஆகியிருக்கிறது என்றால் 64 கோடியே 28 இலட்சம் ரூபாய்தான். மீதப்பட்ட தொகை ஏறத்தாழ முப்பது கோடி ரூபாய்.

இப்படி முப்பது கோடி ரூபாய் மீதப்பட்டிருப்பதை ஊழல் என்கிறார்கள். ஆமாம், மீதப்படாமல் இருந்தால்தான் அது புனிதமான காரியம். மிச்சப்படுத்தி சிக்கனமாகச் செலவு செய்து பொதுமக்களுடைய பணம் விரயமாகக்கூடாது என்பதற்காக மதிப்பீடு 94 கோடி, கட்டிய செலவு 64 கோடி, இந்த மிச்சம் 30 கோடி ரூபாய் என்று சொன்னால், இது இந்தப் பாலங்கள். பாலங்கள் ஏதோ பகட்டுக்காக, பளபளப்பாக நகரம் இருக்கட்டும் என்பதற்காக அமைக்கப்படுபவை அல்ல. பாலங்கள் இல்லாமல் இந்த மாநகரம் இருப்பதை ஒருமுறை நீங்கள் எண்ணிப் பார்த்தால் எவ்வளவு போக்குவரத்துக்கு இடையூறு, எந்த அளவிற்கு பாதசாரிகள் ஆகட்டும், வாகனங்கள் ஆகட்டும், இவற்றிற்கெல்லாம் காலதாமதம் ஏற்பட்ட நிலை, இவைகளை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அவைகள் எல்லாம் இன்றைக்கு பெருமளவிற்கு அகற்றப்பட்டிருக்கின்றது. இன்னும் முழுமையாக அகற்றப்படவில்லை. காரணம் இன்னும் சில பாலங்கள் இந்த மாநகரத்திற்குத் தேவைப்படுகின்றன.

வெளிநாடுகளுக்குச் சென்று கோலாலம்பூரோ அல்லது சிங்கப்பூரோ அல்லது மேற்கத்திய நாடுகளோ எங்கு சென்று நீங்கள் நகரங்களைக் கண்டாலும் அந்த நகரங்கள் எல்லாம் பாலங்கள் என்கின்ற அழகான அணிகளைப் பூண்டு நிற்கின்ற காட்சியை காண முடிகிறது. அது வெறும் அலங்காரத்திற்காக மாத்திரமல்ல,

மக்களுடைய வசதிகளுக்காக, நேரம் குறைய வேண்டும் என்பதற்காக, பயணக் காலம் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக பாலங்கள் அமைக்கப்படுகின்றன. அதே எண்ணத்தோடு தான் இங்கேயும் பாலங்கள் அமைக்கப்படுகின்றன.

பொறுப்பேற்கும் நேரத்தில் தம்பி ஸ்டாலின் சென்னையை சிங்கப்பூராக ஆக்கிக் காட்டுவோம் என்று உங்களுடைய ஆதரவையெல்லாம் கோரினார். இப்பொழுது முழுமையான சிங்கப்பூராக சென்னை ஆகாவிட்டாலுங்கூட, ஒரு திருப்தி அடையத் தக்க வகையில் சிங்கப்பூர் மாதிரி சென்னை வளருகிறது என்று சொல்லுகின்ற வகையில் எழில் கொஞ்சுகிறது. ஆங்காங்கு பொலிவு தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. வசதிவாய்ப்புகள் ஏராளமாக இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாநகரத்தில் மேலும் பல திட்டங்களை உருவாக்குவதின் மூலம் சிங்கப்பூர் மாதிரியல்ல, சிங்கப்பூரைவிட மேல் என்று சொல்கின்ற அளவிற்கு இந்த மாநகரம் எழிலுற வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு மாபெரும் நதிகளைத் தூய்மைப்படுத்துகின்ற திட்டத்தை மத்திய–மாநில அரசுகள் இணைந்து நிறைவேற்றுவதற்கான கால்கோள் விழா இரண்டொரு திங்களுக்கு முன்பு சென்னை மாநகரத்திலே நடைபெற்றது. அதற்கு தம்பி டி.ஆர்.பாலு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சி பெரும் முயற்சியாகும்.

**நதி நீரில் மாசகற்றி**
**தூய்மைப்படுத்தும் மகா திட்டம்**

அந்த முயற்சியின் காரணமாக சென்னை மாநகரத்திலே உள்ள கூவம், பக்கிங்ஹாம் போன்ற இப்படிப்பட்ட ஆறுகள், ஓடைகள், காவேரி நதி, வைகை நதி, தாமிரபரணி நதி ஆகிய இங்கெல்லாம் இணைந்த ஒரு திட்டமாக நதி நீரில் மாசகற்றி தூய்மைப்படுத்தி, ஆங்காங்கு அதையொட்டிருக்கின்ற நகரங்களிலே கழிவு நீரை அகற்றுகின்ற காரியங்களைச் செய்து இந்த மகா பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்று திட்டம் தொடங்கப்பட்டுவிட்ட சூழ்நிலையில் நாம் இன்றைக்கு அதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

இவைகள் எல்லாம் நிறைவடைய வேண்டும். பல திட்டங்கள், ஒன்பது பாலங்கள் முடிவடைந்து விட்டன. பத்தாவது பாலம் இன்னும் திறக்கப்படவில்லை. அதுவும் திறக்கப்படவேண்டும் என்பதைப்போல பெரிய நதிநீர் திட்டம் தொடங்கப்பட்டது முடிவடைய வேண்டும் என்பதைப்போல, 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நாங்குநேரியில் ஒரு பெரிய தொழில் வளாகம், தொழில் பூங்கா என்று சொல்லப்படுகின்ற தொழில் வளாகம் சிறப்புப் பொருளாதார வசதிகொண்ட தொழில் வளாகம், பத்தாண்டுகளுக்கு அங்கே வரி கிடையாது என்ற அளவிற்கு வசதி படைத்த, வாய்ப்புள்ள தொழில் வளாகம் அமைவதற்கு அடிக்கல் நாட்டு விழா சென்ற மாதம் நடைபெற்றுள்ளது. நானும் சென்றிருந்தேன். நம்முடைய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் தம்பி முரசொலி மாறனும் வந்திருந்தார்.

அந்தப் பெருவிழாவிலே இலட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்தார்கள். அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டால் தெற்கு மாவட்டங்கள் – மதுரையானாலும், நெல்லையானாலும், தேனி மாவட்டம் ஆனாலும், இராமநாதபுரம் மாவட்டம் ஆனாலும், கன்னியாகுமரி மாவட்டம் ஆனாலும், தூத்துக்குடி மாவட்டம் ஆனாலும், விருதுநகர் மாவட்டம் ஆனாலும், இவைகள் எல்லாம் செழிப்படையக்கூடிய அளவிற்கு வேலைவாய்ப்புகள் இலட்சத்தி ஐம்பதாயிரம் பேருக்கு கிடைக்கும் அந்த திட்டத்தால், அந்தத் திட்டத்தோடு இணைந்த மற்றொரு திட்டம், குளச்சல் துறைமுகத் திட்டம். மலேசிய அரசோடு கலந்து - பேசி அவருடைய விருப்பத்தின்படி மலேசியாவினுடைய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்கள் குளச்சலுக்கு அவருடைய அதிகாரிகளோடு வருகை தந்து, குளச்சலைச் சுற்றிப் பார்த்து சாதக பாதகங்களையெல்லாம் சிந்தித்து முடிவாக குளச்சல் துறைமுகத்தை விரிவாக்கி, பெரிதாக்கி, தூத்துக்குடி துறைமுகத்தைவிட பெரிய துறைமுகமாக அதனை ஆக்க முடியும் என்று திட்டமிட்டு அதனுடைய பணிகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

**கோலாலம்பூரில் கையெழுத்தாகும்**
**குளச்சல் துறைமுகத் திட்டம்**

நான் உங்களுக்குச் சொல்கிறேன். அதற்கான ஒப்பந்தம் இந்த மாதம் 9–ந்தேதி மலேசியாவில், கோலாலம்பூரில் கையெழுத்தாகவிருக்கின்றது. தமிழக அரசின் சார்பாக நெடுஞ்சாலைத்துறை, துறைமுகத்துறை அமைச்சர் தம்பி கிருஷ்ணன் அவர்கள் கோலாலம்பூர் சென்று அந்தக் கையெழுத்திடும் வைபவத்திலே கலந்து கொள்ளவிருக்கிறார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியையும் உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சென்னை சைதாப்பேட்டை பஜார் சாலை வாகன சுரங்கப்பாதையை 6-3-2001 அன்று திறந்துவைத்து முதல்வர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...**

# சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகக் கட்டட திறப்பு விழா

"1997–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பெரியார் பல்கலைக் கழகத்தின் கட்டடத் திறப்பு விழா நிகழ்ச்சி சீரோடும், சிறப்போடும், எழுச்சியோடும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பல்கலைக் கழகம் உருவாக வேண்டுமென்று அரும்பாடுபட்டவர், பெருமுயற்சியிலே ஈடுபட்டவர், சுருக்கமாகச் சொல்லப்போனால் என்னைத் துளைத்தெடுத்தவர், வேளாண்மைத்துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

சேலத்திற்கு நான் ஒவ்வொரு முறையும் வரும் போதெல்லாம் சேலம் சற்று மாறியிருக்கிற காட்சியை என்னால் காண முடிகிறது. ஏனென்றால் தமிழ்நாட்டிலே உள்ள சில முக்கியமான ஊர்களில் இரண்டாண்டு காலம், மூன்றாண்டு காலம் என்று நான் வாழ்ந்த ஊர்களில் சேலமும் ஒன்று. நான் சேலத்திலே வாழ்ந்தபோது, சேலம் இப்படியில்லை. சேலத்தினுடைய பொலிவு, சேலத்தினுடைய எழில் இவைகள் எல்லாம் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டிருந்த கால கட்டத்தில், நான் சேலம் மாநகரிலே பல இடங்களில் வசித்திருக்கிறேன். சேலம் மண்ணில் உலவியிருக்கிறேன். ஆனால் சேலம் மாத்திரமல்ல, இன்று தமிழகத்திலேயே பல நகரங்கள், பல கிராமங்கள் முகமாற்றம் பெற்று எழிலோடு விளங்குகிற காட்சியைக் காண முடிகிறது. இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை நான் இங்கே விளக்கி என்னுடைய பேச்சை அரசியலாக்க விரும்பவில்லை. நீங்களே உணர்ந்து கொள்வீர்கள் என்ற காரணத்தால்!

**சமுதாயத்தில் புதிய எழுச்சியை உருவாக்கப் பாடுபட்டவர் பெரியார்**

இந்தச் சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும், இந்தச் சமுதாயத்திலே ஒரு புதிய எழுச்சியை உருவாக்க வேண்டுமென்று எண்ணி, கடைசி மூச்சு பிரிகிற வரையில் பாடுபட்டவர், எங்களையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள். அந்தப் பெரியாரிடத்திலே குரு குலவாசம் செய்தவன் என்ற முறையில், நான் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அடிக்கல் நாட்டியதிலும் இன்று திறப்பு விழா செய்ததிலும் மிகுந்த பெருமையடைகிறேன்.

பெரியாருடைய குரு குலமான ஈரோடு நகரத்தில் நான் அவருடைய அலுவலகத்திலே அலுவல் புரிந்தபோது, அவருடைய தொண்டர்களில் ஒருவனாக இருந்தபோது, கறுப்புச் சட்டை படையிலே கையெழுத்து போடு என்று அவர் கட்டளையிட்டு, பெரியார் தொடங்கிய கறுப்புச் சட்டை படையிலே முதல் தொண்டனாகச் சேர்ந்தவன் இந்தக் கருணாநிதி என்ற முறையில் நான் இன்றைக்கு அடைகின்ற மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

அவருடைய பெயரால் தமிழகத்திலே நூற்றுக்கும் மேற்பட்ட சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. சாதி பேதத்தை ஒழிப்பது, சாதி வேறுபாட்டைக் களைவது, சாதிச் சண்டையை நிறுத்துவது என்பதற்காகத்தான் சமத்துவபுரங்களை உருவாக்கியிருக்கிறோம்.

அந்தச் சமத்துவபுரங்கள் ஒவ்வொன்றிலும் நூறு வீடுகள் என்றால் 40 வீடுகளில் ஆதிதிராவிடர்களும், மீதமுள்ள 60 வீடுகளில் பிற்படுத்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும், உயர்சாதி மக்களும் வாழ்கிறார்கள். சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். பல சமத்துவபுரங்களில் ஆதிதிராவிடர்கள் மாத்திரமல்ல, பிராமணர்களும் அவர்களோடு சேர்ந்து வாழ்கின்ற காட்சியைக் காண முடிகிறதென்றால், இதற்கெல்லாம் நான் அல்ல, என்னை உருவாக்கிய தந்தை பெரியார் தான் இதற்கெல்லாம் காரணம். அதனால்தான் அவருடைய பெயரால் ஒரு பல்கலைக் கழகம் உருவாக வேண்டும் என்று நாங்கள் எண்ணியதிலும், அதை இங்கே அமைத்திருப்பதிலும் வியப்பொன்றுமில்லை.

**பெரியாரின் கருத்துக்களை காவிய நயத்தோடு தந்தவர் அண்ணா**


சமுதாயத்திலே ஏற்பட்ட மாசு மருக்களையெல்லாம் அகற்றி மூடநம்பிக்கைகளை அகற்றி, சமுதாயத்தை புதுக்கோலம் காணச் செய்ய பெரியார் முயன்றார். எப்படி சேலத்திலே உள்ள திருமணிமுத்தாறை நாம் இன்றைக்குப் புதுமைப்படுத்த எண்ணுகிறோமோ, அதைப்போலத்தான் தந்தை பெரியார் அவர்கள் இந்தச் சமுதாயத்தை

**முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 4-3-2001 அன்று சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகக் கட்டடத்தைத் திறந்துவைத்து ஆற்றிய உரை.**

புதுமைப்படுத்த எண்ணினார். திருமணிமுத்தாறு வேலை இன்னும் முடியவில்லை. நிச்சயமாக முடிந்துவிடும். அதைப் போல பெரியாருடைய இந்தப் பணியும், அவர் இன்றைக்கு இல்லாவிட்டாலும்கூட அதை முடித்து வைக்கின்ற அந்தப் பெரும் பொறுப்பை நாமெல்லாம் ஏற்றிருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக வெற்றிகரமாக முடிக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

அவர் எப்படியெல்லாம் தன்னுடைய சீர்திருத்தக் கருத்துக் களை மக்களிடத்திலே பரப்பினார்? பேரறிஞர் அண்ணா அவர்கள் பெரியாருடைய மாணவர், பெரியா ருடைய தளபதி, பெரியாருடைய சேனாதிபதி, பெரியார் சொன்ன கருத்துக்களை மென்மைப்படுத்தி – இலக்கியப்படுத்தி, காவிய நயத்தோடு, கலைநயத்தோடு, நாட்டுக்குத் தந்தவர் பேரறிஞர் அண்ணா. பெரியார் அவர்கள் சற்றுத் தீவிரமாக, முரட்டுத்தனமாக தன்னுடைய கொள்கைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லக் கூடியவர். ஆனால் அந்தக் காலத்திலே அந்த முறைதான் தேவைப்பட்டது. எனவே அந்த முறையிலே அவர் பணியாற்றினார்.





ஒரு பையனுக்கு தஞ்சை மாவட்டத்தில், பேராவூரணியில், குழந்தை என்ற நண்பருடைய பையனுக்கு பெரியாரிடம் பெயர் வைக்கச் சொன்னார்கள், பெரியார் அந்தப் பையனுக்கு 'மாஸ்கோ' என்று பெயர் வைத்தார். அப்போதுதான் அவர் ரஷ்யாவிற்குச் சென்று திரும்பியிருந்தார். ரஷ்ய மண் பகுத்தறிவு மண்ணாக இருக்கிறது. பெரியாருடைய கொள்கைக்கு ஏற்ற மண்ணாக இருக்கிறது என்ற காரணத்தால், மாஸ்கோ என்று பெயர் வைத்தார். பக்கத்திலே இருந்தவர்கள், கெக்கலி கொட்டிச் சிரித்து, ஊர் பெயரை பையனுக்கு வைக்கிறீர்களே என்று கேட்டார்கள். உடனே பெரியார், "பழநி" என்று ஊர் பெயரை வைக்கவில்லையா? சிதம்பரம் என்று ஊர் பெயரை வைக்கவில்லையா? அது போல நான் 'ரஷ்யா', 'மாஸ்கோ' என்று ஊர்களின் பெயர்களை வைப்பதில் தவறில்லை" என்று சொன்னார்.

**பின்தங்கிய மக்கள் முன்னேற கல்வி மிக அவசியம்**

அந்த அளவிற்கு முரட்டுத்தனமாகவும், அதே நேரத்தில் மூளை உள்ளவர்கள் சிந்தித்து, "ஆமாம். சரிதானே அவர் சொல்வது" என்று ஏற்றுக் கொள்ளத்தக்க விதமாகவும் பெரியாருடைய பகுத்தறிவுப் பிரச்சார முறை அன்றைக்கு அமைந் திருந்தது. அப்படிப்பட்ட பெரியார் நம்முடைய சமுதாயத்திலே பிற்படுத்தப் பட்டிருக்கின்ற மிகவும் பிற்படுத்தப் பட்டிருக்கின்ற, தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்ற சாதாரண சாமான்ய மக்கள் எல்லாம் முன்னேற வேண்டும், அப்படி முன்னேறுவதற்குக் கல்வி மிகமிக அவசியம் என்று கருதினார். அந்தக் கல்வியை அவர்களுக்குத் தாராளமாகத் தரவேண்டு மென்று பெரியார் கருதினார்.

அவர் ஆழ்ந்து படித்தவரல்ல, ஆழ்ந்து படித்தவர் அல்ல என்றால், உயர்நிலைப் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ சென்று படித்தவரல்ல என்ற பொருளிலேதான் சொல்கிறேன். ஆனால் அவர் ஆழ்ந்து படிக்காத புத்தகம் இல்லை. அவர் ஆழ்ந்து படிக்காத வரலாறு இல்லை, அவர் ஆழ்ந்து படிக்காத விஞ்ஞானங்கள் இல்லை. அந்த அளவிற்கு அனைத்தையும் ஆழ்ந்து படித்தவர். தன்னைப் போல் இரண்டாவது வகுப்பு, மூன்றாவது வகுப்பு என்ற நிலையில்

மற்ற மாணவர்களும் மற்ற ஏழையெளிய வீட்டுப் பிள்ளைகளும் இருந்தால் நாடு என்ன ஆகும் என்ற அந்த எண்ணத்தில் அவர்கள் பாடுபட்டார்கள். அந்த எண்ணத்தை உருவாக்குகின்ற வகையிலேதான் அதற்கு நாம் இன்றைக்கு ஒரு அடையாளம் தருகிறோம் என்ற வகையிலேதான் பெரியாருடைய பெயரால் கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் பெரியாருடைய பெயரால் பல்கலைக்கழகம் என்று தொடங்கியிருக்கிறோம்.

இந்தப் பல்கலைக்கழகம் 11 அரசு கலைக்கல்லூரி களையும், 2 அரசு பொறியியல் கல்லூரிகளையும், 37 சுயநிதி பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளையும் இணைத்து ஆக மொத்தம் 50 கல்லூரிகள் இந்தப் பெரியார் பல்கலைக் கழகத்தோடு இணைந்து செயல்படுகின்றன. இந்தக் கல்லூரிகளை யெல்லாம் சேர்த்து மொத்தம் 93 பாடப் பிரிவுகளில் ஏறத்தாழ 50 ஆயிரம் மாணவ, மாணவியர் பயின்று வருகின்றார்கள். இவர்களில் 20 ஆயிரத்து 862 பேர் மாணவியர். இங்கே குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்ற மாணவ மணிகளுக்குச் சொல்லிக் கொள்கிறேன், இந்த எண்ணிக்கையை 1998–99–இல் 14,336 மாணவ மாணவியர் பயின்ற நிலைமாறி தற்போது இந்த எண்ணிக்கை 19,954 என்று உயர்ந்துள்ளது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த ஆட்சிக் காலத்திலே 74–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கோவையில் முதன்முதலாக வேளாண்மை அறிவியல் பல்கலைக் கழகம் தோன்றியது. நான் முதல் அமைச்சராக பொறுப்பேற்று இரண்டாவது முறையாக 71–ஆம் ஆண்டு வெற்றிபெற்ற பிறகு, இந்தியாவிலே சில மாநிலங்களுக்குச் சுற்றுப்பயணம் சென்றிருந்தேன். அதிலே ஒரு மாநிலம் பஞ்சாப். அங்கே நான் கண்ட வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒரு தூண்டுகோலாக அமைந்து தமிழகம் திரும்பியதும் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை கோவையிலே தொடங்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இன்றைக்கு அந்தப் பல்கலைக் கழகம் நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது.

அதன் பிறகு 1975–ஆம் ஆண்டு இன்றைக்கு உலகத்திலே இருக்கின்ற விஞ்ஞானிகள், வல்லுநர்கள் எல்லாம் போற்றத் தக்க அளவிற்கு, கல்வி மேதைகள் எல்லாம் பாராட்டத் தக்க அளவிற்கு வளர்ந்துள்ள அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் சென்னையிலே எனது ஆட்சியிலேதான் தொடங்கப் பட்டது.

1989–ஆம் ஆண்டு திருநெல்வேலியில் மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தை இந்த ஆட்சியிலேதான் தொடங்கினோம். அதே ஆண்டு சென்னையில் ஆசியாவிலேயே முதன் முதலாக கால்நடைகளுக்கான மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தைத் தொடங்கினோம். அதே 89–இல் சென்னையில் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆருடைய பெயரால் எம்.ஜி.ஆர். மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தைத் தொடங்கினோம். 1997–இல் சேலத்தில் பெரியார் பல்கலைக் கழகத்தைத் தொடங்கினோம். அதே 97–இல் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், இந்தியாவிலேயே அம்பேத்கர் பெயரால் சட்டப் பல்கலைக் கழகம் இருக்கின்ற ஒரேயொரு மாநிலம், தமிழ்நாடு தான் என்பதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

**உலகத் தமிழர்களையெல்லாம் இணைக்கும் தமிழ் இணையப் பல்கலைக் கழகம்**

இதற்கடுத்து சென்னையில், அண்மையில் உலகத் தமிழ் இணையப் பல்கலைக் கழகம் இதுவும் இந்தியாவிலே தமிழ்நாட்டிலே தான் தொடங்கப்பட்டுள்ளது. உலகத்திலே உள்ள தமிழர்களையெல்லாம் இணைக்கும் அளவிற்கு ஒரு பல்கலைக்கழகம் அது. இந்தப் பல்கலைக் கழகங்களுடைய வரிசையில் நம்முடைய பெரியார் பல்கலைக் கழகமும் இன்றைக்கு எழுந்திருக்கின்றது என்பதைக் காணும்போது நான் அளவில்லா மகிழ்ச்சியடைகிறேன், பெருமிதம் கொள்கிறேன். இந்தப் பல்கலைக் கழகத்தில் மூதறிஞர் இராஜாஜி, அண்ணல் அம்பேத்கர் ஆகியோருடைய பெயரில் தலா 25 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 50 இலட்சம் ரூபாய் நிதியைக் கொண்டு இரண்டு அறக்கட்டளைகள் நிறுவப் பட்டிருக்கின்றன. இந்த நிதியிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து 1999–2000–ஆம் ஆண்டில் 55 சிறந்த மாணவர்களுக்கு 54 ஆயிரம் ரூபாயும், 2000–2001–ஆம் ஆண்டில் 76 மாணவர்களுக்கு 2 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டிருக்கின்றது.

ராஜாஜி பெயரால், அம்பேத்கர் பெயரால் பெரியார் பல்கலைக் கழகத்திலே அறக்கட்டளைகள், மிகப் பொருத்தம். ஏனென்றால் பெரியாரும், அம்பேத்கரும் சந்தித்து இந்தியாவினுடைய சமுதாயத் துறையிலே ஏற்பட வேண்டிய மாற்றங்களையெல்லாம் கூடிக் கலந்து பேசியவர்கள். அம்பேத்கர் தான் எடுக்கும் பல முடிவுகளுக்கு பெரியாருடைய சம்மதத்தைக் கேட்டவர். கேட்டுக் கொண்டிருந்தவர். அதைப்போல பெரியாருக்கு அரசியலிலே விரோதி என்றாலும்கூட மிகச் சிறந்த ஆருயிர் நண்பர் ராஜாஜி. அந்த ராஜாஜியின் பெயரால் ஒரு அறக்கட்டளை பெரியார் பல்கலைக் கழகத்திலே அமைந்திருப்பதும் சாலச் சிறந்ததாகும் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட எல்லா சிறப்புக்களையும் பெற்ற இந்தப் பல்கைலக் கழகத்திற்கான கட்டடத்தை திறந்து வைக்கின்ற வைபவத்தில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பு பெற்றமைக்காக நன்றி தெரிவித்து இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்க பாடுபட்ட பெருமுயற்சி எடுத்த தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கு மீண்டும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து, விடைபெற்றுக் கொள்கிறேன்". ★

பெண்கள் சக்தி என்று புகழப்படுவார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதன்முதலாக எழுதிய தன்னுடைய கவிதையை தேசியக் கவி பாரதியாருக்கு முன்னால் பாடிக்காட்டினார். அந்தக் கவிதை – எங்கெங்கு காணினும்/சக்தியடா, ஏழு கடல் அவள் வண்ணமடா என்று ஆரம்பிக்கின்ற கவிதை. சக்தி என்றால் பெண் அல்லவா? இங்கே நான் பார்க்கிறேன். எங்கெங்கே பார்த்தாலும் சக்தி, சக்தி, சக்தி என்கின்ற அளவிற்குப் பல்லாயிரக்கணக்கிலே பெண்களின் மாநில மாநாடு நடத்தப்படுவதைப் போல நீங்கள் குழுமியிருக்கின்ற காட்சியைக் கண்டு களிப்படைகின்றேன்.

இந்த நிகழ்ச்சி இவ்வளவு மகத்தான மாபெரும் நிகழ்ச்சியாக மதுரைக்கு அடுத்து கோவையிலும், கோவைக்கு அடுத்து திருச்சியிலும் இதற்கு முன்பு சென்னையிலும் வேறு பல இடங்களிலும் நடைபெற்றிருக்கின்றது என்றாலுங்கூட எல்லா நிகழ்ச்சிகளுக்கும் முத்தாய்ப்பு வைப்பது போல திருச்சி நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

## மகளிர் குழுக்கள் பெரும் வெற்றியைக் குவித்துக் கொண்டிருக்கின்றன

– முதலமைச்சர் **கலைஞர்**



நான் இங்கே அமர்ந்து நேராகப் பார்க்கிறேன். எதிரே இருக்கின்ற கூட்டம்தான் இந்த மாநாட்டிற்கு வந்த மகளிர் கூட்டம் என்று கருதுகிறேன். சற்று தலையைத் திருப்பிப் பார்க்கிறேன். அங்கேயும் மகளிர், வலது பக்கம் பார்க்கிறேன், அங்கேயும் மகளிர், மகளிர், மகளிர் என்று மீண்டும் பாடத் தோன்றுகிறது. எங்கெங்கு காணினும் சக்தியடா, ஏழு கடல் அவள் வண்ணமடா என்று, அப்படிப்பட்ட ஒரு மகத்தான விழா இன்றைக்கு திருச்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதற்கு மேடைக்கு வருவதற்கு முன்பு என்னுடைய வாகனத்தில் அமர்ந்தவாறே இங்கே அமைந்துள்ள நூறு கடைகளையும் தாண்டி வந்தேன். இந்த நூறு கடைகளும் மகளிர் சுய நிதிக் குழு அமைத்த கடைகளாகும். இந்த அரசு உருவாக்கியுள்ள பூமாலை திட்டத்தின் அடிப்படையில் அதன் தாக்கத்தைப் பகிர்ந்து கொண்டு அமைக்கப்பட்ட கடைகள், வரிசையாக இருந்ததைக் கண்டு நான் பூரித்துப் போனேன். அதைவிட ஒவ்வொரு கடையிலிருந்தும், அந்தக் கடைக்குரிய மகளிர், அவர்கள் உருவாக்கிய கைவினைப் பொருட்களை எனக்குப் பரிசாக அளித்தார்கள்.

இங்கே மேடையிலே அளித்த பரிசுகள் மாத்திரமல்ல, ஒவ்வொரு கடையிலும் இந்தப் பரிசுகளை நான் பெற்றேன். நான்கூட என்னுடன் வந்திருக்கின்ற துணைவியாரிடத்தில் "100 கடைகளிலும் உனக்காக ஏராளமான பொருட்களை வாங்கி வந்திருக்கிறேன்" என்றேன். எவ்வளவு ரூபாய் செலவழித்து என்று கேட்டார். "எல்லாம் பரிசாகத் தான் கொடுத்தார்கள். இதற்குப் பரிசாக, அந்தச் சகோதரிகளிடத்தில் நான் என்னுடைய நெஞ்சத்தைக் கொடுத்திருக்கிறேன்" என்று சொன்னேன்.

தாய்மார்களே, சகோதரிகளே, இங்கே தம்பி சிவா சுட்டிக் காட்டியதைப் போல அஞ்சுகத்தம்மை யாருடைய மூன்றாவது பிள்ளை நான், இரண்டு சகோதரிகளோடு பிறந்தவன் நான். எப்படி அஞ்சுகதம்மையாரை என்றென்றும் மறவாமல் என்னுடைய நெஞ்சில் நிலைநாட்டி வைத்திருக்கிறேனோ, அதைப்போல என்னை வளர்த்த என்னுடைய சகோதரிகளிடத்திலும், நிறைந்த அன்பைப் பொழிந்து அவர்களுக்கும் நன்றி உடையவனாக இருப்பவன் நான். வீட்டிலே இருக்கின்ற சகோதரிகளிடத்திலே மாத்திரமல்ல, நாட்டிலே பரவிக் கிடக்கின்ற தாய்மார்களிடத்திலே, சகோதரிகளாகி உங்களிடத்திலே அதே அன்பை கொஞ்சமும் குறைவில்லாத அன்பை செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

என்னுடைய பொது வாழ்வு என்னுடைய 14–வது வயதிலே ஆரம்பமாயிற்று. வயது எனக்கு 77 என்றாலுங்கூட, பொது வாழ்க்கையிலே நான் கழித்துள்ள ஆண்டுகள் 63. இந்த 63 ஆண்டுகளில் தந்தை பெரியார் அவர்களிடத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே பயின்ற அவர்களைப் பின்தொடர்ந்து, அவர்களுடைய கொள்கைகளை உள்ளத்திலே ஏந்திக் கொண்டு நான் என்னுடைய பயணத்தைத் தொடர்ந்து நடத்திய காரணத்தினால் தான் நீங்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிற்கு, புகழ்ந்து பேசுகின்ற அளவிற்கு, பாசம் காட்டுகின்ற அளவிற்கு, நீங்கள் ஒரு சகோதரனை நேசிப்பதைப் போல நேசிக்கப்படுவதற்குக் காரணம் அந்தக் கொள்கைகளை நான் இன்றைக்கு என் உள்ளத்திலே பதிய வைத்திருப்பதுதான்.

நீங்கள் இங்கே உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்கள். அந்த உறுதி மொழியிலே என்னென்ன சமுதாயச் சீர்த்திருத்தங்கள் உண்டோ அத்தனையும் அதிலே நீங்கள்

சொல்லியிருக்கிறீர்கள். பெண்ணடிமை கூடாது என்பது உறுதிமொழியிலே ஒன்று. அதே வாசகத்தை நான் குறிப்பிடாவிட்டாலுங்கூட, அதனுடைய கருப்பொருள் அதுதான். இளம் வயதிலே பெண்களை திருமணம் செய்து கொடுக்கின்ற கொடுமை அகற்றப்பட வேண்டும் என்பது விதவைகளுக்கு மறுமணம் செய்ய வேண்டும் என்ற மறுமலர்ச்சி, சித்தாந்தம், இவைகள் எல்லாம் அந்த உறுதிமொழியிலே அடங்கியிருந்ததை நான் கண்டேன்.

**மனிதர்கள் மனம் மாறாவிட்டால்**
**தீமைகளை ஒழிக்க முடியாது**

சமுதாயத்திலே ஒரு நல்ல விழிப்புணர்வு, ஒரு தூய்மை ஏற்பட வேண்டும் என்பதற்காக கள்ளுக் கடைகளை, சாராயக் கடைகளை நீங்கள் எதிர்த்திருக்கின்ற அந்த எழுச்சிக் கோலம் என்னுடைய உள்ளத்தைக் கவர்ந்தது. காவல் துறையை வைத்துக் கொண்டு என்னதான் ஒரு அரசு கடுமையாகப் பணியாற்றினாலும்கூட, மனிதர்கள் திருந்தாவிட்டால் அவர்கள் மனம் மாறாவிட்டால் எவ்வளவு கடுமையான சட்டங்களாலும் தீமைகளை ஒழிக்க முடியாது. ஆனால் அந்தப் பொறுப்பை இன்றைக்கு கையிலே எடுத்துக் கொண்டு நீங்கள் பணியாற்றுகிறீர்கள்.

பல மாதங்களுக்கு முன்பு மதுரை மாவட்டத்தில் சில இடங்களுக்கு ஆங்காங்கு அமைக்கப் பட்டிருக்கின்ற இந்தக் குழுக்களைக் காண வேண்டுமென்பதற்காக திடீரென்று சென்றேன். உசிலம்பட்டிக்கு பக்கத்திலே உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று இந்த மகளிர் குழுவைக் கண்டோம். சுமார் 50 பெண்கள் இடம் பெற்றிருந்த குழுக்களை நாங்கள் அந்த மாவட்டத்திலே இரண்டு பகுதியாகக் கண்டோம். அவர்கள் ஆற்றிக் கொண்டிருந்த பணிகளையெல்லாம் எங்களிடத்திலே விவரித்தார்கள்.

நாங்கள் கடன்பெற்று இன்னின்ன காரியங்களைச் செய்கிறோம். அதே நேரத்திலே இந்தக் குழுவிலே உள்ள மற்றவர்களுக்கு கடன் கொடுத்து அவர்கள் அதை நேர்மையாகத் திருப்பிக் கொடுத்து, அதை நாங்கள் திரும்பப் பெற்று, அதை வைத்துக் கொண்டு இன்னின்ன காரியங்களை நாங்கள் செயல்படுத்துகிறோம். மிக முக்கியமாக பெண் குழந்தைகள் பிறந்தால் அதைக் கொல்கின்ற கொடுமையை நாங்கள் தடுத்து நிறுத்தி யிருக்கிறோம். எங்கள் வீட்டு ஆடவர்கள் குடிப் பழக்கத்தால் கெட்டுப் போகிறார்கள். அவர்களைத் திருத்தி நல்வழிப் படுத்தியிருக்கிறோம். நாங்கள் படிப்பறிவில்லாதவர்களாக இருந்தோம். இன்றைக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் படித்துப் படித்து முன்னேறி புத்தகங்களை, பத்திரிகைகளைப் படிக்கின்ற அளவிற்கு நாங்கள் வளர்ந்திருக்கிறோம் என்று இப்படிப்பட்ட அற்புதமான செய்திகளையெல்லாம் எனக்கு அவர்கள் சொன்னார்கள்.

வேறு சில மாவட்டங்களிலும் நான் இப்படிப்பட்ட குழுக்களைப் பார்த்தேன். தொடர்ந்து இந்தக் குழுக்களையெல்லாம் பார்க்க வேண்டும். அவர்களுடைய பணிகளையெல்லாம் பாராட்ட வேண்டும், ஊக்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. இன்றல்ல, இதற்கு ஆரம்பக் கட்டமாக 1989 ஆம் ஆண்டு நான் மூன்றாவது முறையாக முதல் அமைச்சராக இருந்தபோதே, இந்தத் திட்டத்தை நான் எண்ணிப் பார்த்து இந்த மகளிர் சுய உதவிக்குழுக்களை உருவாக்கினால் என்ன என்று எனக்கு நானே கேட்டுக் கொண்டு, அதைப்பற்றி அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, முதன்முதலாக இந்த மகளிர் குழுக்கள் திட்டத்தை தருமபுரி மாவட்டத்திலே தொடங்கினேன்.

அதற்குப் பிறகு இரண்டாண்டு காலத்திற்குள் ஆட்சி கலைக்கப்பட்டது. ஏன் கலைக்கப்பட்டது என்பதை யெல்லாம் இங்கே சொல்லி நான் அரசியல் பேச விரும்பவில்லை. ஓய்வு கொடுத்தார்கள் என்று எண்ணிக் கொள்ளுங்கள். தண்டித்தார்கள் என்று நினைத்துக் கொள்ளவேண்டாம். எவ்வளவு நாட்களுக்குத்தான் நீ ஆண்டு கொண்டிருப்பாய், கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள் என்று 91ஆம் ஆண்டு என்னை ஓய்வெடுக்க வீட்டிற்கு அனுப்பினார்கள். அதற்குப் பிறகு வந்த ஆட்சியிலே இந்த மகளிர் திட்டம் வளர்ந்ததா என்றால் வளரவில்லை. ஏன் வளரவில்லை என்பதற்கான காரணங்களை நான் இப்போது தேடி அலைய விரும்பவும் இல்லை. அது உங்களுக்குத் தேவையுமில்லை. ஆனால் அது வளரவேண்டும் என்று இருந்திருக்கின்றது.

**மகளிர் குழுக்கள் அபரிமிதமான**
**வெற்றியை குவித்துக் கொண்டிருக்கிறது**

அதனால் நான்காவது முறையாக இந்த ஆட்சி 96ஆம் ஆண்டு வந்தது. வந்தது முதல் இந்தத் திட்டத்தை மேலும் மேலும் வளர்க்க வேண்டுமென்று அந்தத் துறையின் அமைச்சரை வலியுறுத்தி அந்தத் துறையிலே உள்ள அதிகாரிகள், செயலாளர்கள் அத்தனை பேரையும் வலியுறுத்தி அவர்களுடைய விடா முயற்சியின் காரணமாக இன்றைய தினம் இலட்சக்கணக்கானவர்கள், ஏறத்தாழ 11 இலட்சத்து சொச்சம் பேர் மகளிர் இந்தத் திட்டத்திலே இடம் பெற்று ஆங்காங்கு ஒவ்வொரு குழுவிலும் அபரிமிதமான வெற்றியைக் குவித்துக் கொண்டிருக்கின்ற காட்சியை நான் கண்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாய்க்குலம் என்பது சாதாரணமானதல்ல. ஒரு காலத்திலே பாரதி வருந்தியதைப் போல், பாரதிதாசன் வருந்தியதைப் போல் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். அது இடைக்காலம். எதுவும் இடைக்காலத்திலே வருகின்ற கேடுகள்தான். ஆனால் தமிழனுடைய பழங்காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தின் பழங்கால வரலாற்றைப் பார்த்தால் பெண்கள் வீராங்கனைகளாக வாழ்ந்திருக்கிறார்கள். இங்கே பார்த்தோம். திருவாரூரைச் சேர்ந்த நாகலட்சுமியும், திருச்சியைச் சேர்ந்த மகேஸ்வரியும் பேசியதைக் கேட்டோம். நாகலட்சுமி வந்து மேடையிலே நிற்கும்போதுகூட, உருவத்தைப் பார்த்துவிட்டு என்ன பேசப் போகிறது என்று அலட்சியமாகக் கருதினேன். அலட்சியம் கொள்ளாதே, இதுதான் ஆண்களுக்குள்ள அகம்பாவம், என்று சொல்லாமல் சொல்வதைப் போல நாகலட்சுமி இங்கே பேசிய பேச்சு அமைந்தது.

அதைப் போலவே திருச்சி மகேஸ்வரியின் பேச்சும் இங்கே அமைந்தது. இன்னும் கொஞ்சம் நேரம் கொடுத்தால் நான் ஒலிபெருக்கியை விடமாட்டேன் என்றெல்லாம் சொன்னார். ஆனால் ஒரு வார்த்தை கூட வீணான வார்த்தையல்ல. அவர் பேசிய பேச்சில் ஒரு வாக்கியம்கூட தேவையற்ற வாக்கியமல்ல, அத்தனையும் பயன் உள்ள வாக்கியங்களாக அமைந்திருந்தன. இது எதைக் காட்டுகிறது என்றால், அது நம்முடைய பாரம்பரியத்தைக் காட்டுகின்றது. தமிழ்ச் சமுதாயத்தின் பாரம்பரியம் தாய்க்குலம் எப்படி இருந்தது என்பதைக் காட்டுகிறது. சங்க காலம் தமிழர்கள் வாழ்ந்த பொற்காலம். அந்தச் சங்க காலம் திரும்ப வராதா என்ற ஏக்கம்தான் என் போன்றவர்களுக்கெல்லாம்.

### சங்ககால தாய்மார்களின் போர்க் கள வாழ்வு

சங்க காலத்தில் தாய்மார்கள் எப்படி இருந்தார்கள், அவர்களுடைய இல்லற வாழ்வானாலும் சரி, அவர்களுடைய போர்க்கள வாழ்வானாலும் எப்படி இருந்ததை என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தன்னுடைய நாட்டிற்காக, தன்னுடைய இனத்திற்காக, தன்னுடைய மன்னனுக்காக நடைபெற்ற போராட்டங்களில் போர்க்களத்தில் தந்தை இறந்து விடுகிறான். கணவனும் இறந்து விடுகிறான், கடைசியாக தன்னுடைய ஏழு வயது சிறுவன் பள்ளிக்குச் சென்றவனை அழைத்து வந்து அவனுக்கு எண்ணெய் தடவி சீவிச் சிங்காரித்து கையிலே போர் வாளைக் கொடுத்து சென்று வா மகனே செறு முனைக்கு என்று அன்றைக்கு அனுப்பிய வீரத் தாய்தான் நம்முடைய தமிழ்த் தாய் என்பதை நீங்கள் யாரும் மறந்துவிட முடியாது. அந்த வழி வந்தவர்கள் தான் இங்கே பல்லாயிரக்கணக்கிலே அமர்ந்திருக்கிறீர்கள்.

தன்னுடைய மகன் போர்க்களத்திலே இறந்து விட்டான், கொல்லப்பட்டு விட்டான் என்ற செய்தியை கேள்விப்படுகிறாள் ஒரு ஏழைக்கிழவி. ''கொல்லப் பட்டானா? அப்படியென்றால் எங்கே காயம்? முதுகிலா? மார்பிலா?'' என்று கேட்கிறாள். வந்தவன், சரியாக விஷயம் தெரிந்து கொள்ளாமல் வந்தவன். எனவே முதுகிலே காயம் பட்டு இறந்து விட்டான் என்கிறான்.

சொன்னவுடன், இந்தக் கிழவிக்கு ஆத்திரம், மகன் இறந்ததைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. முதுகிலே காயம்பட்டு கோழையாக மாண்டானே என்ற ஆத்திரத்தில் "என் மகன் மாத்திரம் முதுகிலே காயம்பட்டு கொல்லப்பட்டிருப்பானேயானால் அவனுக்கு வீரப்பால் என்றெண்ணி ஊட்டினேனே, அந்த வீரப்பால் ஊட்டப்பட்ட அந்த மார்பை அறுத்தெறிவேன்'' என்று வாளோடு போர்க்களம் செல்கிறாள்.

### வீரத்தாயின் பரம்பரையிலே வந்த தாய்மார்கள் இங்கே குழுமியிருக்கிறீர்கள்

போர்க்களத்திலே அவளுடைய மகன் கொல்லப்பட்டுக் கிடந்தான். ஆனால் காயம் முதுகிலே இல்லை, மார்பிலே காயம்பட்டுக் கிடந்தான், அதைப் பார்த்து "மகனைப் பெற்ற பொழுதைவிட நான் அதிகம் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று சொன்னாள் ஒரு தாய். அந்த வீரத்தாயின் பரம்பரையிலே வந்த தாய்மார்கள் தான் இங்கே பல்லாயிரக்கணக்கிலே குழுமியிருக் கிறீர்கள் என்பதை எண்ணிப் பார்த்துப் பூரிப்படைகிறேன்.

## முதல்வர் கலைஞர் மகளிர் தின வாழ்த்துச் செய்தி

உலக மக்கள் தொகையில் ஏறத்தாழ சரிபாதி அளவில் வாழ்பவர்கள் மகளிர் ஆயினும், அவர்களின் கல்வி, சமூக, அறிவியல், அரசியல், பொருளாதார நிலைகளில் போதிய முன்னேற்றம் இல்லாத நிலை பரவலாகக் காணப்படுகிறது. இந்நிலையை அகற்றி மகளிர் சமுதாயம் முழுவதும் முன்னேற்றம் பெறுவதற்கு வழி வகுக்கத்தக்க சீரிய சிந்தனைகளையும், செயல்பாடு களையும் வளர்க்கும் நோக்கில், ஆண்டு தோறும் மார்ச்சுத் திங்கள் 8-ஆம் நாள் ''உலக மகளிர் நாள்" எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.

### பெண்கள் முன்னேற்றத்தை வலியுறுத்தி வரும் திராவிட இயக்கம்

1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாடு முதற்கொண்டு திராவிட இயக்கம் தொடர்ந்து பெண்கள் முன்னேற்றத்தை வலியுறுத்தி வந்துள்ளது. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தமது எழுத்தாலும், பேச்சாலும் பெண்கள் முன்னேற்றம் குறித்த விழிப்புணர்வினை சமுதாயத்தில் வளர்த்தனர். 1967ஆம் ஆண்டில் கழக அரசு அமைந்த பிறகு பெண்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுத் தொடர்ந்து செயல்படுத்தப்படுகின்றன.

பெண்களுக்கு சொத்துரிமை, வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு, உள்ளாட்சித் தேர்தல்களில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு, தொழில் தொடங்கும் முதல் தலைமுறை மகளிர்க்கு 50 ஆயிரம் ரூபாய் வரை மானிய உதவி, தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர் தொழில் முனைவோர்க்கு முன்னுரிமை என்பன போன்ற பல்வேறு சலுகைகளை இந்தியாவிலேயே முதன்முதலாக வழங்கி மகளிர் சமுதாயம் எழுச்சி பெற வழிவகுக்கப்பட்டுள்ளது.

மூவலூர் மூதாட்டியார் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி 5,000 ரூபாய் என்பதை 10 ஆயிரம் ரூபாயாக 1996இல் உயர்த்தி இதுவரை 2 இலட்சத்து 38 ஆயிரத்து 370 ஏழைப் பெண்களுக்கு மொத்தம்

அப்படிப்பட்ட தாய்க்குலத்திற்கு இடைக் காலத்திலே இழைக்கபட்ட அவமானம், அவர் களுக்குச் செய்யப்பட்ட கொடுமை கொஞ்ச நஞ்சமல்ல. குடும்பம் என்ற பெயரால், கணவன் என்ற பெயரால், வரதட்சனை என்ற பெயரால், சீர்வரிசை என்ற பெயரால், செய்யப்பட்ட கொடுமைகள் ஏராளம். நீ படிக்கக் கூடாது. நீ அடுப்பெரிக்கத்தான் லாயக்கு என்கிற சாஸ்திரங்களை நினைவூட்டி அவர்களை சகதியிலே தள்ளிய அந்தக் கொடுமையின் பெயரால் நடைபெற்ற அந்தச் சம்பவங்கள் எல்லாம் இடைக்காலத்திலே நடைபெற்றன.

அவைகளிலிருந்து தாய்க்குலத்தை மீட்க, தாய்க்குலம் மீட்கப்பட்டால்தான் மொத்த சமுதாயமும் வாழ முடியும். சமுதாயம் என்பது ஆணும் பெண்ணும் இணைந்ததுதான் சமுதாயம், ஆண்கள் மாத்திரம் ஒரு சமுதாயம், பெண்கள் ஒரு சமுதாயம், என்றில்லை. இருவரும் இணைந்து வாழ்கின்ற சமுதாயம், இருவரும் இணைந்து அறிவு கொளுத்து கின்ற சமுதாயம், அப்படிப்பட்ட சமுதாயம் மலர வேண்டும் என்பதற்காகத்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அவர்கள் வழியிலே நாங்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். அதன் காரணமாகத்தான் எங்கள் ஆட்சியில், மன்னிக்க வேண்டும், நம்முடைய ஆட்சியில் நாம் பெண் களுக்காக பெரியாரும் அண்ணாவும் போதித்த அந்தக் கருத்துக்களையெல்லாம் சட்டம் ஆக்கு கிறோம். செயல்படுத்துகிறோம்.

இன்றைக்கு எந்த மாநிலத்திலும் இல்லை, பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 33 விழுக்காடு வழங்கப்படுகிறது இந்த ஆட்சியிலே, தமிழ்நாட்டிலே. அது மாத்திரமல்ல, உள்ளாட்சி மன்றங்களில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட உள்ளாட்சி மன்றங்களில் இன்றையதினம் பெண்கள் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான ஊராட்சிகளில் 34 ஆயிரம் பேர் மகளிர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தலைவர்களாக, ஒன்றியத் தலைவர்களாக, இன்னும் சொல்லப் போனால் மாநகராட்சி மன்ற மேயர்களாக பெண்கள் இருக்கிறார்கள்.

இந்த அதிசயங்கள் எல்லாம் எப்படி நடந்தது? எப்படி நடக்க முடிந்தது? அவ்வளவு ஏன்? இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்களே, 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டிலே நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வேண்டும் என்பதாகும். 60 ஆண்டுகளுக்குப் பிறகு 1989ஆம் ஆண்டு சட்டப்பேரவையிலே அந்தத் தீர்மானத்தை சட்டமாக ஆக்கி விட்டு அப்போது சொன்னேன், இது செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானம் அறுபதாண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு நிறைவேறுகிறது என்று நான் சொன்னேன். பெண்களுக்கு சொத்திலே சம உரிமை என்பது தான் அந்தச் சட்டம். இப்படி பெண்களுடைய விழிப்புக்காக, அவர்களுடைய நன்மைக்காக, அவர்களுடைய முன்னேற்றத்திற்காக பாடுபடுகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கின்றது.

தாய்மார்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் அளவோடு குடும்பத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். இதுவரையில் நாங்கள் பார்க்கவில்லையா என்று கேட்கக் கூடாது. ஒரு வேளை தவறி இருக்கலாம், அளவில்லாமல் பிள்ளைகளைப் பெற்றிருக்கலாம். சொல்கின்ற நானே கொஞ்சம் அளவில்லாமல் பெற்றவன்தான். அதிக அள வில்லாமல் அல்ல, கொஞ்சம் அளவில்லாமல் பெற்றவன்தான்.

---

238 கோடியே 37 இலட்சம் ரூபாய் திருமண உதவி நிதியாக வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, பிற திருமண உதவித் திட்டங்களின் மூலம் 11,832 ஏழைப் பெண்களுக்கு 10 கோடியே 65 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப் பட்டுள்ளது. 6 இலட்சத்து 97 ஆயிரத்து 616 கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு 500 ரூபாய் வீதம் மொத்தம் 29 கோடியே 3 இலட்சத்து 3000 ரூபாய் நிதியுதவியாக வழங்கப் பட்டுள்ளது.

**சமூக நலத்திட்டங்களுக்கு மாதரசிகளின் பெயர்களைச் சூட்டி பெருமைப்படுத்திய அரசு**

இதர பல திட்டங்களிலும் தமிழக மகளிர் பயன்பெறும் வகையில் தாராளமாக நிதியுதவிகளை வழங்கிவரும் இந்த அரசு; ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப்படிப்புத் திட்டம், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம், சத்தியா அம்மையார் குழந்தைகள் காப்பகங்கள் திட்டம், சத்தியவாணி முத்து அம்மையார் இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், சிவகாமி அம்மையார் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பங்காரு அம்மையார் மகளிர் திட்டம் எனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களுக்கு மாதரசிகளின் பெயர்களைச் சூட்டி, மகளிர் சமுதாயத்தைப் பெருமைப்படுத்தி உள்ளதுடன், இத்திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து ''வாழ்ந்து காட்டுவோம் திட்டம்'' எனும் பெயரில் தீவிரமாகச் செயல் படுத்தி, மகளிர் சமுதாயத்திற்கு உரிய பயன்கள் உடனுக்குடன் கிடைக்கவும் ஆவன செய்து வருகிறது இந்த அரசு.

→

**சமுதாயத்திற்கு – மொழிக்கு, பாடுபடுகின்ற பிள்ளைகளாக இருக்க வேண்டும்**

ஆனால் பெறுகின்ற பிள்ளைகள் நாட்டிற்கு, சமுதாயத்திற்கு, மொழிக்கு, ஊருக்குப் பாடுபடுகின்ற பிள்ளைகளாக இருக்க வேண்டும். அந்தப் பிள்ளைகள் வீரம் உள்ளவர்களாக இருக்க வேண்டும், துணிவுள்ளவர்களாக இருக்க வேண்டும். அந்தக் காலத்திலே – நான் சொன்னேனே சங்க காலம், அதற்குப் பிறகு வந்த இடைக்காலத்தில் நாம் குழந்தைகளை யெல்லாம் கோழைகளாக வளர்த்து விட்டோம்.

நம்முடைய குழந்தை அழுதால் தொட்டிலில் தூக்கிப் போட்டு தாய் என்ன செய்வாள் ? தூங்கு, தூங்கு என்று சொல்வாள், மீண்டும் குழந்தை அழுதால் உடனே ஐந்து கண்ணன் வருகிறான், தூங்கு என்று மிரட்டுவாள். ஐந்து கண்ணன் என்றால் அவன் ஒரு பயங்கரமான ஆள், அவன் வந்தால் உன்னைப் பிடித்துக் கொள்வான் என்று பயமுறுத்துவாள். குழந்தை உடனே பயந்து கொண்டு தூங்கி விடும். இப்படியே குழந்தைகளை பயமுறுத்தி இரண்டு கண்ணன் வந்தால்கூட குழந்தை பயப்பட ஆரம்பித்து விடும். அப்படிப்பட்ட நிலைமை இப்போது வந்து விட்டது.

அதே மாதிரி பேய், பிசாசு, பூதம் – இவைகள் எல்லாம் கற்பனைகள், பேயும் அல்ல, பூதமும் அல்ல, பிசாசும் அல்ல. நாமே சில நேரங்களில் பேயாக மாறுகிறோமே தவிர பேய் என்று புதிதாக எதுவும் கிடையாது. சில பெண்கள் பேயாக மாறுவார்கள். சில ஆண்கள் பிசாசாக மாறுவார்கள். ஆகவே, நாமே அப்படி மாறிக் கொள்வதைத் தவிர புதிதாக அப்படி எதுவும் கிடையாது. இரவிலே மரக்கிளை ஆடினால், பார் பேய் ஆடுகிறது என்று வேண்டுமென்று குறும்புக் காரன் சொல்வான். அதை நம்பி பேய் இருப்பதாக நம்பக் கூடாது. பாரதி பாடியிருக்கிறார், பாரதிதாசன் பாடியிருக்கிறார், எத்தனையோ பேர் சொல்லி யிருக்கிறார்கள், பேய், பூதம், பிசாசெல்லாம் கிடையாது. அதெல்லாம் மனப்பிரமை தான். நம்முடைய குழந்தைகளுக்கு அதையெல்லாம் சொல்லிக் கொடுக்கக்கூடாது.

குழந்தைகளுக்கு என்ன சொல்ல வேண்டும் ? பேய், பிசாசு, பூதம் எல்லாம் இல்லை, நீ துணிச்சலாக இரு, எதற்கும் பயப்படாதே என்றுதான் சொல்லிக் கொடுக்க வேண்டும். குழந்தை எதற்குப் பயப்பட வேண்டும் ? தீமை செய்ய பயப்பட வேண்டும், நன்மை செய்ய பயப்பட வேண்டிய அவசியமில்லை. நன்மைக்காக எந்த ஒரு குழந்தையும் பயப்படத் தேவையில்லை, தீமை செய்யத்தான் பயப்பட வேண்டும். அதைத்தான் நம்முடைய குழந்தைகளுக்கு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். அப்படி கற்றுக் கொடுக்கின்ற அந்தப் பேச்சையும் என்னுடைய அருமைச் சகோதரிகள், தாய்மார்கள் இன்று முதல் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கே பல்லாயிரக்கணக்கிலே திரண்டு என்னை மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்த்தியிருக்கின்ற உங்களுக்கெல்லாம் என்னுடைய அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடை பெற்றுக் கொள்கிறேன்.

**– திருச்சியில் 3-2-2001 அன்று நடைபெற்ற மகளிர் சுய உதவிக்குழுக்கள் மாநாட்டில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை.**

★ ★ ★

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மகளிர் சுயதொழில் தொடங்கிட நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்திடும் வகையில், இந்த அரசினால் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம், பங்காரு அம்மையார் மகளிர் திட்டம் போன்ற திட்டங்கள், குறிப்பாக பங்காரு அம்மையார் மகளிர் திட்டம் கிராமப்புற மகளிரின் பொருளாதார வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தை அளித்து வருகிறது. அத்துடன் மகளிரின் பன்முகத் திறன்களும் பெருகும் வகையில் ஒரு சிறப்பான திட்டமாகவும் வடிவம் பெற்றுள்ளது. இதனை அண்மையில் மதுரை, திருச்சி, கோவை ஆகிய மாநகரங்களில் நான் கலந்து கொண்ட மகளிர் மாநாடுகளில் கண்கூடாகக் கண்டு வியந்து பெருமிதம் கொண்டேன். 11 இலட்சத் திற்கும் மேற்பட்ட மகளிர், சுயஉதவிக் குழுக்களில் சேர்ந்துள்ளனர். இவர்களில் 1.72 இலட்சம் மகளிர்க்கு 93.13 கோடி ரூபாய் வங்கிகள் மூலம் சுயதொழில் செய்திட கடனாக வழங்கப்பட்டுள்ளது என்பதும், இம்மகளிர் 68.71 கோடி ரூபாய் சேமித்துள்ளனர் என்பதும் இத்திட்டத்தின் மகத்தான வளர்ச்சியையும், மகளிரிடையே இத்திட்டத்திற்கு உரிய வரவேற்பையும் வெளிப் படுத்துகின்றன.

இத்தகைய திட்டங்கள் எல்லாம் தொடர்ந்து நடை முறைப்படுத்தப்படவேண்டும் தமிழக மகளிர் சமுதாயம் மேலும் மேலும் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டு, மதிப்பும் மரியாதைகளும் பெற்றிட வேண்டும் என்னும் உணர்வுடன் வருங்காலத்தில் ஜனநாயகக் கடமைகளை ஆற்றுவதற்குரிய சிந்தனைகளை வளர்ப்பதாக இந்த ஆண்டின் ''உலக மகளிர் நாள் விழா" தமிழகம் முழுவதும் சிறப்புடன் நிகழ்வதாகுக. தமிழக மகளிர் சமுதாயத்திற்கு என் மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906 தொலையச்சு : 5368927


மாவட்ட ஆட்சியர் ஆலுவலகக்கட்டிட
திறப்பு விழா தேனி



தமிழரசு
பதிவு எண். M.8676
Licence No. G/TN/CPMG/190/WPP-130
மேலூர் - தும்பைப்பட்டியில்
அரசின் சார்பில் கட்டப்பட்ட
தியாக சீலர் கக்கன் மணிமண்டபத்தை
13-2-2001 அன்று முதல்வர் கலைஞர்
திறந்து வைத்தார்.
தியாக சீலர் கக்கன் மணிமண்டபம்